[illegible]

T. D R C 3205
R·R·No 104-3·77

892 MAR/K
M77
19059

ஸ்ரீராமஜெயம்.

# இராம நாடகம்.

சீர்காழி

## அருணாசலக்கவிராயர்

பாடியது.

இஃது

சென்னைக்கல்விச்சங்கத்துத் தமிழ்ப்புலவர்

திரு - வேங்கடாசலமுதலியாரவர்களாலும்

சங்கீதசாஹித்திய வித்துவாமிசராகிய

பொன்விளைந்தகளத்தூர்

இராமசாமிநாயகராலும்

முன்பதிப்பித்த பிரதிக்கிணங்க

இராஜசேகரமுதலியாரால் - இயற்றிய

இராமாயண ஓரடிக்கீர்த்தனையுடன்

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஈசுவர - ௵.

O-,892 MAR2R
M77



# இராமாயண ஓரடிக்கீர்த்தனை.

விருத்தம்.

ஏர்கொண்ட நான்மறையின் பொருளையெல்லாம்
இனியதமிழாச்செய்து தொண்டர்க்கீந்த
பார்கொண்ட குருகூர்வாழ் சடகோபமுனிவர்
பதமலரைப்பணிந்து திருச்சென்னைமேவுந்
தார்கொண்ட புயாசலன் ஒப்பில்லாவீரன்
சதுரன் அயன்றொழும் ராமச்சந்திரமாலின்
சீர்கொண்ட திருஅருளின்பெருமைதன்னைத்
தேறவேன்மனமகிழ்ந்து நான்கூறுவேனே.

தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கோதண்ட தீக்ஷா குருவே—பக்தர்களிதய
கோகனகமலர் மருவே.

அநுபல்லவி.

தாதன்பொமலர்ச்சோலை விண்கற்பகத்தின் மேலே
தழைக்குஞ்சென்னைநகர்வாழ்-ஸ்ரீவேங்கடேச மாலே
பூதலமிலுன்னைப்போல்-ஆவிஉண்டோருக் காலே
போற்றும்பாகவர்க்கின்பந்தேக்கச்செய்தாய்பரி வாலே

புத்தமுதத்தினை நற்சுரருக்குமுன்
உற்றிடமிக்க அளித்திடுசற்குண
பூஜிதம்பெறு ராமசந்திர
னேசவுந்தர ரூபரஞ்சித
புகழ்மலர்மகள் தழுவிய அதிபுஜபல
மிருதுபரிமளமுறு துளவணிரவிகுல
புண்யகீர்த்திஅகண்ட பகிரண்டங்களைஉண்ட
திவ்யனேஅகண்ட புகழ்கொண்டபிரசண்ட (கோதண்ட)

# இராமாயண ஓரடிக்கீர்த்தனை.

### தசரதன் சுதனுதித்து.

தரணிமன்னர்மன் னவன்அதிபுஜபல (தசரதன்)
தகைமைவாய்ப்பஉயர் மனுநெறிமுறைகொடு
தருமயோத்திநகர் அரசுசெய்ரவிகுல (தசரதன்)
சர்ப்பராஜசய னத்தின்மீதுதுயில்
உற்றுவிறுபர வஸதுவானதொரு
தசமுகனால்இடர்படும் உயர் அமரர்கள்
நசையுடனேதுதி தாநாஉருவொடு (தசரதன்)
நார்புனீசனும்விண் சூரியனும்வேதனும்
மாமகவானும்அவன் பாலனுந்தேயுவுஞ்
சீர்அனுமான்சுக் ரீவனர்சாம்பவன்
வாலிஅங்கதனீலன் ஆய்வாவானவர்
வானரங்கள் ஆய்மண்ணினில் வந்திடச்செய்துமட்டி
தானவர்குலத்தைவிண்ணணிற் சேர்த்திடக்கங்கணங்கட்டி (தசர)

சங்குசக்கரமு மங்களத்தினில்மி
குந்தஅற்புத அனந்தநற்பலனும்
வந்துதித்திடநினைந்திடத்தரையில்
சம்ப்ரமத்தில்இல குஞ்சுமித்திரையின்
தன்னிடம்லட்சுமணன் சத்துருக்கனும்கைகேசி
யின்வயிற்றிற்பரத னுந்தம்பியர்ஆய்சனிக்கத்
தான்எண்ணிக்கோசலை வயிற்றிற்சித்திரைமாதம்
ஆனநவமிபுனர் பூசநக்ஷத்திரநாளில். (தசரதன்)
சந்த்ரவிம்பமுக முங்கிர்பைவளர்தரு
சின்றகன்களுநெ டுஞ்சிலைஎனுநுத
லுஞ்சிறந்தபவ ளந்தனைநிகரத
ரநதருந்தளிர் குண்டலம்அணிசெவி
களுநிலவெறிகமு கிணைநிகர்களமொடு
விரைகமள்துளவணிபுயமலைகளும்அலர்
கமலமலர்அனைய காமலர்களுநெடு
உலகம் அதனைஉ ணும் அழகியவயிறொடு
தாரணிமார்பும்வன் டாமரைத்தாள்களுஞ்
சாமளமேனியும் ராமநன்நாமமும்
தயங்க அருமறை உணர்புங்கவர்மிகு
ஜெயம்விஜயபல எனமங்களமொடு (தசரதன்)

தசரதன்சுதனு தித்து-தனுவிற்கதித்து
தாடகைப்பாவியை வதைத்து
விசுவாமித்திரனுடன் மிதிலைக்குச்செல்லும்
வேதச்சிரத்தில்நடம் ஆடும்சிர்பாதப்
இசைவுறப்பட்டள்வில் அகலிகைஎன்னு
எழுந்தாள்கல்லுருமாறி இதுஅல்லாமல்மன்
இந்த்ரபோகசனகன்வில்லைகண்டு
துண்டமாகவொடித்தான் அதைக்கண்டு
சுந்தரிசீதையைத் தந்தனனேமகிழ்
கொண்டிடவேமண மானபின்னேவரு
கின்றவழி அதனிற் பரசிராமன்வில்மு
றிந்திடவேசெய்து சனகியொடயோத்தி
வந்துகூடிகல சுந்தனல் அரசி
ழுந்துநீடுபுகழ் தம்பியோடுமலர்
மங்கைசீதைபதம் நொந்துவாடிடவர
கங்கைமாநதி கடந்துவாசமலர்க்
காவிரிதருசித்ர கூடபர்வதத்தில்
மேவிபரதனுக்குப் பாதுகைஅளித்தபின்
விரிதண்டகவன வழிகொண்டதில்அத்
திரிஎன்றிடுதவ முனிவன்கிருபைபெற
திட்டபின்புவி ராதன்இருகைஅற
முட்டவிண்டிட வேசெய்துசரபங்க
முனிவன்ஆசிர மந்தனிலேவழிற்
சனகியொடேய்தி இந்திரனபோனபின்
தண்டகாரண்ய வாசிகள்படுதுயர்
தன்னடனேர்இடர் தீர்தரஇனைஅற
கருணைகொண்டேஅந்த வனமதிற்பத்து
வருடம்பின்றுவரும் வழியிற்சுதிட்ட
மாமுனிவரய்கொண்டே அகஸ்தியன்றனைக்கண்டு
சேமவிற்சரங்கொண்டு துதித்தவன்றனைவிண்டு
சென்றுசடாயுஉற வாடப்பஞ்சவடியில்
நின்றுவிடாதமய லோடுகெஞ்சியபெரு
நீலிசூர்ப்பணகை காதுமூக்கரிந்து
சாலனர்க்குநிகர் ஆகப்போர்க்குவந்த
கரதூஷணத்திரி சிரசன் ஆதியரை
அரைநாழிகைதனில் மாவிநாடதனில்

# இராமாயண ஓரடிக்கீர்த்தனை

அனுப்பிமான்உரு வாய்வந்தமாரீ
சன்கையாற்பிடித்திடவேபோன
தருணங்கண்டிராவணன் தபசிபோல
விரைவில்வந்துசீதையை நிலத்தினோடு
மேவஎடுத்துச்செல்லும் போதுசடாயுவின்
ஆவிஇனைவதைத் தசோகவனத்தினில்
அரியசிறையில்இட வேசானகிதன்னைப்
பிரியும்அதிகதுயர் ஆலேசினமன்னனிப்
பின்மதிக்கதந்தனைச் சொர்க்கம்ஏற்றிச்சவரி
சொன்னபடிதங்கொடு சுக்கிரீவனைத்தனது
சொந்தம்ஆக்கி அக்ரமமிகுவாலிதனை.
முந்தவாட்டிவிக்ரம அனுமானைஅவனி
மொய்த்தகுழற்சீதைதனைத் தேடவிடுக்கஅவன்
உத்தமசம்பாதிதனால் உள்வறிந்துகொண்டு
ஒப்பில்லாதவிஸ்வ ரூபங்கொண்டுமயேந்திரம்ஏறிச்
செப்பமாய்க்கடலைத்தாண்டிலங்கையிற்சேர்ந்து
திடமுறுலங்கணியை முதம்படவிட்டுச்சீதையைக்
கடிபெறுலங்கையெங்கும் தேடிக்காணுமப்பின்பு
காவலமிரும் அசோக வனத்திற்றிரிசடையன்பு
மேவக்காத்திடவட முகம்பார்த்திருக்கக்கண்டு
விஜயகோதண்டராம தூதன்நானென்றுசொல்லி
நகைதருங்கணையாழி கொடுத்துத்திடமுங்கூறி
நாயகிசீதைதந்த சூடாமணிகைக்கொண்டு
தியகிங்காரன்வப தாயிரம்பேர்களொடு
செழித்தஅசோகவனத்தையும் அழித்திடக்கண்டெதிர்த்தக்
கொழுத்தராக்ஷதசேனை யொடுசம்புமாலிமிகுத்த
கொடுமைசெய்பஞ்சசேன திபர்களும்அட்சதனும்
மடியநாம்பதுவெள்ளம் அரக்கரோடிந்திரசித்தன்
வந்துபோர்செய்யஅனு மந்தன் அந்தகளத்தைச்
சிந்துசிந்தாக்கிஇந்திர சித்தன்தேரை அழித்துச்
சிலையைமுறித்துமுடித் தலையைஉடைக்கஅவன்
வலியப்பிரம்மபாசத்தால் கட்டராவணன்அப்போ
வாலில்நெருப்பையிட அந்தநெருப்பைலங்கையின்
மூலைக்குமூலை இட்டுக் கொளுத்திநீறுக்கிவிட்டு
உளமகிழ்கொண்டுமீண்டு வந்துசாமியைச்சேவித்து
அளிதிகழ்சூடாமணி தரக்கண்டுமகிழ்ந்தபின்பு
அடல்மிகுத்தஎழுபது வெள்ளவானரப்
படையும்ஒப்பில்அதின் அதிபருமீடிய

பரிவொடுதென்கடல் அருகில்நிறைந்தபின்
சரணம்அடைந்துநின் துணைஅடிதந்தருள்.
சாமிஎன்றவி பீஷணன்றனக்குலங்கா
பூமிதந்துவிகாதஞ் செய்தவருணன்மேற்
பொற்கணைவிடுத்தவனை வரச்செய்துபுஜபல
சித்திரக்கவிஇனங்கள் அதைக்கொடுவிரைவொடு
சேதுபந்தனஞ்செய்வித்து நீளகடலலைகடந்து
மாதிரம்பயந்திடச்செய் ராவணன் இலங்கைதன்னை
வந்துமுற்றிகைசெய்து கொண்டுதம்பிஅங்கதன் மீதும்
முந்துவிக்கிரமஅனுமந்தன் அம்புயந்தன்னிலும்ஏறி
மூதண்டந்திகில்மேவி அதிர்ந்திட
கோதண்டந்தனில்நாணேற்றிக்கொண்டுற
நூறாகடல்மெருவிட நெடுநீலம்அதுதனை
உருசுமைஎனத்தூறும் உரகன்உடல்நெளிய
உயர்மதிகதிர்வழிபிசகிட நெடுவரை
அயர்தரஉடு இனம்அதுதரையில்உதிர
அணிரதகஜபரி பரிசனவகைமிக
அணிஅணியொடுவர அதிவலிமைகள்சொலி
அனல்கக்கிடும்அத்திரசத்திரமுழு
கனசக்கரம் நெட்டையில்பட்டயமொடு.
கதிர்வீசுங்கதிர்முத்தலை சூலங்
கதைவார்அஞ்சிலைகைக்கொடுதாளங்
காளஞ்சின்னந்தாரைகள்மத்தளபேரிகள்பலவித
மேளம்பின்னும்நாகசுரத்தொடுபூரிகைஒலிதர
வீரராவணன்தேரில் எதிர்போர்க்களத்தில்வந்து
சேரவேஅவன் சேனைவீரர்யாரும்போரில்முந்த
தியவச்சிரமுஷ்டி துன்முகன்சுபாரிசன்
மாயப்பிரகஸ்தன்கெட்டவன்மனங்கொள்நீசனை
வானரவீரர்கள்கொல்லராவணன் இவனைவெல்ல
சானகிமணாளன்வில்லில் சோனைமாரிஎன்றுசொல்லத்
தகுஞ்சரங்களைவிட்டு அவன்தேர்வில்லைமுறித்துத்
திகழ்மணிமுடிபத்தும் தரைமேல்உருளச்செய்து
திடமொடுசண்டைசெய்ய நாளைவா இன்றுபோவென்று
விடைதரமனம்நொந்து தனியாய்ப்போய்லங்கைசேர்ந்து.
வெற்றிசேர்கும்பகர்ணனை நித்திரையில்இருந்தெழுப்பி
அத்தருணத்தில்சண்டைக்கு விடுத்திடஅவன்களத்தை

# இராமாயண ஒரடிக்கீர்த்தனை

அடுக்கராகவன் அம்பு தொடுக்கவேகும்பகர்னன்
நொடிக்குள் காலுங்கையும் போய்ப்படிக்குள்ளே முண்டமாகி
நொந்துபின்சாடிதனைச் சிந்தனைபேசி
இறந்ததைராவணனறிந்ததிகாயனை
அனுப்ப அவன்பரிசனத்திரளினொடு
முனைத்தலைவர்களுஞ்சமர்க்களம்அணுகி
முச்சிரத்தனையமஸதன் கும்பன்தேவாந்தகனும்
அச்சமற்றரணமஸதன் யமபனநராந்தகனும்
அனுமான்முதலோர்கையால் மடிந்திட அதிகாயன்
சினமாகிஇளையோனுடமர்செய்துமுடிவாகச்
செய்திதெரிந்திந்திர சித்தன்தேரிலேறி
வெய்யசரங்கள்மொய்க்கப்போரில்வீறி
விஞ்சுசுக்கிரீவன்பனசன்சாம்பன்அனுமன்
வஞ்சம்அற்றநீலன்முதலினோர்களதனையும்
வாட்டக்கண்டுலட்சுமணன்தன்வில்லினிற்சரம்
பூட்டஇந்திரசித்தன்ரதகஜபரிசனம்
புரவியாவும்அம்மாண்டுதானும்மிகமெலிந்து
இரவில்நாகபாசத்தைவைஅதனாலெநொந்து
இலக்குமணன்முதலோர்களத்திற்படுக்கராமன்
அக்கணமவ்விடமேவிதிகைத்துவருந்தும்வேளை
அடல்சேர்கருடன்வர நாகபாசந்தெரித்து
விடயாவரும்எழுந்து போரில்வீறிக்கதிக்க
மிதம்அற்றசேனைசூழ உக்கிரங்கொண்டுவெந்தெதிர்த்த
மதம்உற்றசூரியகேது வச்சிரதந்தன் பெரும்பக்கன்
மாலிசிங்கன்பேயன்பரிதிக்கன்னனையும்
ஆலம்அஞ்சுகந்திய சுருதிக்கன்னனையும்
ஆர்க்குங்கவித்தலைவர் மாய்க்கராமலட்சுமணர்
தாக்கமகராக்கன்னன் அக்கினிகேதுமடிய
தசமுகன் அதைத்தெரிந் திந்திரசித்தனைவிட
வசைகொள்ளும் அவன்காம்பவந்துலட்சுமணனுடன்
வாதுசெய்யஇளையோன் அப்போதசரமாரிவெய்யன்
மீதில்எய்ய அதனால்அப்பாதகன்திரேகம்நைய
விண்ணில்மறைந்துதன் ஊரைச்சேர்ந்தருந்தி
பன்னிவெல்லயென்னி போருக்ககப்பனொடு
பாவிமகோதரனை ஏவஅவர்கள்களம்
மேவிபலத்துடனேராவில்அமர்புரிய
வீறும்அனுமான்தன்னால் அகம்பனநிகும்பன்சிரங்களுருண்டபின்
சீறும்மகோதரன்கைச்சரங்கள் அழுந்திடவருந்திஇளையவன்

திகைக்கும்வேளையில்இந்திரசித்தன் அங்குவந்துசேர்மித
மிகுந்தபிரம்மாஸ்திரம் விடுக்கதம்பி முதலோர்சாய்ந்திட
வித்தகஸ்ரீராமன்கண்டு மெத்தவும்ஆகுலங்கொண்டு
சித்தப்பிரமைஆக அன்றுஉத்தம் அனுமான்சென்று
செழித்தசஞ்சிவிபருவதத்தைக்கொண்டுவந்தபின்
பிழைத்தனைவரும் போருக்கெதிர்க்கஇந்திர சித்தெனனும்
பித்தன்மாயாசீதையை வெட்டிநிகும்பலையா
கத்தின்சாலைசேர அதைத்தெரிந்திளையவன்
கணைமழைபொழிந்தரக்கன் செய்யும்யாகமழித்து
கதனமதில்அவன்சிரத்தைக் கொய்துதேவர்துதிக்கச்
சாமிபாதநேரில்வைக்கராவணனறிந்தன்மேலமர்செயவிட
பூமிபாரமானதுஷ்ட மூலபலங்கள்ஓர்ஆயிரவெள்ளமும்
போரிலேறுதல்கண்டு வானர வீரரோடவேஒன்றியாகிய
ஸ்ரீராகவன்சண்ட மாருதம் ஆகிநீசர்கள்பஞ்சுபோலேகெட
திவ்வியமோகனாஸ்திரம் ஏவிஎங்கும்ராமனாகத்தோன்றிட
வெய்யர்யாரும் பார்க்குள்தாவிதங்களிற்றுங்களே மாண்டபின்
வேதனைசெய்யும் ஜாதககாதக
பாதகனாமகோதரன்போர்செய்து
படையும்போய்ராகவன் கைக்கணை தன்னால்ஆவிவிண்டு
மடியவேராவணன் தூர்ச்சுனம்மென்மேலுங்கொண்டு
வந்துபெருஞ்சண்டைசெய்யச்சாமிராவணனைப்பத்து சிரத்தையும்
விந்தைஅம்புகொண்டுகொய்யக்கொய்யமீண்டும் மீண்டுமுளைக்க
வேளையிலேஇதமாகவிரதாபகு (அப்
ஞானவிபீஷணன்ஒதும்உபாயத்தி
னால்இளையதுபிரம்மாஸ்திரம்அதனைவிட்டு
ஆலம்அனையவிழிராவணன்நாபியில்வைத்த
அமிர்தகலசத்துடன் முடிகள்சிதறச்செய்து
இமயவர்முனிவர்கள் படுதுயரம்ஒழித்து
இளையவ்எழிற்சனகிதியினிற்குளித்தபின்பு
துணைவன்கவிப்படை விபீஷணனுங்கற்பிலங்கு
தூயசீதைதன்னொடுபுஷ்பக மிதிலேறிமுன்வினைமுற்றிலும்.
மாயவேசெய்கின்ற மகத்துவமானசேதுஅண்டையில்ஒப்பற
மாதேவம்கண்டு சீராட்டிஇறைஞ்சி திரும்பிமுன்வந்தவழிகளை
ஓதேவிககன்பொடுகாட்டி மகிழ்ந்துநடந்து பனைருந்தவ நிலை
நிகழும்பரத்துவாசன்மடத்தினிற்சேர்ந்தபின்இடத்துடன்அனுமானை
புகழும்பரதராஜன் இடத்திற்கேவிட நொடிக்குள்ளே அவன்போன

போதுசாமிவரவைக்காணே னென்று பரதன்
ஓதுந்தீயினில்விழப் போகக்கண்டுஅநுமன்
மோதிரங்கொடுபதருதோருபதவாழ்மனிமடம்வந்துசேர்ந்தாரென்றும்
ஆதரவுடன்சொல்லுங்கூறிபரதனிடம்விரைவில்விடைகொண்டுஅஞ்சனேய
அக்கணந்திரும்பிலோகரக்ஷகன் உன்னுடம்பேலோக்க ன்
ளைக்கனைம்முந்தி வந்தோர்க்கபயந்தக்கொண்ட வண்ணக்கூட
வைத்துவர்தம்பொசித்துப்புஷ்பகமதிற்கதித்து
சத்யபாதன்துதிக்கவுத்தமருகன்மதிக்க
தங்களமேவியஅயோத்திநகரில்வந்து
திகழும்மூவுலகம் போற்ற ஒளிசிறந்த
சித்திரமிருக்க சிங்காசனமீதில்
அற்புதம்உற்ற செந்தேன்மொழியாள்எம
தன்னை சிதையோ டமர்ந்துபெரிகையு
மன்னுதாளமிகு தங்கநாகசுர
வாத்தியம்ஒலிக்கவரு சுரர்மருமலர்கொடு
காற்றிசை இறைக்கவரு முனிவர்கள்மலர்முடி
நரபதிகளும்வா னரபதிகளும்பூ
சுரர் துதிசொலவே கவரிகள் அருகே
தூயலட்சுமணனுடன் சத்துருக்கனும் வீசிட
நேயம்உற்றபரதனுட் களித்திடப்பேசியே
நீலவெறிதருசந்திரவட்டக்குடைகவிக்க
பலமிகு அனுமந்தன்னைத் தன்னை அடிபிடிக்க
பகர்வசிஷ்டனால்மகுடாபிஷேகங்கொண்டு
ஜெகதலத்துள்ளோர் துதிபேசச்சேர்வைதந்த
தினதயாநிதியே அடியார்வனா
மேன்மையாய்த்திகம்வாழ்வரதாஉயர்
வேதாஅரி அனைமேவுவினோதா
தாரகாசுரர்முதலோர் துதிபாதா
சதுரனேசரா சாங்கனேத்தருஹரா
துதிசெய்ராஜசேகரன்தமிழ்க்கனுகூலா
சுமுகசுகுணசுந்தராங்ககுபிர்தய
விமலவிபவவிந்தையோங்கிடமிகுஜய.
கோதண்டதீக்ஷாகுருவே—பக்தரிர்தய
கோகனகமலர் மருவே

இராமாயணநாடகக்கீர்த்தனை

## உதவிச்சிறப்பு

ஸ்ரீ சிற்றேரி
அருணகிரிமுதலியார்பேரில்
கருடப்பிரியா ராகம்–ஆதிதாளம்.

பல்லவி,

அருணகிரிவள்ளலைப்போலே இசை அடைபெற்றோர் இந்தபுவிமேலே

அநுபல்லவி,

தெருணமிருந்திடு ராகசிற்றேரிவள் ளுபகாரன்
அருளுஞ்செங்குவளைத் தாரன்–அற்புதம சேர்வீரன்
ஆழிசூழுலகம் ஏழும்மதித்திட உத்தம
வாழ்வுள்ள உயர் குலவதிலேக்கப்பெற்ற—அருணகிரி

சரணங்கள்.

சன்னைப்பாருருசலப் பண்புறுகவிருன்சொல்
திண்பெற்றாமகரட கம்பெருகப்புவிமேல்
தன்திரியத்தன் மதித்துப்-புலவர்களால்
கன்னைப்புகழ் சோதித்து-இசைதர்ளங்கள்
முன்னி னுடையோர்கள் அமைத்து-நற்சரஸ்வதி
என்னுமைஅச்சினிற் பதித்து-விளங்கச்செய்து
அத்திரம்தருனை யைத்தரும்அற்புத சொற்புகல்விற்பனம் உற்றிடு
சகன்மீதுமலர் விசயகந்தமாரன் (கொற்றவன
மாசிலாதபிரி புநிலைதமிகும்குபோன்—அருண
தேசமையுபசெங்கோல்வி லாசமாநடத்தும
ராசர்களுமபுகழ்ந்து பேசவாழும்புருஷ
திநகமா நயகெம்பிரன்-குணோநற்குபோர்டில்
தனிய விலகாரன-பலபாஷாப்பிர
சங்க வைய்யாரன-பலம்கொள்சது
ரங்கத் எவில்வீரன்-நினைவிசிஷ்ட
அத்துவிதப்பரி சுத்தன்எவர்க்கும்அனைக்கு நிகர்த்தமனத்தன்அனைத் (துல
காதிபனங்க சோதிமுடிபுனைநாயன்
வேதமும்துதிசெய் மாதவனைநினைக்கயன்—அருண
நலத்தினில்உயர்ந்தகன் லைத்தைஉற்றிடும்மங்கா
குலத்தில்அவதரித்து சலஞ்சனைம்உற்றமிரு

சக்கது — கைவிலாசன்-முத்துநாயக
வைத்தில்லை — இதயாலன்-மாதர்மகிழ்வி
சித்திரஜன் — இதவேலன்-செல்வம்நிறைந்த
நிக்கியன் — கனிவன்-மனநிலைநாம்
நிர்ப்பயமுடன்நிதிசந்சனாயிக்கவியப்பின் உரைத்துமதிக்கும்அருட்க
நீடுமேருவை — கவிபுயகத்தரன் — டன்
கடிவாதபுகழ் — உடையகந்தரன்—அருணகி

## உதவிச்சிறப்பு

இ௸ - மன்றுடி

## வெங்கடசுப்புராயபிள்ளைபேரில்

யோல்மெய்டு

தரு-பைரவிராகம்-அடதாளசாப்பு,

பல்லவி

இப்போதே அழைத்துவா போடிசேடி நீபோய்,

நூப்பில்விரசாயிசெய்த — லப்பமன்னல்லாமுருக்கொ
டிப்புலிமில்வந்தநேனும் — சப்பராயமகிபனை—இப்

ஆவலுடன்பாடிவரும் — பாவலர்க்கருள்கானை
மாலைமுடனுடையோனை — கோலசிங்கமணியை—இப்

நீடியபுகழ்சேர்அயர் — பாடிவரான்ணைவன்அடி
காடிமனர்குழுதினை — பாடியகுருநாதனை—இப்

ஒங்குபுகழ்கொண்டமன்னி — பரங்கிபில்டிப்டிமானேஜர்
வேங்கடாசலசெட்டியார்பாங்கனைஇன்றீந்கென்முன்னே—இப்

முத்தமிழ்நூல்உயர்வு — பெற்றபுலவோர்கள்இடர்
உற்றசமையந்தில்அது — மித்துவெய்சகாயனை—இப்

ஆசுமதிகவிகுழும் — பார்கள்மேற்புகழும்வாழ
பூரியில்வாழ்ந்திடும்முன்னே — காரனைஉதாரனை—இப்

செல்வப்புரிமன்னவர் — கன்னயகுலம்உடைமன்றி
சென்னல்சூழ்சின்னதன்னில்வாழ் — உனைதடைத்தியோகனை—இப்

மாபாரிகளைக்கொண்டேதுப் — பூபாலனம்செய்தேவ
நீபாலன்லவாக்கந்த — கோபாலகுலமணியை—இப்

## உதவிச்சிறப்பு

இ௸

அக்கம்மாள் பேட்டை

## வேங்கடாசலசெட்டியார்பேரில்

தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

செய்தால்புலவோர்களுக்கேசகாயம் - செய்துகவிபெறதல்ஞாயம்

அநுபல்லவி

செய்பேருளம்சேர் அக்கம்மாள்பேட்டைவாழ்
செயமுத்துவேங்கடா — சலசெட்டியார்குமாரா
மெய்யேஉருக்கொண்டெங்கனேன்னவந்த
வேங்கடாசலதீரா — ஓங்குபுகழ்கொப்பீர
வீரஅதிசையர் — மனம்மகிழ்மாரா
காரார்கரம்உள — கர்ன்றுவதாரா—செய்

சரணங்கள்,

தேயமிவைதனை எதயிவ்சிபசங்கள்
செய்தசகாயந்தன்னை — மதித்து-வணங்கி
சிறந்தகன்றாவின்அவன் இறந்தும்இராமலே
செய்தாளெபாயிரத்துள்ப் — பதித்து-பின்னும்

இதில்அருணகிரு நாதருக்குபகாரம்
செய்தாலைமகிழ்ந் — துதித்து-பிரபுட
தேவமகாராயனும் மேவித்திருப்புகழில்
திகழ்ந்திருக்கப்பெற்றான்பார் — கதித்து-காணும்

கோதிமொழிகள்ராக — வனைப்போல்மொழியும்சீலா
குணசிகாமணியென — எவரும்புகழும்மேலா
குணமில்பாமலோ — பெயர்பிரதிகூலா
குணம்உடையபுலவர் — குலபரிபாலா—செய்
சங்கையில்லாமல்அந்த கொங்கராயர்முன்செய்ச
காயத்திலும்அல்லவோ — நற்றார்-விசிபெத்தாரய்

சந்திரசூரியர் உள்ள அளவும்தம்புகழ்நிற்க
சயபாரதத்திற்பாடப் பெற்றார்-கார்போழ்சொரியும்
அம்கைஉடையதிரு வெண்ணெய்நல்லூர்ச்சடை
யப்பமுதலியாரும் கற்றார்-கம்பருக்குமுன்
அகம்மகிழ்ந்திட்டவேச காயம்செய்தேராமா
யணத்திலனன்றைக்கும்நிலை பெற்றார்-ஆதலினாலே
மங்களம்ஆம்செங்தோன்றி மாலைமருவுமமாயா
வைசியகுலம்இலங்க வங்கதித்திடும்சீபா
மதுரம்ஒழுகமிருது மொழிபகர்பூபா
வரும்இரவலர்மகிழ அருள்பிரதாபா
அழிவில்வேதங்கள்ஓதிக் கிழிஅறுக்கிட்டபெரி
யாழ்வாருக்கோர்சகாயம் புரிந்தா-பல்லாண்டில்
அகன்றஉலகிலோருஉள்ளளவும்செல்வநம்பியும்
அமர்ந்திருக்கின்றான்புகழ் விரிந்தா-எங்கும்நிறைந்த
வழுவில்மாயவன்பாலவாள் வலியால்மந்திரம்கொண்ட
மங்கையர்கோனுக்குமுன் பரிந்தா-சகாயம்
மகிழச்செய்தேபல்லவ ராயன்திருமொழியில்
வாழ்ந்திருக்கின்றான்நீபார் தெரிந்தா-இன்னமும்சொல்வேன்
ஒழிவில்லாமல்பல வோருக்களித்துச்சொர்ணம்
ஓங்குகவிபெற்றாரோ உலகிற்பிரபுக்கள்முன்னம்
உடல்பொருள்களனைவையும் நிலையிலைபின்னம்
உறுதிஇதுவேவேறு அறியிலைஇன்னம்—செய்
நவமன்மதனைப்போல்உருவம் இருந்தென்சௌபாக்கிய
நலம்இருந்தென்னென்னுள்ளம் வைத்தாய்-பாடும்
நாவலமைஉடைய் பாவலர்க்களித்துப்பா
நாம்கொள்வோம்என்றெண்ணம் உற்றாய்-இந்தப்
புவியில்இப்படிசெய்தேகவிகள்பெற்றார்என்றுன்தன்
புத்தியிலேனும்ஆலோ சித்தாய்-நீயும்
புகழ்பெறஎங்கள்மனம் மகிழ்வுறச்செய்தெங்களால்
புத்தமுதம்போலக்கவி பெற்றாய்இனிஓர்
சலிபில்லாமனிடர்இப் புவிமேல்இருந்துமின்ன
தனைகனகவைதுவா கனம்அரசபோகித்தென்ன
தரியினில்உதவிசெய் பவர்களில்உன்ன
அரசோஇனியவர்கள் ஈனப்புகழ்துன்ன—செய்

இக்கீர்த்தனைபாடிய

## அருணாசலக் கவிராயரது சரித்திரம்

தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் அருளிச்செய்த ஸ்ரீராமாயணத்தைக் கற்றும், பிறர்க்கு உரைத்தும், தமக்கேற்றியும், சபைகளுக்குப்பிரசங்கித்தும், சோணாட்டினை பரதசத்துருக்கன் அனுமச் சமேதராகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் இடத்தில் பக்தியைத் திடமாய உபாசனாபலத்தினால், அதைக்கீர்த்தனரூபம் ஆகிய ஓர் நாடகமாய்ப் பாடியதினாலேயே மகானுபாவரும் பிரபலரும் ஆகி, நாடகக்கவிகளிற்சிறந்த இக்கவிராயர், பூர்வம்சைவத்திற்பிறந்து, சைவத்திருப்புகழ் கீர்த்திசிலோராய்ப்புலமையிருந்தும். தில்லையாடியில் ஒருகுடியும் ஆகிய நல்லதம்பியார் பிள்ளையும் அவரதுகற்புடைமனைவியான வள்ளியம்மாளும் புரிந்தசற்றதபுண்ணியத்தால்இவருக்கொருகங்கையும்தாயும் ஆகும்படி, சாலிவாகனசகம் ஆகோடசம்வந்தில, விஜயவருஷத் தில் அவர்களுக்கு ஒருசற்புத்திரர் ஆக்வந்து உதித்தார்.

அவர்கள் தம்மரபின் வழக்கத்திற்கு இசைய இவரது ஐந்தாம் வயதில், ஐந்தாம்மாதத்தில், ஐந்தாம்தினத்தில், ஒருதமிழ்ப்பள்ளியில் இவரை அமர்த்தினார்கள். இவர்தமது பன்னிரண்டிக்கு உள்ளசமானியக்கல்விகளை அறிந்தார், அவ்வளவில் இவரை ஈன்றெடுத்த தாயார் முன்னும்தந்தையார் பின்னும், சிவலோகப்பிராப்தி ஆனார்கள். இவரது தமையன்மார் மூவரும் வாலியர் ஆகையால் இவர்வாசிப்பின் விசாரணைமட்டிட்டதாயும், அதுவே இவருக்குத் துணைக்காரணம் ஆனதால், இவர் அவ்விடத்திற்கு அருகே இராஜேந்திர தருமபுரத்துச் சைவாதீனத்தை அடுத்து அதிலுள்ள தம்பிரான்களில் ஒருவரும் கிரந்தமும் தமது பதினெட்டிக்குஉள்ளே விதமாக்கற்றார்.

பின்னும் இவர் தமதுபதகொள்பமுறுகல் விசேஷங்கவிகளைக் கற்கக்கருதி அவ்வாதினத்தில் சில்வரில் சைவாசாரத்திற்கு உரியதாங்கள் பலவும் கிரந்தத்திலும் தமிழிலுங்கற்றார் தமது இருபத்தைந் தாண்டுக்குள் அந்நூல்களிற் பயின்றார் அம்மடத்தில் இவர்க்கும் பலபாஷைகட்கும் ஆசாரியர் பலர்க்குள்ளும் தமிழில் முக்கியஆசான் அம்பலவாணக்கவிராயர் என்பவர்.

அக்காலத்தில் இவரதுகல்விஅறிவையும்புத்தியின் கூர்மையை யும் விநயத்தையும் ஒழுக்கத்தையும் உன்னிய அப்பண்டாரச் சந்நிதி யவர் இவரை தீர்த்தவழுக்கு இவ் ஆதீனத்தாருக்கு துறவியாக என்று இ வரைவிரும்பிய அதற்கு இவர் இசையாமல் ஸ்ரீராமாயண மிசையில்லாது, தசரதசக்கிரவர்த்திநந்தனம் இல்லறம்புரிவதிற்பா

டு துறவறம் பூணஇச்சித்தார் அவரது திருக்குமாரர்முதல் இல்லறம் பூண்டு பின்பு மனத்தால் முற்றத்துறவு பூண்டிருந்தார் மற்றைமகாரிஷிகளும் எப்பொழுதும் முன்னதோடுகூடிய பின்னதையே பூண்டிருந்தார்கள் என்று திருக்குறளிலும் இவற்றையேநோக்கி அறப்பாலின் முதற்கண் இல்லறமும் பின்பு துறவறமும் வகுக்கப்பட்டன. ஆதலால் அடியேனும் இவ்விதியையே கைக்கொள்ள நோக்குகின்றேன் என்று அதற்கு அக்குமரி அவ்வாறேசெய்யுமென்று ஆசீர்வதித்தது.

ஆயினும் இவர் அப்பொழுதே தமது விவாக காரியத்தில் பிரவேசிக்க இல்லை இவரது கருத்து விவாகம் வித்தியாநாசம் என்கின்ற பழமொழிப்படியேயாமேனும், தமிழ்க்கல்வியைச் சாதித்தலுக்கே ஒப்பிக்கப்பட்டும் இருந்ததால் இவர் பின்னதையே விடாதுமுயன்றார்.

இவருக்கு வயது முப்பதில் அபிஷேகக்கட்டளைக் கருப்பூரிலுத்தமதானத்தாரில் இவர் ஒரு குமரிக்கன்னிகையைமணந்து அப்பெண்மணியோடு தில்லையாடியிலேயே வாழ்க்கையில்தமது இல்லறத்தை நடத்துதற்குத் தனைக்காரணம் ஆகிய பொருள்களை ஈட்டுதற்காக ஒரு காசுக்கடைத்தொழில்செய்தார்.

ஆயினும் இவருக்கு மிகவும் சாவகாசம் கிட்டிடதால் அதுவரையில் தாம்கற்ற தமிழ்நூல்களில் ஸ்ரீவைஷ்ணவத்திலும் சைவத்திலும் முன் அவதரித்த தெய்வப்புலவர்கள் ஆகிய பன்னிருவராலும் நால்வராலும் தோன்றிய திவ்வியப் பிரபந்தங்களும் திருமுறைகளும் வேதாகமப் பொருள்களைக் கொண்ட ஆகிய தமிழ்கள் என்றும் இவ் இருமதங்களுக்கும தமிழில் முதநூல்கள் என்றும் தமக்கு முன்னோர்கள் தாமே அமைத்தலால் அதுகளை ஒழித்து மற்றநூல்களில் உலகத்திற்கு உபகாரியும் உபயோகமும் ஆகி அருமையும் பெருமையும் உள்ள முக்கிய மாசாரம் ஆனவைகள் எவைகள் என்று அதநுட்பத்தால் உரையாற்று இடைக்காணப்புகுந்தார்,

அச்சோதனையில் இவர்கம்பநாட்டாழ்வாருடைய ஸ்ரீராமாயணமும் திருவள்ளுவர்நாயனாருடைய திருக்குறளும் மற்ற எல்லாத் தமிழ்நூல்களிலும் சிறிய கூரிய இன்சொற்களாலும், செவ்வியமதுரம்சேர்ந்த நற்பொருள்களாலும் சிறந்தஅரியபெரிய அதிகசாரம் உள்ளநூல்கள் ஆக நடுவுநிலைமையில் நின்று கண்டுகொண்டார் மேலும் தெய்வப்புலமைகளையுடைய மேற்படி இருவராலும் தோன்றிய இவ் இருநூல்கள் உள்ளும் முன்னது வேதமாதா ஆகிய காயத்திரி அர்த்தம் உள்ள இதியாசம் என்றும் பின்னது மனுமுதலியதருமநூல் அர்த்தம் உள்ள நீதி நூல்என்றும் இவற்றின் உண்மையைக்கண்டுகொண்டா

அதுமுதல் விசேஷமா இவ் இருநூல்களிலும் பயிலுகையில் மதுரைச் சங்கமபுலவர்கள் துதிக்க திருவள்ளுவமாலையில்,

வெண்பா,

எப்பொருளும்யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பியவள்ளுவர்தாம் செப்பவரும் - முப்பாற்குப்
பாரதம்சீராமகதைபழையமனுப் பன்மறை
நேர்வனமற்றில்லை பிற,

என்று இராமாயணம்குறளுக்குஉவமிக்கப்பட்டதைநோக்கினார் ஆதலால் இவர் கண்டுகொண்டார், முன்னதில சொல்லப்பட்ட இராமசரித்திரங்களே, பின்னதில் நீதிகள்போலச் சொல்லப்பட்டன என்னும், ஆதலால் நீதிகள் குறளிலும், அவற்றிற்கு இலக்கியங்கள் ஆகிய நடைகளோடு, பகவத்குணானுபவமுமதோத்திரங்களும் இராமாயணமுழுதிலும் இருக்கின்றன என்றும்இத்திடக்கியானத்தால் இக்குறளிற்பார்க்கிலும் இவ்இராமாயணத்தில் அதிகமாகப்பயின்றும், பாராயணித்தும் அனேகவாறு ஆதித்தும் சபைகளில்பிரசங்கித்தும்வந்தார்.

இவ்வாறு நிகழ்கையில், இவர் தமது தொழில்முறைமைபற்றி பொன் வெள்ளி கொள்ளும்பொருட்டு, அக்காலத்தில் அவைநயமாகவிற்ற புதுவைக்குப்பயணப்பட்டார் அதற்குச்சீர்காழியாலபோகல் வேண்டுதலின் அவ்விடத்தில்ங்கு தருமபுரம் ஆதீனத்தைச்சார்ந்த ஒருமடத்தில் தங்கினார்.

அதற்கு அக்காலத்தில் கட்டளைத்தம்பிரான் சிதம்பரப்பிள்ளை என்ற ஓர் கார்காத்தவேளாளர் தருமபுர ஆதீனத்தில இவருக்குச் சகலபாடி ஆன ஒருபாவலர் இவர் அப்பண்டாரச்சந்நிதி நியமனத்தால்இல்லறம் பூண்டகாலத்திலே அவரும் அக்குற்றவளைால் துறவுபூண்டு இதற்குக்கட்டளைத்தம்பிரானாகி அதைவகித்திருந்தார்.

ஆதலால் இவ்விருவரும் சந்தித்து தங்களில் இருந்த நெடுங்காலப்பிரிவின்பரிவு அகலத்தழுவி பலநேரம் குசலப்பிரசினம் பண்ணினபின்பு அவர் அமைந்து அறிவினையால் அக்குலத்தின்மேல அதின் முன்னையகட்டளை வருவாய்க்கு ஆகிலும் தாம் அதிகமே கண்டதற்காகத்தாமேபடிஎழுதுகட்டளைமாலையைஇவருக்குக்காண்பித்து அதற்கு இவரது ஒப்பம்கொண்டார், சீர்காழிக்கு ஒருபள்ளுப் பாடப்பிடிகைபோட்டேன், பலசோலிகளால் அதைநிறைவேற்றஎனக்குச்சாவகாசம்கிடைக்கஇல்லை நீரே அதைமுடியும்,எப்பொழுதும்இவ்விடம் விட்டு அகலாதேயும் என்று இவரைப் பிரார்த்தித்தார், அப்பள்ளின் பிடிகையைப்பார்க்கஎன்று அதை இவர்கையில் ஒப்பித்தார், இவர் அற்றை இராத்திரி மற்றைப்பொழுதிலேயே அதை முடித்துப் போட்டார் ஆம் அன்றுவிடியலில் அதையும் தாம் அவசியமாய் புது

வை மட்டும்போகவேண்டிய பயணச்செய்தியையும் அவருக்கு ஒப்பிக்கும்படி, அதுகளை அவர் அடியான் ஒருவன் வசமயனுப்பி அவருக்குப் பயணம் சொல்லிக்கொள்ளாமல தமது குறிப்பிட்டப்போய்ச் சில நாள்கள் அங்கையே தங்கி இருந்தார்,

அத்தம்பிரான் அன்று விடிந்தபின்பு, அப்பள்ளியின் முடிவைக்கண்டும இவரது பயணச் சேதியைக்கேட்டும ஆச்சரியப்பட்டு இவருக்குள்ளது பெரியவித்தையென்று நிச்சயஞ்செய்து இவரது குடும்பத்தை இவர்பெயராலே சீர்காழிக்கு அழைப்பித்து புதுவைக்குச்சென்ற உங்கள் எசமானும் இவிடம்வருவாரென்று அவர்களுக்குத் திடஞ்சொல்லி தாம் கட்டுவித்த அவ்வீட்டில் அவர்களைக் கிரகப்பிரவேசம்பண்ணுவித்திருந்தார்,

இக்கவிராயரோ தம் கனருக்காகத் திரும்புகாலில், வழிவரட்டால்சீர்காழிவந்து அம்மடத்தில் முன்போல இருந்தனர் அங்கு இவரைக்கண்ட சிதம்பரதம்பிரான் இவரோடுசமயாலிக்கையில்முன்புதம்மோடு சொல்லாமல இவர் புதுவைக்குப்போய்விட்டதைப்பற்றி இவரோடு சற்றுநேரம் சலித்தபின்பு தாம் இவருக்குளன்றொரு வீடுகட்டினதும் அதில் இவர்குடும்பம் குடியேறினதும் இவரோடுரைக்காமல் எச்சரியாமல் இருவரும் உலாவப்போகிறவர்கள்போல இவரை இட்டுக்கொண்டு அந்தப்புதுமனையில்நுழைந்தார் இவர் தமது சமுசாரத்தை அங்குகண்டு ஆச்சரியப்பட்டு அவர்களாலேயே அவர்கள் வரலாறு தெரிந்துகொண்டு அவர்களோடுஅம்மனையில் குடிவாழ்க்கைசெய்துகொண்டு சீர்காழியில்தானே எந்நாளைக்கும் வீற்றிருக்கும்படி அத்தம்பிரானால் வேண்டப்பட்டு அதுவே இருப்பிடம்கொண்டார் ஆதலால் இவர் அன்றுதொட்டு சீர்காழி அருணாசலக்கவிராயர் என்றுசொல்லப்பட்டார்,

அங்கு இவர் வசிக்கையில் அத்தம்பிரானுக்காகப் பலதனிக்கவிகளும் சிலசில்லறைப்பிரபந்தங்களும் புனைந்துகொடுத்ததும் அன்றி அசோமுகிநாடகமும், சீர்காழிஸ்தலபுராணமும் சீர்காழிக்கோவையும்பாடி அனுமார் பிள்ளைத்தமிழ் தமக்காகவேபாடினார்.

அக்காலத்தில் சீர்காழிக்கு அடுத்த சட்டநாதபுரமென்கிற அக்கிராரத்திலிருந்துவெங்கட்டராமய்யர்கோதண்டராமய்யரென்றிருவர்பிராமணர்கள் சங்கீதவித்துவான்கள் இவரிடத்தில்சிலசில்லறைப்பிரபந்தங்களில்பாடம் கேட்டபின்தெய்வப்புலமையையுடையகம்பநாட்டாழ்வாராலேசெய்யப்பட்டிருக்கிறஸ்ரீராமாயணத்திலும் பாடங்கேட்டுக்கொண்டுவந்தார்கள் அவர்கள் இவரைப்பிரார்த்தித்தார்கள் இதுவரையிலும்தாங்கள்செய்தபலபிரபந்தங்களாலும்புராணத்தாலும்நாடகத்தாலுந்தங்கள்கீர்த்தியமெங்கும்குப்பென்றுபரவாமலிருக்கின்றதால்அதைஎங்கும்பரவச் செய்யத்தக்கமுக்கியப்பிரதானமுமாகிய, ஒருபிரபந்தத்தைத் தர்க்க ஆலோசித்துத்தாங்கள்செய்யத்தக்கதுள்ளது.

அப்பால் இவர்யோசித்தது இதுவெய்யே, இனிநமக்கும்உலகுக்கும் புத்திக்கும் முக்திக்குஞ்சாதனம் ஆகிறதுகதையைப்பற்றிப்பாடுவோம், அதுராமகதையேயன்னனில்ராமமந்திரம்பரப்பிரம்மத்தைக்குறிக்கிறது,தாரகப்பிரம்மமந்திரமென்கிறது,சாவித்திரிக்குஒருசுருக்கம்ஆகியது, ஸ்ரீமந்நாராயணன்பிரம்மாவுக்கும் பிரம்மாபரமசிவனுக்கும் பரமசிவன் பார்வதிக்கும் உபதேசித்ததுஇதுவே முக்தியென்கிற காசியில்யாவருக்கும் அந்தியத்தில் உபதேசிக்கிறது அக்ஷரவிலேபரப்பிரம்மம்சகாதனிலே அவதரிக்குமென்று அதைக்குறிக்கிற காயத்திரி (உசு) அக்ஷரங்களையுடைய எழுத்தண்டங்கள் ஆகியவைசேர்ந்தமே, எழுத்தண்டங்களும(உசக)கிரந்தம்ஆகி,ராமனைக்குறிக்கிறபுண்ணிய கதாநூபம்ஆய்,மகாரிஷியும்ஆதிகவியும்ஆகியவால்மீகிபகவானிலே அவதரித்தது இதுகாயத்திரி ஆதலால் அன்றே பிரமகத்திமுதலானசகலமகாபாதகங்களையும்போக்குகிறது அன்றியும் தெரிந்தோ,தெரியாதோதிருந்தியோதுனாமியோ, பக்தியோ, அபக்தியோ, தீவிலோகேகினைவுதப்பியோ, அன்வயத்தோடே அன்வயம் இன்றியோ பொருள்உணர்வோடேயாது இன்றியோ, ராமவென்ற இரண்டெழுத்துச்சகலமாத்திரமவரத்தக்க மாமா இந்தவசப்பில்இராமப்போரக்கதோமாஇடியாதே, மோராமா, காராமணிஆமா, சிராமா என்றுஇப்பேர்ப்பட்ட வசனங்களிலும் வாக்கியங்களிலும் ஒவ்வொன்றையேனும்வொருவர் தங்கள் அந்தியத்தில்உச்சரித்தால் முக்திபெறுவர்,அனேகர் இதைஉச்சரிக்கையில்-ரா-பாவங்களைத் திரட்டிவெளிப்படுத்துகிறதும அதுகளைமறுபடியும் உள்ளே நுழையாமல் வாயைமூடுகிறது இதுவல்லன்றோ முன்னைய பெரியோர்களில்.

நம்மாழ்வார்.

கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ
புற்பா முதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார் பெற்றநாட்டுளே.

என்றார் படிக்கில்ராகவன்சரித்திரம், கொடுக்குஞ்யோகமுமேதரித்திரமென்ற பழமொழியும்இருக்கிறதுமேலும்சக்கர ராமானுசமத்ஆசாரியர்கள் ஆகிய-ஸ்ரீவைஷ்ணவர்களும் இந்தராமகதையைநியமமாகப்படித்தும் இரவெல்லையிலும் பாராயணித்தும் கேட்டும் வேட்பித்

தாம்இகபரசௌக்கியங்களை அடையவென்று தங்கள் சிஷர்களுக்குநியமித்தார்கள் அவர்களும்அப்படியேசெய்கிறார்களென்று இந்தப்பிரகாரம்இராமாயணத்தின் பலமகத்துவங்களையுமதமதுகலவிதிறைததகருத்தில்இவர்பிரியாளித்து இதையே நாடும்பாடத்தொடங்கித் தமதுகாலத்தைகழ்போதாப்போக்கத் திர்மானித்தார் ஆகிலும்இவர் இதைஎவ்வாருபமாப்பாடத்தக்கது என்றுமேலுமசிந்தித்த தாறுதனைத்தெய்வப்புலமை ஸ்ரீமத் கம்பநாட்டாழ்வார் திருவிருத்தங்களால் நிறைத்தார்பாலபாரதியார் திருச்சந்தவிருத்தங்களால்நிறைத்தார் பினனும் பலரும் பலவால்நிறைத்தார்கள் ஆதலால்நாமபெண்களும்பேதையரும்உணரத்தக்க வெளிப்படையும்வழக்கமும்ஆகிய செந்தமிழ்ச்சொற்களாலே ஓர்நாடகம்ஆகியகீர்த்தனரூபம்ஆக நிறைக்கக்கடவோம் என்றுநிச்சயித்தார் சங்கீதநடைதெரிந்தமேற்படி இருவர்ஆகியதமதுபிரமணசிஷர்களையே இராகதாளங்களுக்கு உதவியாகக்கொண்டு இக்கவிராயர்அதைத்தொடங்கி நிறைவேற்றினர் அதின் விவரம்ஆவதுஇவருக்குஇகதிலேவுஅங்கதாயபாரத்தில் தோன்றியதால் முதமுதல்அடைவெளியே புறப்படாஎன்ற கீர்த்தனையைஅதின் விருத்தத்தோடுமுடித்து அச்சிஷர்களுக்குக்கொடுத்தார்அதற்குஇராகமும்தாளமும்அமைத்துக்கொண்ட அவர்களாலும்அதை அவர்களிடத்தில்கற்றுக்கொண்ட மற்றவர்களாலும் சிலநாள்களுக்கு உள்ளே அது அங்குளஎல்லாம்பரவினதைக்கண்டு இராமாயணத்தில ரமபாச் சிலவிஷயங்களெடுத்துச் சிலகாலத்தில் சுருக்கமாய் நூறுகீர்த்தனைகள் அதனவிருத்தத்தோடுமுடித்தார்அதுகளுக்குஎல்லாம் இராகதாளங்கள்அமைத்தஅந்தப்பிராமணர்கள்சிவ்வெனறுசென்னப்பட்டணத்துக்குவந்துஅதுகளைஅங்கங்கேபாடிப்பரிசுபெற்றமறுபடியும்தங்கள் ஊருக்குத்திரும்பிப்போய் அதினால்தங்கள் கல்யாணங்களையும்நிறைவேற்றிக்கொண்டுதிரும்பி இக்கவிராயர்இடத்துக்குப்போய்நடந்தசெய்திகளைஅவருக்கு அறிவித்தார்கள்,

அதினால் இக்கவிராயர்பின்னும் ஐம்பதுகீர்த்தனைகளும்விருத்தங்களும்பாடி முன்னதாகவேமுடிஅந்தம்பூர்த்தபெறக்கோத்தாற்றுபிரகாரமாமுடித்துக்கொண்டு ஸ்ரீரங்கத்துக்குப்போனர் அதைஅரங்கேற்ற பூர்வத்தில்கம்பநாட்டாழ்வார்தமது ஸ்ரீராமாயணத்தை அரங்கேற்றியஸ்தலம்அதுவே ஆகையால்அப்பொழுது அக்கோவில்முறையார்கள்சொன்னார்கள் பூர்வத்தில் கம்பநாட்டாழ்வார் தமதுஇராமாயணத்தைபூர்வாசாரியர்ஆகியஸ்ரீமந்நாதமுனிகள் திருமுன்னர் பிராட்டியார்சந்நிதானத்தில்பெருமாளும்எழுந்தருளியிருக்கஅரங்கேற்றினர்அக்காலத்தில்பலதருமங்களில் பல அற்புதங்களை அவர் உலகத்துக்குநடத்திக்காண்பித்தார் அதைத்தானே நீர் கீர்த்தனைகளாகப் பாடினபடியால்அதைக்குறித்துப்பெருமாளுக்கு நியமித்தால் இந்நூல்அரங்கேறச் சம்மதிப்போம் என்று அதின்பேரில் இக்கவிராயர் தனியேநாள் இடத்தில் இருந்து ஒருகீர்த்தனையால் ஸ்ரீரங்கநாயகனைத்தோத்திரம்பண்ணினார் அது இது.

௯-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்பள்ளிகொண்டீர் ஐயா-ஸ்ரீரங்கநாதரே நீர்
என்பள்ளிகொண்டீர் ஐயா

அநுபல்லவி.

ஆம்பல்பூத்தசைய பறவதமடுவிலே-அவதரித்த
இரண்டாற்று நடுவிலே—என்

சரணங்கள்.

க. கோசிகன்சொல்குறித்ததற்கோ-அரக்கி-குலையில்அம்புதெறித்ததற்கோ
ஈசன்வில்முறித்ததற்கோ-பரசு-ராமனுரம் பறித்ததற்கோ
மாசிலாதமிதிலேசன்பெண்ணுடன் வழிநடந்தஇளைப்போ
ஆசிலாதகுகன்ஓடத்திலேகங்கைத் துறைகடந்தஇளைப்போ
மிகராம்-ஆம்சித்திரகூடச்சிகரக்கல் மிசைகிடந்தஇளைப்போ
காசினிமேல்மாரீசன்ஓடிய கதிதொடர்ந்தஇளைப்போ-ஓடிக்
களைத்தோ தேவியைத்தேடி - இளைத்தோமரங்கள்ஏழும்
தொளைத்தோ-கடலைக் கட்டி-வளைத்தோ இலங்கைஎன்னும்
காவல்மாநகரை இடித்தவருத்தமோ
ராவணாதிகளை அடித்தவருத்தமோ—என்

உ. மதுரைமேலேவரும் கலையோ-முதலை-வாய்மகளைத்தரும்கலையோ
எதிர்எருதைப்பொருங்கலையோ- கன்றை-எடுத்தெறிந்தபெருங்கலையோ
புதனைஆனமுலை உண்டுபேயின்உயிர் போக்கிஅலுத்தீரோ (வோ
அதிரஓடிவருமகுருவிலாளைபரன் பாக்கிஅலுத்தீரோ
துதிசெய்ஆயர்களைக்காக்கவேண்டிமலை தாக்கிஅலுத்தீரோ
சதிசெய்காளிஙன்பல்காளிங்கன்மணிமுடி தாக்கிஅலுத்தீரோ-மருதம்
சாய்த்தோ-ஆடுமாடுகள் மேய்த்தோகோசகுருளைத்
தேய்த்தோ-கஞ்சன்உயிரைமாய்த்தோ அர்ச்சுனனுக்காச்
சாரதியாய்த்தேர் விடுத்தவருத்தமோ
போர்விலேசக்கரம் எடுத்தவருத்தமோ—என்

௩. பாற்கடலில்மெத்தவும்தானே-உம்மைப்பாம்பணையே அடுத்ததே
அடிமைகொள்வீர்என்னைத்தானே-செம்பொன் -அணிஅரங்கப்பெரு
நடுஉறைந்தருளும் பாதைசமைந்த தடுத்தாட்சித்தீரோ(யானே
விடஒன்றுதகாகாசுரனுக்கொருகண் விடுத்தாட்சித்தீரோ
கொடுமைகொண்டுமுதுகோபனைக்குத்துவில் கொடுத்தாட்சித்தீரோ
மடுவில்ஆனைமுன்ஓடிமுதலையை படுத்தாட்சித்தீரோ-அதுபோல
வாரும்-இருபைக்கண்டுமேயாரும்-மனக்கவலை
திரும்-நினைத்தவரம் தாரும்-தாருமெனசால
வட்சமேறிமை லட்சுமியுடன்பெரும்
பட்சம்ஆகவன்பை ரட்சியுமெனறுதிரும்—என்

இந்தக்கீர்த்தனைக்காகப் பெருமாள் திருவுள்ளமுவந்து இக்கவிராயருக்குச் சொப்பனத்தில், ஒரு ஸ்ரீவைஷ்ணவரைப்போலவந்து, முன் ராமநாடகப்புலவர் முற்காலத்தில் கம்பநாட்டாழ்வார்இராமாயணம்அரங்கேற்றவருகையில், நம் சடகோபனைப்பாடினையோஎன்றுபெருமாள்கேட்க அவர்நம்மாழ்வாருக்குஒரு அந்தாதிபாடினபின்புதான் அதைஅரங்கேற்றவியலித்தார், அவ்வாறேநீயுமஉனதுநாடகத்தில்நம்பெருமாள்பரிசனங்களைப்பாடினபின் அல் அரங்கேறும்என்றார். அவ்வண்ணமேபெருமாள்கோவில்தலையாருக்கும் சொப்பனம்சாதித்தார். இவராலே அதைப்பாடுவித்துக்கொண்டு இவரது இராமநாடகத்தைஅரங்கேற்றும்படியா அப்படியே அன்று விடிந்த பின்இருவரும் அச்சொப்பனங்களைஒப்பிட்டுக்கொண்டவர்கள் ஆய், இவர் இந்நாடகத்திற்குத்தோடையம்பாடத்தொடங்கி நம்பெருமாள் பரிசனங்கள் ஆகிய அனந்தகெருடவிஷ்வக்சேனர் பஞ்சாயுதங்கள் ஆழ்வார் ஆசாரியர்கள் அனைவரையும் அதில்அமைத்தார் ஆகிலும் அத்தோடையத்தில் இருக்கின்ற விநாயகரோ அக்கோவிற் பரிவாரத்தில் இருக்கின்ற ஒருவர் தாம்மேற்காப்புவிநாயகரோ, சேனைமுதலியார் பரிவாரத்தில் ஒருவர். இவ்விதமா இந்நூல்சிரங்கத்தில் பூர்வத்தில்தெய்வப்புலமைக்கம்பநாட்டாழ்வார் தமது இராமாயணத்தை அரங்கேற்றியகம்பர் திருமண்டபத்திலே அந்தப் பங்குனி அஸ்தநட்சேத்திரத்திலேதானே, திருவரங்கத் திருமுற்றத்துஅடியார்கள் கோஷ்டியில்முதலில் அரங்கேற்றினர்அக்கோவிலாரால்பலமரியாதைகளோடுபல்பரிசுகளும்பெற்றார்

அப்புறம் இக்கவிராயர் தஞ்சாவூர்ச்சமஸ்தானாதிபதிஆகிய துளசிமகாராசாவின்சபையில்இந்நாடகத்தைஅரங்கேற்றவந்தார் அங்கேம்தஞ்சைக்கோட்டை சென்னப் பட்டணத்து நவாப்ஆகியமதார்மலக்கின்தவிடிருல் முற்றிக்கைஇடப்பட்டிருந்தது அச்சமையபேதத்தால்புதுவைநகரத்து ஆனந்தரங்கப்பிள்ளையின் சபையில் இதை அரங்கேற்றவந்தார் அவர்தமக்குமிகவும்இஷ்டர் ஆகிய துளசிமகாராசா இதைக்கேட்டதற்கு முன்தாம்கேட்டல் கூடாதுஎன்றுஇவருக்குநாலுவெகுமதியும்செய்து, மணலிமுத்துகிருஷ்ணமுதலியாருக்குத்தகவுரைப்பத்திரிகையோடு இவரைச் சென்னைபுரிக்குஅனுப்பினர் இவர் இவிகம்சேர்ந்துஅவருக்குஒருசீட்டுக்கவிதை அத்தகவுரைப் பத்திரிகையோடு விடுத்தார்.

அது-இது-ஆசிரியவிருத்தம்.

சித்திதருகிறவல்லிபுத்திதருகிறவல்லிதேவர்கள்வணங்குவல்லி
தில்லைநாயகவல்லிசிவகாமவல்லிஇருதிருவிழிக்கருணையாலே
சத்தியவாசகனெனஅறும [illegible]
சகலபாஷாநிபுணமணலிமுத்துக்கிருஷ்ணசநாமீவாழிகண்டாய்
நத்துமலர்குவளைகாண்மதியமநீசெஞ்சாலிநான்கருவிமழைமேகமநீ
நளினம்நான்பருதிநீபிள்ளைநான்அன்னைநீநான் கவிஞன்வழுதிநீகாண்
சுத்தமுளராமாயணநந்தனைக்கொண்டுனதுசமுகமதுபெறவருகிறேன்
சொற்பொருள அறிந்தளவுசெல்லுவேன்கேட்கவேதுணைஆகவே
(ணுமநீயே

இதை அங்கீகரித்தமுதலியார், இவரைத்தம்இடத்துக்குஅழைப்பித்துதக்கமரியாதைசெய்து இவர்கேள்விக்கு இசைந்தார், அப்பால் இவர்ஸ்ரீராமகதையை ஸ்ரீமத்கம்பராமாயணத்தைப்பற்றி நாடகமாய் ஒன்றுசெய்திருக்கிறேன், அதையும் கூடவேதாங்கள்கேட்கஎன்றுர். அப்போது அவர்இவரைக்கேட்டார் சிலகாலத்திற்குமுன் இருவர் பிராமணர்கள் இராமநாடகம் ஒன்றுகொண்டுவந்து இங்கேதீர்த்திந்தார்கள். அதுதானோஇது என்றுஇவர் அதுவும்நான்பாடியதுதான் அது ஒருசங்கிரகம் ஆதலால் அதைய விரிவாப்பிறகும்பாடினேன்என்றுர், முதலியார் அப்படிஆகில் இரண்டும் ஏககாலத்திலேதானே நடக்க என்றார், ஆகலால் அப்பால் இவர்தமதுநாடகத்தைப்பின்னும்பலதருக்களாலும் விருத்தங்களாலும் புதுக்கிவிரித்தார் முதலியார்சபையில இராமாயணப்பிரசங்கம் ஆரம்பித்தார், கூடவே அங்கங்கே இக்கீர்த்தனைகளையும் விருத்தங்களோடு அரங்கேற்றினர். ஆகலால் ஸ்ரீராமபட்டாபிஷேகத்தில் முதலியாரால் பலமேன்மைகளையும் பரிசுகளையும் பெற்றார் அதுகள இக்கவியால் அறியவரும்

ஆசிரியவிருத்தம்

கனம்தந்தாரகனகாபிஷேகம்தந்தான்
களங்கம்இல்லாக்கருப்பொருளைஅழைத்துத்தந்தான்
மனம்தந்தார்முடிக்குப்மோலைதந்தான்
வாணிபிகாதனத்திருத்திவரிசைதந்தான்
இனம்தந்தான்ராமகதைவர்க்கும்தந்தான்
எனைரமயணக்கவிஞன்எனப்பேர்தந்தான்
அனம்தந்தான்மணலிமுத்துக்கிருஷ்ணபூபன்
அகம்தந்தான்இருமையிலும்சுகம்தந்தானே.

இப்படி முத்துக்கிருஷ்ணமுதலியார் சன்மானம் செய்யப்பெற்ற இக்கவிராயர், பம்பு லிங்கப்பசெட்டியார் குமாரர் ஆகிய தேப்பெருமாள்செட்டியாருக்கு ஒருசீட்டுக்கவிதை அனுப்பினர். அது இது.

## ஆசிரியவிருத்தம்.

கனிகொண்டபஞ்ச லக்ஷணமும்ராமாயணக் கட்லேயுமுணர்ந்தபுலவன், கவிராசர்புகழ்கின்ற காழி அருணாசலக் கவிராயனெழுதும் ஓலை, மணிகொண்டமார்பின் கப்பமகிபாலகன் மகிழ்ந்தகுதன வணிகாதிபன், வருசீர்படைத்ததேப்பெருமாள்மகிபன இதை மனம் உவந்தினிதுகாண்க, அணிகொண்டதியாகேசர் வண்ணம் உரைசெய்ததும் அதற்குவெகுமதிசெய்ததும், ஏதுமக்குபகாரம் ஆனதும் இப்புவியில் அறியாதபேருமுளரோ, பலிகொண்டராமகீர்த்தனையும அப்படியேபரிந்து நீகேட்கவேணும், பாரிலோராயிரம் பிறைகண்டுநீ பொருள் படைத்துவாழ்ந்திடுகமாதே.

அவர்அப்படியே அதைக்கேட்டு இவருக்கு கனிசமானப்பிரேசமும் மரியாதைசெய்தார். பின்பு மதார்மலைக் நவாப்போடு சமாதானப்பட்டிருந்ததுள்சிமகாராஜாவையும், அப்பால் ஒருபஞ்சரத்தினமூலமா ஆனந்தரங்கப்பிள்ளையையும் பின்புஉடையார்பாளைத்துத்துரைஆகிய, உவாக்கப்புடையானையும் பின்னும் சிலபாளையப்பட்டுத்துரைகளையும் இவர்கண்டு, இதை அரங்கேற்றி, பலவரிசைகளும்மெய்வரிசைகளும் அவர்களால் பெற்றார்.

இவ்விதத்தால் இவர் ஈட்டியபொருள்களைக்கொண்டுதம்குடும்பத்தோடு கலந்தபின், சிலவருஷங்கள் இருந்து சீர்காழியில்தானே விகாரி௵ ஆனிமீ வைகுண்டப்பிராப்தி ஆனார் இவர்வேஷத்தில்கொத்துத்தாழ்வடம் தலையிலும், வெள்ளைவேட்டி அரையிலும், தரித்து சைவப்பண்டாரங்கள்போல் இருந்தார் ஆம்.

இவர் தமது விவாகத்தின்பின் தில்லையாடியில் கஉ௵ வசித்து சீர்காழியில் உடு௵ வசித்தார், இவருக்குவயது ௬எ- இவர்தமது- சுய- ஆம்வயதில் இக்கீர்த்தனை பாடியது இந்த விகுவருஷத்துக்கு இதுபாடி-௱௫௵ ஆகிறது இவர்வைகுண்டபிராப் ஆகி-௯௫௵ ஆகிறது.

இவரதுசரித்திரம், இவரதுபேரும், இவர்குமாரர்கள் மூவரில் மூத்தவர்ஆகிய அம்பலவாணக் கவிராயருக்குப் புத்திரரும் இக்கீர்த்தனைக்குப் பிரசங்கியும்ஆகிய, சுப்புராயக் கவிராயராலும் பின்னும் அனேகராலும் நாங்கள் கேள்விப்பட்டபடிக்கு எழுதப்பட்டது.

## அமைத்தவர்கருத்து.

இக்கவிராயர் நிச்சயித்தபடி, மகிமையுள்ள இந்த இராமயணகீர்த்தனை ஆகியபுண்ணியநூல், வெளிப்படை ஆனவழக்கச்சொற்களாலே செய்யப்பட்டிருந்தும், இடையிலே அவ்வளவும் தெரியாதசிலர்வாய்களில் அகப்பட்டு, முடியஎழுத்தும் சொல்லும்பொருளும், அங்கங்கே சரணங்களும் வரிகளும்மிகுந்தும் குறைந்தும, இராகதாளங்களும்பேதித்தும, சிலவிருத்தங்களும் கீர்த்தனைகளும, சிலபுஸ்தகங்களிலே குறைந்தும், சிலவற்றிலே மிகுந்து, இப்படிக்குப்பலவிதங்களிலும் பிழைபாடுகள் ஆய்விட்டது. இதற்கு முக்கியகாரணங்கள், இத்தமிழ்ப்பாஷையின் நடையில் அக்ஷரங்களைத்தொடர்எழுத்தாகவா எழுதுகிற சந்திவழக்கமும், அவ் அக்ஷரங்கள் இயல்பாயே மிகுதலும்குறைதலும்மாறுதலும்அல்லாமல், வலிய அதுகளைமிகுத்தலும் குறைத்தலும்மாற்றுதலும் செய்கிற விகாரவழக்கமுமதாம். இச்சந்திகளும்விகாரங்களும், இன்னஇடங்களில் வேண்டத்தக்கதுகள் என்றுகற்ற இலக்கணப்புலவர்களில் சிலர் இன்னமும் தெளியாமல் இருக்கிறார்கள்,

ஆகையால் இந்தப்புஸ்தகத்திலே வாசிப்போர்களையும் பொருள்கொள்பவர்களையும், தடுத்தும் மருட்டியும் பிழைகளுக்கு உள்ளாகிற சந்திகளையும் விகாரங்களையும் அவசியமா வேண்டத்தக்கஇடங்களிலே கொண்டும், வேண்டாத்தகாத இடங்களிலே விலக்கியும்கற்றவர்களுக்கே அன்றியும், மற்றவர்கள் ஆகியபெண்களுக்கும பேதையருக்கும் கூடத்தாட்டியாப்படிக்கவும், சொல்லும்பொருளும் அவர்களுக்கும் விளங்கும்படிஆகவும், சொற்களைப்பிரித்திருக்கிறோம், ஏனெனில், இந்நூலபடிக்கின்றவர்களில் இச்சந்தியும் விகாரமும்வேண்டத்தக்கவர்கள மிகவுஞ்சிலர், அதைவேண்டாதவர்கள் மிகவும்பலர் ஆகலால்பலருக்குப் பயன்படுவதையே முக்கியமா நாங்கள் வேண்டினோம். மேலும் எழுத்துநடை இல்லாதவர்களும் சங்கீதப்பயிற்சியில்லாதவர்களும்கூட, இதனைப்படிக்கையில் எகதேசவிருத்தனையும் எங்கெங்க கீர்த்தனையும, சந்தேகக்குறைய எழுத்துநடை அறிந்தும், சந்தநடை அறிந்தும் நடத்தும்படியா, அதுகள்தாமே அவர்களை நடத்திக்கொண்டுபோகத்தக்கதாக, அவ்வளவுபக்குவமாய்த்திருத்தபடி பிரிவினை செய்யப்பட்டிருக்கின்றது.

இதில்கீர்த்தனைகளும், விருத்தங்களும், நாலும், ஐம்பதும், ஆக க்காலாறுகூடலப்படி, பாகுப்பட்டபடியால், அப்பொழுதுக்கப் போது

எழுதிக்கொண்ட புஸ்தகங்களில். சிலவற்றில் கீர்த்தனைகளும் விருத்தங்களும் குறைந்து சிலவற்றில் அதுகள் இருந்தும் போய்விட்டதுகள், அவற்றுள் சிலபொருத்தம் இல்லாமலும் ஆய்விட்டதுகள், ஆதலால் நாங்கள் பலபுஸ்தகங்களைகொண்டு பரிசோதிக்கையில் பொருந்தாமை கண்ட இடங்களில், எழுத்துகளையும் சொற்களையும் திருத்தினதுமாத்திரம் அல்லாமல், தனிச்சொற்கள் சேர்த்தோம், விருத்தங்களை உடைத்துப்பொருத்தினோம், நூதனவிருத்தங்களும் பாடிச்சேர்த்தோம், கீர்த்தனைகளிலே குறைவை நிறைவு ஆக்கினதும் அல்லாமல், நூதனகீர்த்தனைகளும்பாடிப்பதிப்பித்தோம், இக்கவிராயரவர்களே பாடப்பட்டதுகளாகக் காணாமலும், கூறியதையே கூறியதுபோலக் கண்டதும் ஆகிய சிலகீர்த்தனைகளையும், விருத்தங்களையும், கழித்துவிட்டோம்.

இந்த இராமாயணகீர்த்தனையிலே நாங்கள் திருத்தியதுகளையும் கூட்டியதுகளையும், கழித்ததுகளையும், நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவரே அல்லாமல் பின்னும்தகுந்த சிலவித்துவான்கள், சிலபுலவர்கள், சில கவிராயமார்கள், சிலசங்கீத வித்துவான்கள், சில இராமாயணப்பிரசங்கிகள், சில கீர்த்தனைப்பிரசங்கிகள், போதாமைக்கு வால்மீகப்பிரசங்கிகள், ஸ்ரீமத்கம்பராமாயணம். யாவரோடும் ஆலோசித்தே செய்தோம், இதுகளைப் பார்க்கிறவர்கள் பொறுமையைவிட்டுப் பார்வையிட நாங்கள் பிரார்த்திக்கிறோம், ஏனெனில்பொறுமைஉள்ளவர்க்குப்பொருளுண்மைதோன்றுது, என்றபழமொழி இருக்கிறபடியால், அப்படிசெய்வார்களாகில் அவர்கள் எங்களுக்குக்கொடுக்கும் வெகுமானமும் பரிசும்ஒருசபாசும்ஒருசிரக்கம்பமும் ஒருகரக்கம்பமும்தாம், இவையும்செய்யக்கோருதலர்கள் அநேகர்இருப்பார்கள்.

சங்கீதவரதையங்கார் என்கிற, இராமாயணகீர்த்தனைப்பிரசங்கிஆனவர், இதிலே நாங்கள் இராகங்களையும், தாளங்களையும், பரிசோதித்துநவரசங்களில் இன்னரசத்துக்கு இன்ன இராகமே சரி, இன்னதாளமேவேணும், என்று ஆராய்ந்து பதிக்கையில், அதற்கு கூட இருந்து எங்களுக்கு உதவிபண்ணினார்.

இதிலே அங்கங்கே கீர்த்தனைகளுக்குஇராகங்களும், தாளங்களும். நாங்கள் இன்னது இன்னது என்றுபோட்டிருந்தாலும், இராகங்கள் எங்களுக்குஅதுவேவசியந்தனை அல்ல. சுதிக்கியானம் லயக்கியானம் தெரிந்தமகாசங்கீதவித்துவான்கள்தங்கள் வல்லமைக்குத்தக்கபடி ஒருராகத்தைப்பலராகத்திலும் ஒருதாளத்தை பலதாளங்களிலும், பாடிக்கொள்ளலாம்.

ஸ்ரீராமஜெயம்.

# இராம நாடகம்.

ஆக்கியோன் பெருமை.

கொச்சகக்கலிப்பா.

தம்மைஇராமாயணப்பாற் கடலைஉண்டு
நம்பவரும்ராமநாடகமாம் மாமழையை
அம்புவியிலக்காழி அருணாசலமேகம்
இம்பும்உயிர்ப்பயிர்க்குப் பெய்துவினைகொய்ததுவே. (க)

மேல்காப்பு.

வழிபடுதெய்வ வணக்கம்.

விநாயகர்தோத்திரம்.

நேரிசைவெண்பா.

ஆனைமுகனை அரன்திருமகனை
சேனைக்கோர்நாயகனைச் செய்யோனை - ஞானமே
நாடகத்தைக்கொண்டஉன்றன் நல்லருளாலேராம
நாடகத்தைச்சொல்லுவேன் நான். (உ)

க-தரு-சௌராஷ்டிரராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

விநாயகசரணம் - ஜெயஜெய - விநாயகசரணம்

அநுபல்லவி.

அநாதரட்சகனே-கசமுகனே-ஞங்கரனேசிவசங்கரன்மகனே (விநா)

சரணங்கள்.

க அன்பிலாத — பேதையேனென்றுடை
அறிவுவிளக்கவேணுமோ — வருவாயே
என்குலதெய்வம் — நீயே-இந்த
ராமநாடகத்துக் — கனுக்கிரகிப்பாயே — (விநாயக)

உ. வானவர்பணி — வேழனே-கமல
வாக்குந்தந்துகாத்தருள் — சீமானே
நானுனதடி — பேணவே-ராம
நாடகத்துக்கருள்புரி — தலைவோ — (விநாயக)

ங. உண்மைஞானம் — தோற்றும்-உன்றன்
உதவியாலேநல்லபுத்திகள் — பெருகும்
நன்மையாய்இதம் — கனவும்-ராம
நாடகத்தைச்சொலநீ — முன்னிற்கவேணும் — (விநாயக) —



மகாவிஷ்ணு.



கல்ருக   குருவாழ்க குருவேதுணை.

# இராமநாடகம்.

## பாயிரம்.

### உள்க்காப்புகள்.

ஏற்புடைக்கடவுள்வணக்கங்கள்.

### அநுமார்தோத்திரம்.

நேரிசைவெண்பா.

கோதண்டதீட்சை குருராமநாடகத்தைத்
தீதண்டவாறடியேன் செப்பவே-கோதண்ட
மாருதியே அஞ்சனையாள் மைந்தனே நற்கருணை
வாருதியே நீதுணையா வா. (க)

உ-தரு-கல்யாணிராகம்-ரூபகசாப்புதாளம்.

பல்லவி.

துணைவந்தருள்புரிகுவாய் - அநுமந்தா நீ
துணைவந்தருள்புரிகுவாய்.

அநுபல்லவி.

துணைவந்தருள்வாய்நல்ல    சொல்பொருளதுவுள்ள
இணைஞ்சிலாதவல்ல    ராமநாடகம்சொல்ல

துணை

---

* இந்தப் பல்லவியை இரட்டித்துப் பாடும்போது அநுமந்தா நீ - என்கிறதற்குப் பிரதியாக என்றனைக்குற்ற - என்றும்-என க்ருபைக்க-என்றும் சொல்லிக்கொள்ளவும்.

# இராமநாடகம்.

சரணங்கள்.

௧. கண்டனாமிதோழமையை | விண்டேனோ-விண்டு
சுக்கிரீபன்தோழமையைக் | கொண்டேனோ-வெகு
திட்டமாகவனைப்போய்க் | கண்டேனோ-அவன்
செப்பியசொல் அமிர்தத்தை | உண்டேனோ-சுக்கிரீவன்
கண்டதும் அரசிருந்த
கண்டதும் அவனிருப்பும்
சட்டமாக்கினான்மாருதி
இட்டகருணையாருதி
தனை.

௨. அக்கடலிக்கில்தென்திசை | உகந்தேனோ-திரைக்கரைப்
அரியபினத்தினுரைப் | புகுந்தேனோ-அப்போது
தொட்டெமபூமியினைப் | பிளந்தேனோ-உயிரைப்
போக்கவேவிரமனம் | தளர்ந்தேனோ-சம்பாதி
எட்டவிலிருக்குமென்ன
இட்டவேவரமாற்றுப்
பட்டகதைச்சொன்னதும்பனே
முட்டிலாஅஞ்சனேயனே
தனை.

௩. உக்கிரமகவிஸ்வசொரூபம் | எடுத்தேனோ-மகேந்திரத்
துறைதந்துகடலைத்தாண்டி | விடுத்தேனோ-பொலாத
அக்கிரமலங்கனியைச்சேர்ப் | படுத்தேனோ-கற்பிரு
ஆழியைத்தேவிகையினில் | கொடுத்தேனோ-அதுபோல்
மிக்கவேசத்துக்கள்வாயால்
சக்கலோட்சதரெல்லாம்
அக்கவேசெயுங்குத்திரனே
முக்கியமாம்வாயுபுத்திரனே
தனை.

௪. தேவருடாமணிகையில்த் | தரித்தேனோ-சொன்ன
சேதிகளெல்லாம்அக்கி | கரித்தேனோ-தீ
பாவிராவணனிலங்கையை | எரித்தேனோ-ராமன்
பக்கல்வந்தற்புதங்கள் | விரித்தேனோ-இக்க
மூவுலகத்தோருந்தேவர்
கோவும்முனிக்கணமும்ய
சாவியசிரஞ்சீவியே
மேவியஞானாவியே
தனை.

# பாயிரம்.

௯, அருமையாம்சஞ்சீவிமலையை | எற்றுனோ-பிம்ம
அஸ்திரவேண்டகளெல்லாம் | தீர்த்தோனோ-சீதையை
உரிமையாம்ராகவன்பக்கல | சேர்த்தேனோ-பாதம
உயிராவிருதுவனையேபோய்க் | காத்தேனோ-தவத்தில்
பெருமையார்முனிவிருத்தினில்
தருமராமனுடனுத்தின
இருமையாசஞ்சீவிராயனே
பிரமபட்டம்பெறுமுபாயனே
தனை, உ)

---

## பெருமாள்தோத்திரம்.

விருத்தம்,

அண்டர்தம்துயரம்தீர அயோத்திமாநகரில்வந்து
தண்டகாரணியம்சென்று சமுத்திரமணையாய்க்கட்டிக்
கொண்டிராவணன்னைமாட்டக் கோதண்டமதையிலக்கும்
புண்டரீகாக்ஷிராமன் பொன்னடிக்கமலம்போற்றி, (எ)

௧-௩௬-சௌராஷ்டிராகம்-திரிபுடைதாளம்,

பல்லவி,

எனக்குன் இருபதம்நினைக்கவரம் அருள்வாய்-ஸ்ரீராமச்சந்திர
எனக்குன் இருபதம்நினைக்கவரம் அருள்வாய்,

சரணங்கள்,

௧, எனக்குன் இருபதம் நினைக்கவரம் அருள்
இனித்தசரதன் தனக்குமகனெனும்
மனத்திலுடன் அவதரித்தமுனிவரன்
மகத்தில் அரக்கியை வதைத்தஅரசே
எனக்கு,

௨, கடுங்கையிலேஅக விகைக்குத்திருமைசெய்து
கடத்திச்சனகன்வில் ஒடித்துச்சனகிமைக
பிடித்துப்பரகாரமனுக்குமமதையைப்
பிரித்துகொள்வர் திருக்கும் அய்யனே
எனக்கு,

௩, தரிக்கும்முடியாசுயக்குதவிகதி
கடத்திலக்குசனுடன் அடுத்துசித்திரகூட
வெற்கருள்ச்சனதிபொ டிருக்கத்துவோவன்னல்
வணக்கம்செயமகிழ் குணக்குஞ்சரமே
எனக்கு

## இராமநாடகம்.

௪, நடித்தபரதனும் ஒதிக்கமுடன்வரத்
தொடுத்தமிதியடி கொடுத்தரகுவேய
வடக்கிலஅவனையும் விடுத்துக்கிவிலே
வனத்திலவருமயிரா தனைக்கொண்றவனே
எனக்கு,

ரு, விடுக்கவியசடாயுவுக்குறவுகொலி
விடுத்துக்கொண்டபஞ்சவடிக்குச்சென்றவுடன்
அடுத்தருமகடை கொடுத்தகரனை
தனைத்திரிசிரர்முடி அவிதராகவா
எனக்கு,

௬, தனித்துவருமாரீசனைக்கொன்றொருகவந்
தனுக்காளிஅனுமனைக்கொண்டொருசுக்ரீ
வனுக்குதவிவாலி தனைப்பொருதிலங்
கைப்படையைத் தரித்ததுரையே
எனக்கு.

௭, இருக்கும்அனுமன்வாங் குனைக்கநிசரர்
இருக்கைஅறிந்தபின் எரித்தகடலிலே
பெருகஅணைசெய்து வருக்கம்வருக்கமா
பெலத்தஅரக்கரைத் தொலைத்ததெய்வமே
எனக்கு,

௮, கொடியஇந்திரஜித்தன் பிரகஸ்தன்முதலாகக்
கொன்றுமூலபல வெள்ளஅரக்கர்தம்
முடியும்கும்பகர்ணன் முடியும்ராவணன்
முடியுமபொடியாக விடுபுக்கவனே
எனக்கு

௯, வினைத்தம்பிவிபீஷணர்க்கரசுபெற
இருத்திருபுஷ்பகரதத்திலேறிவந்து
தனத்திலுயர்தரும் அயோத்தியிலேமகா
தனத்திருக்குமரகு குலக்குமரனே
எனக்கு,

---

## அபசாரக்ஷமம்.

விருத்தம்,

கனமானவரசர்மீகர்களோகம்செய்தார்
கம்பரும்ராமாயணத்தைக்கவியாச்செய்தார்
உனதாசையாலேநாடகமாச்செய்தேன்
உனதிஞ்ஞானம்யலன்உண்டாம்என்றால்

## பாயிரம்.

முனிவர்சொல்லிய ராமமந்திரத்தை
மூவருக்குஞ்சிவ ராமமந்திரத்தை
வனவேடன்மராமரா என்றேமுத்தி
வழிகண்டான்அதுகொண்டே மொழிகின்றேனே. (இ)

...-த்ருவோதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஐயனோரகுராமனேஎன்சொல்அபசாரம்உபசாரமாக்கிக்கொள்வாயே

அநுபல்லவி.

கையில்அகாதனன் ஏதேதுசொன்னாலும்
காக்கக்கடன்என்பிழையை நீக்கக்கடன்உன்பாரம்
ஐயனே.

சரணங்கள்,

க உள்ளத்தினையும் குற்றம்
இல்லாதவை சத்தம்
தெள்ளத்தெளியேன் மொத்தம்
செய்தேன்இதோ சுத்தம்
வெள்ளைக்கவி என்றும்-இனிமைப்
பிள்ளைக்கவி என்றும்-சொல்லைக்கல்லால
விள்ளாத் தருமோ-பழுதான
உள்ளாத் தருமோ-சாயித்
தள்ளாத் தருமோ-திருவுளம்
கொள்ளாத் தருமோ-அறியேன்
ஐயனே.

உ, நற்பொருள் நீதமும்
சுவர வேதமும்
வைப்புள்ள கீதமும்
வண்ணவி சோதமும்
ஒப்புத் தெரியேனே-அதிலுள்ள
தப்புத் தெரியேனே-இலக்கணச்
சொற்பிற் கறியேன்-உன்புகழ்
கற்பிக் கறியேன்-சொலவே
மெய்ப்பிக் கறியேன்-சாயி
ஒப்பிக் கறியேன்-எங்கள்
ஐயனே,

௩, உத்தமமுனி முன்னாம்
உரைக்கக் கம்பர்சொன்ன
சுத்தமிழ்தன்னைச் சின்னே

# இராமநாடகம்.

நாடகஞ் — சொன்ன
வைத்திப்படி — கண்டேன்-பெரியோர்முன்
புத்திபிசகு — கொண்டேன்-என்சாமி
பித்துச்சால — மைப்போலே
சதிக்க — ஒருக்காலே
கத்திச்சொலும் — என்மேலே
சித்தத்தில — இரக்கமே

ஐயனே,

## நூற்பெருமை.

விருத்தம்,

சதிர்பெறும்ராமகாதை சதகோடிபிரபந்தம்ஆகும்
அதிலோர் அக்ஷரம்சொன்னாலும் அருவினை போகும்என்றே
விதியினால் முனிவால்மீகி விளம்பியஉறுதிகொண்டு
மதியிலா அடிக்கமாத்திரம் வகுத்து நாடகம்சொல்வேனே, (க)

இ-தரு-சாவேரிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி,

மகத்துவம்உள்ளகதை ராமகதைஇதுவே-கேட்கவேணும்முனி
வகுத்தும்பலமனிதருக்கும்இதுபொதுவே

அநுபல்லவி,

மிகுத்தயிருந்தபுராணம் — சொல்லும்கதை
விரும்புமோமறையோர்க்கு — சொன்னால் அதை
அகத்தில் ஆக்கம்தருமே — இதுசொல்ல
அடிக்கடிசொல்லினும் — வெறுக்குமோ அல்ல

மகத்துவம்,

சரணங்கள்,

க. சேர்க்கும்பொருள்களில்என்ன இணைச்செவி ஏற்கும்பொருள்இது [மாத்திரம்
செப்பும்இம்பெருங்காப்பியம்இதன்று தெளிவதேகல்லருக்கதிர்
பார்க்குள்இதைஅறிபார்க்கெல்லாம் பிறந்தெடுத்தஉடம்பவித்திரம்
பக்தியால்இதுகற்றவர்க்குப் — பலிப்பதுராமசந்நோத்திரம்
தீர்க்கமாஇதைக் — கேட்டின்ப்ரோர்பெரும்
திருமணியில்வரு — வாமேதெவரும்
ஏர்க்கும்இதின்குணமும் — யார்க்குச்சொல்லவரும்
இசையாக்கனிச்ச — சகலமுந்தரும்

மகத்துவம்,

# பாயிரம்.

உ. தருமசாசன்கைகேரும்போதினில் ஒருமையா அனைத்தருளுமே
சற்றேயடிக்கினும்புத்திரபாக்கியமும் சகலபாக்கியமும்அளிக்குமே
பெருகுகலக்கிரகமனகாதைப்பலனைப்பிரியாமுடன் வந்து கொடுக்குமே
பேயும்பூதமும்நோயுங்குணியமும் பிணிசெய்யாதபடியிருக்குமே
மாணசெனமி — மாதிதமக்கினம்
வருந்துவார்வருந்தாத — படியின்ன
அரியமருந்திது — ஆம்என்றேமுன்னம்
ஆதிசிவன்உமை — காதிலேசொன்ன [ம்

மகத்துவம்,

உ. சிலைமதனிற்கம்மையுமுனிமுகமபெருந்திவ்வியதெய்வகதிலைமு
தேவமாலியபானிமுதலாக — செய்யும்பலபலதானமும்
ஆயிரம்வருஷம்நேமமின்றவே — தாக்கம்முதல்க்கலேக்கியானமும்
அதுவும்அல்லாமல்எனுமினக்தலும் — உதவும்அத்தனிதானமும்
சாயிகாத — முனிவன்சொல்லிலைவத்த
சரித்திரம்வால்மீகர் உரைத்தபடிகொற்ற
ராமன்அவதாரம்ஆம் — முன்னேமெத்த
நயம்கொண்டாதிச்சியம்என்றேமெற்ற

மகத்துவம்.

## அவையடக்கம்.

விருத்தம்.

முத்துமுதல்விலைஇல்லாமணிகள்பெற்ற
முதியகடல்ஆகின்றோர் அதிலேயமு
சற்றும்உதவாதமணியாம்மருக்கை
நான்போடக்களிப்பானசமுத்திரம்போலக்
கற்றவர்ளும்ராமசந்திரன்கதையைக்கேட்கும்
காதிலேநாடகமா அதனைச்சொல்லிக்
குற்றம்மிகச்செய்தாலும்குணமாக்கொண்டு
கேட்டுவீர்என்கவி பாராட்டுவீரே.

இதுவும்அது.

அரன்முடிமேல்கங்கைபகீரதன்கொணர்ந்தே
அந்நாள்செய்தர்ப்பணம்போல இந்நாள்இந்த
நரரும்அந்தக்கங்கையிலேதர்ப்பணத்தை
நடத்தமுத்திபெறுகின்றார் அதுபோல்ஆதிப்
பிரமன்முகத்தினில்வந்தராமகதை
பெருமுனிவால்மீகிசொல்லக்கம்பர்சொன்னார்
விருத்தமிப்பதத்தாலேநானும்சொன்னேன்
மேலக்கொள்வீர்என்பிழைமுதிர்த்தாட்கொள்வீரே.

உ-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இனிமேலொருக்கலேனும் - பெரியோரே - பின்னேஉமக்கு நான்தானும்

# இராமநாடகம்.

அநுபல்லவி.

மறைபுகழ்த்தாரக நாமிகதையின்னை
நகைகளுமறிந்தும் அறி யாமலும்நான்சொன்ன

பிழை.

சரணங்கள்.

ஆதியில்பிர்மதேவர் நாரதர்கோடிவிஸ்தாரம்
ஆதிகாவியமென்றிக்கதை மதித்தாரே
வேதயின்இருபத்துநாலாயிரம்ஆகும்
பிறகுவால்மீகர்சொலவே விதித்தாரே
போதாயனர்முதல்மாதவர்இக்கதையைப்
புகழ்ந்துவடமொழியால் துதித்தாரே
ஓதியகம்பர்பன்னீராயிரம்கவிஆக
உரைசெய்தமயிற்றே மதித்தாரே
காதலால்இவர்செய்ய நான்அநுக்கிப்பாலே
கருடன்பறக்கிற்கு கொசுவும்பறந்தாற்போலே
ஈடுதாருநாடகமா ஓதினேன்புவிமேலே
எட்டுமாண்டுந்தெரியா ஏழைநான்ஆசையாலே

பிழை.

வாரியைபெருவெள்ளம்பாயும்கடலிலே
வாய்க்காலும்பாயும்அன்றோ இல்லாமல்
யாவரும்கற்றோர்சொல்லைக்கேட்கிறீர்களும்
என்சொல்லும்கேளும்தமை இல்லாமல்
காவியமும்பஞ்சலட்சணமும்தெரியக்
கற்றஉங்களைப்போலே சொல்லாமல்
கேவலம்நான்இதைப்பாகவதர்படிக்கும்
கீர்த்தனையால்சொன்னேன் அல்லாமல்
தேவதேவராமன்பேரே உற்றது
தேடிஅந்தப்பேர்இந்நாடகத்தில் வைத்தது
நூலோர்டேகூடியநாருமகனும் பெற்றது
பாலேவினக்கும்அறிந்தேசொன்னேன் கற்றது

பிழை

திருத்தம்நாராயணாயநமசிவாயவென்று
செபிக்கும்மந்திரம்இரண்டும் மெய்தானே
உரைக்கும்மந்திரம்இரண்டில்இரண்டாமெழுத்திரண்டும்
ஒருராமன்ஆகவைத்த பெருமானே
அருளாச்செய்தகதைஇவைக்கும்ஆகச்சொல்லை
அறிவேனோசின்னம் சிறியேனே
பாப்பயாலேயும்சேர்க்கையும்குழந்தைகள்
பாச்சிசோச்சிஎன்றும் பாடினானே

# பாயிரம்.

செவ்வருத்தம் இல்லாச்சொல்லால்உரைசெய்தாலும்தள்ளப்
போமோஉங்களால்ஆமேதிருத்திக் கொள்ள
ஆசைச்சொல்க்கொண்டமலைவுயிருக்குமெள்ள மெள்ள
அசைச்சொல்லும்முழுச்சொல்லாம்ஆசையால்இதில்உள்ள

பிழை.

## மங்களம்.

மூலருக்கும்தேவியர்க்கும்தேவரோடு
முனிவருக்கும்முன்னிந்தக்கதையைச்சொன்ன
நாலருக்கும்தசரதற்கும்தேவிமார்க்கும்
நற்றம்பிமார்களுக்கும்சீதையோடு
ஆவருக்கும்தேவருக்கும்அனுமான்மற்றோர்
ஆழ்வார்கள்ஆரியர்இம்மடைஅனந்தன்
மாவருக்கும்இதைப்படிப்போர்கேட்போர்க்கெல்லாம்
வளம்சொல்லும்ராகவன்மங்களம்சொல்வேனே. (௯)

எ-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி

ஸ்ரீராமச்சந்திரனுக்கு செயமங்களம் நல்ல
திவ்யமுகச்சந்திரனுக்கு சுபமங்களம்

அநுபல்லவி.

மாராபிராமனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
ஈராறுநாமனுக்கு ரவிகுலசோமனுக்கு (ஸ்ரீராம)

சரணங்கள்

க, கொண்டல்மணிவண்ணனுக்கு கண்ணனுக்குமங்களம்
கோசலை குமாரனுக்கு வீரனுக்குமங்களம்
புண்டரீகத்தாளனுக்கு பூச்சகிரஆளனுக்கு
தண்டுளபத்தோளனுக்கு சானகிமணாளனுக்கு (ஸ்ரீராம)

உ, கோவைமணிவாயனுக்கு மாயனுக்கு மங்களம்
கோதண்டகையனுக்கு மெய்யனுக்கு மங்களம்
தாவுகுணசீலனுக்கு சத்தியவிலாசனுக்கு
தேவர்அனுகூலனுக்கு தெசரதன்பாலனுக்கு (ஸ்ரீராம)

ங, பிரண்டகாதனுக்கு வேதனுக்குமங்களம்
மாதனும்அன்பனுக்கு மூன்வனுக்குமங்களம்
சகலஉல்லாசனுக்கு தருமத்தகாசனுக்கு
அகிலவிலாசனுக்கு அயோத்தியர்வாசனுக்கு (ஸ்ரீராம)

பாயிரம்-முற்றும்.

சொச்சகம்-க-வெண்பா-உ-விருத்தம்-சா-ஆக (௯) தருக்கள் (எ)



திருக்கல்யாணம்.

ஸ்ரீராமஜெயம்.

முதலாவது

# பாலகாண்டம்.

## கடவுள்வணக்கம்.

### விருத்தம்

ஆதிஆய்க்கிளைமுடிவும்ஆகி
அண்டபகிரண்டமுமாய்அனந்தமாகிப்
சோதிஆயினவெவ்வேறுருப்பையிட்டுப்
புகழ்பொறைகள்தருமன்னவைம்பொலிந்துலவை
நீதிசேர்அயோத்தியில்வாழ்தசரதேந்திரன்
நெடியமாதவத்தினில்வந்துதித்தனைகள்
சோதியாயிராமன்நாடகத்தைச்
கபஞ்சொலவளமகிழ்ந்துதோடயஞ்சொல்வேனே (க)

க-தோடயம்-நாட்டைராகம் சம்பைதாளம்.

சரணங்கள்.

க, எவரும்வணங்கியராமன்-எனவும்மினைத்ததருந்ராமன்
நவிருதைக்கரசேயராமன்-நாடகத்தைச்சொலவே-ஆ-ஆ
கவளகெடிக்காதனைசாமி-கமலதிரியம்பகம்உளசாமி
பவனிவருசெகமுகசாமி பாதத்தம்துணையே-செயசெய

உ, துணிஉளபுசபெலாவனே-காண்முடிகொடிபடமோதுமால்
அனிகெயதகசரதராமநாடகம்துணைசெயவே-ஆ-ஆ
இனிதருபும்இருகாதுமேசா-நிசைமுகன்இசைபொருவில்வாழ்
மனைபிருசாஸ்வதியாதா மனாளனதுதுணையே-செயசெய

ங, கோதெநினைவர்தேட வொரு-கோசலியாள்விளையாடவரு
ஞானதிருபாசரரகைதை-நாடகமாசெலவே-ஆ-ஆ
வரசேவன்ஆம்பணாவசேருனி-மாருதிகீசருடாதிபதி
சேனையர்கோனுடனைபதின்மர்-சேவடிகள்துணையேசெய செய

ச, வாசவன்மாசகரொடுலோகாங்கிர-வாசிகள்பூசுரர்இவர்சாக்த
பூசிதர்கவனிடஆராய்க்க-புகழ்வாணிசெயவே-ஆ-ஆ
காசினியிதினில்பிதுறாடாத்த-காரயதோடவேவருவேதாந்த
தேசிகர்தாமரைமலரேனைதிருவடிகள்துணையே-செயசெய

௫, திருமகள்சானகிசேருமவாமன்செயமொடுகோசலம்வாழும்நேமன்
கருமணிமேனியர்ஆகும்ராமன்-கதையதனைசெயவே-ஆ-ஆ
குருநகையில்மேவியகாரிமாறர்-குணநிதிஆகியபராங்குசக்காரர்
மருளறுதேசிகர்மாசிலாதமலர்அடிகள்துணையே-செயசெய.

௬, மைக்கடல்வாய்விண்டுமொழிக்கவே-வைத்தொருபாணம்தூர்க்கமால்
விக்கிரமராமன்பிரபந்தம்ஆம்-வித்தையதுசொலவே-ஆ-ஆ
பக்குவம்ஆம்அன்புகொண்டுவாழ்-பத்தனாஆரும்திறங்கள்சேர்
சக்கரகோதண்டம்தண்டம்வாள்-சங்கம்இவைதுணையே-செயசெய.

## அரசியல்.

கட்டியம் - வசனம்.

அகோராசாதிராசன் மகாதேசப்பிரகாசன்
ராசபரமேசுரன்-தேசசுரமீசுரன்
ராசமார்த்தாண்டன்-ரணரங்கோதண்டன்
ராசகெம்பீரன்-கேசகம்பீரன்
பாஸ்கரகுலதீரன்-சிலாக்கியமுகவீரன்
புத்தியில்பிரகஸ்பதி-வித்தையில்சரஸ்வதி
நயகுணசீலன்-பயசனபாலன்
நல்லார்க்குமித்துரு-பொல்லார்க்குச்சத்துரு
சுசரிதகுணநேசன்-தசரதமகாராசன்
மனுநீதிகோணாமல்-சனவேதைதோணாமல்
ஆறில்ஒருகடமைகொண்டு-மாறுபடுபகைவென்று
திங்கள்மும்மாரிபெய்ய-எங்கும்முப்போகஞ்செய்ய
செங்கோல்முகம்சாயாமல்-வெங்கோல்முகம்பாயாமல்

அறுபதினாயிரம்வருஷம்பசுவும்புலியும்ஒருதுறையில்நீருண்ணராச்
சியபரிபாலனம்பண்ணின கீர்த்தியைச்சொல்லுகிறமார்க்கம். (௨)

விருத்தம்,

மகாராசன்அசமகாராசன்ஈன்ற
மகாராசன்மிகுசூரியவங்கிசராசன்
சுகராசன்கௌசலைகாயகிகைகேசி
சுமித்திரைஆம்தேவியர்கைதொட்டராசன்
மிகராசர்பணிந்திடஇந்திரனைக்காத்த
விசயதசரதராசன்அயோத்திவாழும்
செகராசன்ஒருவன்மனுநீதியானே
தேசம்எலாம்ஒருகுடைக்கீழ்ச்செய்தாண்டானே, (௩)



௨-தரு-சாவேரிராகம்-திரிபுடைதாளம்

பல்லவி.

ராசாதிராசர்க்கும்-ராசனாந்தசரத-ராசனாஇருந்தானே.

அநுபல்லவி.

தேசதிலகன் அயோத்திநகர்க்கொரு
திலகன்ரவிகுல திலகன்ஆகவே—ராச

சரணங்கள்.

மந்திரதந்திரமும் வித்தைபலயுத்தமும்
மகன்களும்தினம் செழிக்கவே
வன்புலிமெய்பசுவும்ஓர்துறைநீர்
உண்டுகொண்டுபயம் ஒழிக்கவே
இந்திரனதும்குபேரதனங்களும்
எவரும்பழித்தென்று பழிக்கவே
எங்கெங்கும்முப்போகம்விளையவே
திங்கள்தோறும்மும்மாரி கொழிக்கவே—ராச

நாலுவர்ணஆசிரமங்களும்சொன்ன
தன்மைபூண்டு ஞாயமலே
ஈக்கும்வேறுள்ளஉயிர்க்கும்பயதுகள்
கடுவிலே தேயாமலே
கோலம்ஆமிருகமும்பறவையும்
குழிகடக்க மேயாமலே
குடியில்ஆறில்ஒருகடமைகொண்டுசெங்
கோலின்முகம் சாயாமலே—ராச

மழமங்கையருக்கும்மறுமன்னவருக்கும்
மார்பும்முதுகும் கொடாமலே
வாளும்அஷ்டதிக்கும்தனதாக்
மன்னவிட்டடிமை எடாமலே
அறுபதாயிரமவருஷமும்வ
காதலத்திடம் விடாமலே
ஆரும்மனதின்விசாரத்தால்ஆ
ராய்ச்சிமணிமை தொடாமலே—ராச

## சக்கிரவர்த்திமக்கள்வேண்டி வருந்தல்

விருத்தம்.

இருந்தகசரதராசன்கெடிசொலாய்ப்புவிஆண்டேன்
இனிமேல்இந்தப்
பெரும்புவியைஆள்வதற்கும்நரகத்திலேசேர்ப்பதற்கும்
பிள்ளைகாணேன்
அருந்தவனேகுலகுருவேவசிஷ்டமுனியேபிள்ளை
அதைநாளங்காணே
வருந்தவந்ததெவ்வகையைமொழிஎன்றான்இதற்கென்ன
வழிஎன்றானே (௭)

௨-தரு-அசாவந்திராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பிள்ளைஇல்லாதபாக்கியம்-நான்-பெற்றிருந்ததென்னநிர்பாக்கியம்.

அநுபல்லவி.

வள்ளலேசெங்கமலநடைக்கன் ஒருகாலே
வசைகொண்டேன்தசரதன் நான்புவிமேலே
கன்னிஆனதுகெடு வாந்ததாலே
காய்உண்டோக. ண்டோ அதுபோலே-பிள்ளை

சரணங்கள்.

௧. மறுவில்லாதஇந்தருரிசவம்சம்இது
வளரும்வம்சம் ஆச்சே-இது
மழையேய்ந்தமறைந்தால்போலவன்
மட்டிலேநின்று போச்சே
அறுபதாயிரம் வருஷமும்வருந்தும்
அரசுதான்இனி ஆளக்கொண்டிருந்தும்
குறைவில்லாதஅந்த சஞ்சீவிமருந்தும்
கொடுக்கும்தெய்வமும்நீ தானேகிடைத்திருந்தும்-பிள்ளை

௨. பெருக்கக்கொண்டதல்லமன்
பெறவதொன்றும் காணேன்-மிகு
பிச்சர்போல்கெடுநாளும்உண்டஉண்ட
ஏச்சிலேஉண்ணல் ஆனேன்
விருத்தன்நான்இனித் தவமேசெல்ல
வேறும்அவ்வளப்புவி ஆளஆசிறப்பல்ல



இருந்தும்வாழைஆடி வாழைஆய்ப்புல்ல
இவன்மகன்இவன்ஆம் என்றுபேர்சொல்ல-பிள்ளை
மோக்கால்முத்தியும்வரும்பாதத்திலே
முத்தியுங்கூட வருமே-மேலே
சாயந்தால்உடம்பெங்குங்குளிருமே
தழுவஇன்பக் தருமே
வாய்ந்தபொன்னுலக களவும்போய்ச்சனி
மண்டலமும்நிறுத்திக் கொண்டேன்புவிதனில்
சந்திரனேன்இல்லையே ஒருபிள்ளைக்கனி
என்னவிதியென்ன வாசல்எனக்கினி-பிள்ளை

## பெருமாள்சந்நிதியில்தேவர்கள்முறைபாடு

விருத்தம்,

மன்னவன்ஆம்தசரதபூபதிஇவ்வாறு
மக்கள்இல்லாத்துன்பத்தைவசிஷ்டனோடே
சொன்னஉடன்அந்தமுனிவனும்தியானித்தான்
சுரர்முதல்ஆனவர்கள்மகமேருமேலே
சின்னஅரக்கரைநடுங்கிவாழ்த்தும்போதா
சிறைக்கருடன்மீதினில்அச்சுதனும்வந்தான்
பொன்னின்மலர்அவன்பதத்தில்இறைத்தேகண்ணீர்
பொழிகின்றார்அரக்கர்துன்பம் மொழிகின்றாரே.

௩-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கடைக்கண்ணால்இரங்கிப்பார் ஐயா-பார்த்துக்
காராவிட்டாலிஇனிமேல் ஆர் ஐயா

அநுபல்லவி.

அடைக்கலமானோம் வந்தோமே-நாங்கள்
ஆலைக்கரும்புபோலே நைந்தோமே-சாமி—கடை

சரணங்கள்,

௧. சொர்க்காதிபுவனங்கள் வாழ்ந்தாலும்-கொண்டு
நரகக்கும்பதற்னன் அமரர்கள்-மற்ற
பக்கம்இந்திரசித்தென்னும் பெருங்கோவி-ஆளப்
பண்ணிவைத்தானே ராவணன்பாவி

மைச்சுக்குள்ளே அகப்பட்ட — என்றுப்போலே-அரக்
கைக்குள்ளே அகப்பட்ட — எங்கள்மேலே-உடா.

கடை.

ங. அளகேசன்புஷ்பகம் — தன்னைவிட்டான்-இலங்
கையிலேசூரியன்தேரும் — வரவொட்டான்-மெத்தத்
தளராஇந்திரனைக்கூட்டிச் — சிறையிட்டான்-அரக்கன்
சருவகொள்ளை அடிக்கத் — தலைப்பட்டான்
எளியோர்களைஇப்படி — என்றடுக்கல்-ஆமோ
கிளியைவளர்த்துப்பூனைக் — கிட்டக்கொடுக்கல்-ஆமோ

கடை.

ச. பாவிஅரக்கன்பேச்சே — மேலாச்சு-நாங்கள்
படைத்தபலங்களெல்லாம் — மேல்ப்பூச்சு-கல்ல
பூவையன்று அரக்கன் — கைவிச்சு-வெள்ளிப்
பொருப்பேஅறியும்இனி — என்பேச்சு
ராவணன்வதைக்கிறான் — எங்கள்மேல்என்ன-கண்டோ!
தேவரீரேளாவிட்டால்த் — திக்குத்திசையே-துண்டோ

கடை.

## தேவர்களுக்குப் பெருமாள் அருளிப்பாடு

விருத்தம்,

இசையும்வானவர்கள்கூடி இப்படிசொல்லமாயோன்
அசையும்வாள் அரக்கர்தம்மை அகற்றுவோம்அஞ்சவேண்டாம்
தசரதன்மதலை ஆகித் தரணியில்வருவோம்நீங்கள்
திசைதொறும்கவிகளாகிச் சேருமென்றுரைசெய்வானே. (சு)

ரு-தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி

அவதாரஞ்செய் — திடுவீரோ-நீங்கள்
அரக்கர்பயத்தை — விடுவீரோ

அநுபல்லவி.

சேஷனாதியும்சக்கிரீவனும் — ஆகிக்
சங்குமூரிவனும்கதிரோனும் — போகி—அவதார

சரணங்கள்,

அநிலம்ஆனருத்திரன் — அங்கதன் அநுமசிலன்
அக்கினியேசேனைக் — கதிபன்ஆனநீலன்



சதுர்முகப்பிரம்மாவே — சாம்பவன்எனுங்காவலன்
தரும்உபேந்திரன்வாலி — தனக்குப்பாலன்-ஆக

அவதாரம்.

ட. சங்கரும்சக்கிரமும் — சேஷனும்பரிவாரத்
தம்பியர் ஆய்வரத — ஆனோரம்பூலோகத்
இங்கன் ஆனதசரத — ராசன்குறைபோகச்
சுதக்கரவருவோம் — எவரும்அதின்முன் ஆகப்-போய்

அவதாரம்.

ஈ. வானரவடிவாறும் — மானிடவடிவாலும்
தான் அல்லாதாக்கள் — சாகாதொருக்காலும்
ஆனபடியிதுவே — அனைவரும்புவிபோதும்
காணத்திருவிருப்பக்கு — காகுத்தனெம்மேலும்-வந்து

அவதாரம்.

## பெருமாள் திரு அவதாரம்

விருத்தம்.

இவ்வகையாய்மாயவன்முன்னடக்கவென்று
என்னணிமுனிகலைக்கோட்டுமுனிவனாலே
அவ்வகை ஆம்புத்திரகாமேஷ்டிதன்னை
அயோத்திஅரசனைக்கொடுசெய்வித்தபோதில்
மைவளரும்பாம்பணைமேல்ப்பள்ளிகொள்ளும்
பரமனேதசரதன்செய்பாக்கியத்தாலே
மெய்வகைசேர்உலகெல்லாம்மகிழ்விக்கவான
விதிசெய்வான் அவதாரம்அதுசெய்வானே. (எ)

கூ-தரு-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

பரப்பிரம்மசொரூபமே ஸ்ரீராமன்ஆகப் பாரில்வந்ததுபாரும்,

அநுபல்லவி,

வரத்தினால் அரக்கரை வானத்தில் — ஏற்றவும்
வானத்தில்த்தேவர்கள் மலர்மாரி — தூற்றவும்—பரப்பிரம்ம

சரணங்கள்.

க. புத்திமுனிவன்கலைக்கோட்டுமாமுனி — தேற
புண்ணியயாகபலன்

சத்தியதசரதக்குமரனெனுமிராம
சம்பச்சூடலன்பிறை — வேற
சித்திராபாசம்கவிகடகம்
செழும்புனர்பூசம்தேன் — வேற
ஒத்தைக்கிர... கள்காலவரும்பதினொனறில்
உச்சத்திலுறவரும் — வற-ஆதி-பரப்
உ. சீர்ஆரும்லட்சுமணன் சத்துருக்கன்சுபித்
திரைவயிற்றில்நின்று — போ
பாரார்புகழ் கைகேசிவயிற்றில்நின்று
பரதன்வந்துபுவி — சேர
ஆராலும்கொள்ளாத ஆனந்தம்மேல்கொண்டு
அம்புவியோர்இடர் — தீர
கார்ஆரும்குழல்வல்லி யிருக்குமேலான
கௌசலைகண்மணி — கூர-ஆதி-பரப்
ங. தேவர்முனிவர் பகைதீர்க்கோமென்று
சென்னியில்நுதமாய் — முடிக்க
பூவுலகத்துள வேதியரெல்லோரும்
புகழும்வேதாகமம் — படிக்க
பாவிஇலங்கையின்மேல் சூரியன்தேரிலுள்ள
பச்சைப்பரிபேழும் — நடிக்க
ராவணன்ஆதி இருக்கின்றராட்சதர்
எவர்க்குமிடுக்கண்கள் — அடிக்க-ஆதி-பரப்

## கௌசிகர் ஸ்ரீராமனைக் குறித்துக் கேட்குதல்.

விருத்தம்.

மைந்தர்இவ்வாறுவந்து வசிஷ்டனாற்பெரும்பெற்றார்
அந்தநாள்விசுவாமித்திரன் அணிதசரதன்முன்வந்தான்
இந்நாள்என துவேள்வி ராமனால்முடியவேணும்
தந்திடஇராகவனை தாவென்றான்காவென்றானே.

எ-தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி

ராமனைத்தருவாய்-செகாச்சக-ராமனைத்தருவாய்.

அநுபல்லவி.

காமசம்பிசெய்யாதே-தசரதேந்திரா — இப்போதே—ராம



சரணங்கள்

க. ஆரண்யகம் — செல்வேனா
அரிமுன்னே — சொல்வேனா
இராஸ்யதப்பிறவிலேவிட்
டொவராய்ப்பகை — வெல்வேன்—ராமனை
உ. தாடகைப் — பாவி
கவிர்த்தாளென் — கேள்வி
பிடைவராமல்காத்தால்ப்
பிழைக்குமென் — ஆவி—ராமனை
ங. உம்பர்வி — சாரம்
ஒழிக்கஅங் — கோரம்
சம்பானைகொன்றுமே
தயவாய்இங் — கோரம்—ராமனை
ச. கோபத்தில் — ருத்திரன்
குருவிவை — மித்திரன்
ஆபத்துகாக்கவேணும்
அதனாலுன் — புத்திரன்—ராமனை

## சக்கிரவர்த்தி அதைமறுத்தல்

விருத்தம்,

சொல்லிடுமுனிவன்சொல்லக் கூடித்தனன்தசரதேந்திரன்
இல்லிதுவேள்விக்காக்கச் சிறுபிள்ளைராமனென்றான்
சல்லியம்செய்யும் அந்தத் தாடகைதனைநான்கொல்வேன்
பல்பல ஆயிரம்கோடி பாரெனப்பாங்கேன்னப்பனே. (௯)

அ-தரு-ஸ்ரீராகம்-அடதாளசாப்பு,

பல்லவி,

ராமன்வருக்கு-இருக்கோ அவன்வர — வேணும்
நான்வருகிறேன் — காணும்

அநுபல்லவி.

பூமிஅரசனென்றுநான் — இருக்கிறேன்னசொன்னேன்
சாமிஅவன்வந்து — குழந்தைப்பிள்ளை-ராமன்

சரணங்கள்

௧. என்இந்த — க்ஷேத்திரம்-தாடகை
ஜெக்கெம் — மாத்திரம்
வானுளோர்கள்வந்து தடுத்தாலும் — அடிக்கிறேன்
நானேவந்துன்வேள்வியை — முடிக்கிறேன்—ராமன்

௨. பேயைக்கொல்வ — தரிதோ-காரியம்
பெரிதோவீரியம் — பெரிதோ
ஆயுதம்பிடிக்கறியாய் கேளாய்ஒரு — சொல்லே
வாயிலமுலைப்பால் மணம்மாற — இல்லை—ராமன்

௩. கலேஎன் — கொல்வாய் என்முன் ஒரு
காருமவாள் — கண்டாய்
அவளையும்படையையும் அடிக்கிறேன்பாராய்பாராய்
இவளுல்என்னளமுந்திரு — வாராய்வாராய்—ராமன்

## வசிஷ்டர் தசவுரைத்தல்

விருத்தம்

இனமதில் அயோத்திவேந்தன் இதுசொல்லவிசுவாமித்திர
முனிவனும்கோபம்செய்தான் முனனின்றவசிஷ்டன்கண்டான்
உனதுமைந்தனுக்குமன்றோ யோகநாள்வந்ததென்று
கனமுடன்விரிதுச்சொல்லிக் காட்டுவான்கூட்டுவானே, (௧)

௬-தரு-முகாரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

மோசம்வாராதையா-நான்சொன்னவார்த்தை-மோசம்வாராதையா.

அநுபல்லவி

தேசிகன்பின்னேராமனைக் கூட்டிவிடுவாய்சொன்னேனே—மோசம்

சரணங்கள்,

௧. உப்புநீர்மேகம்சேர்ந்தால் — உலகில்ப்பிரவாகம்
அப்படிஉன்மகனுக்கு — அடுத்ததேயோகம்-மோசம்

௨. மறுவுண்டோவசிஷ்டன்சொல் வார்த்தைக்குமாண்டோ
பொறுபொறுமுனைப்பானைப்பதைப்பாருமுண்டோமோசம்



௩. [illegible] — சொல்லுகேளைய
அதிக்குருவுக்குத்தக்கிம — [illegible]-மோசம்

## கௌசிகர் இராமருக்கு நீதிசொல்லுதல்

விருத்தம்

முனிவசிஷ்டன் இவ்வாறுசொல்லவே தன்
முறைமையாய்ராமனைலட்சுமணனோடே
இனிதுடனழைத்துக்கூட்டிவிட்டான்மன்னவனுமென்று
இருவருமஸ்திரங்கொண்டார் வெளியில்பட்டணம
தனிகடந்தார்வேள்விக்காடுவரையுமவந்தானை
சாரியும்பென்னானகிலேக் காரமுனிவன் அந்த
நீதிவழிகதான்பொறுமையோடு நல்லராமா
கேளென்றான் இப்பொருளேகொள்ளென்றனே. (௭)

௭-தரு-கல்யாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பெண் இவள் அல்ல — ராமா-தாடகை
வண்ணமங்கொண்டகமன் இவள் — ராமா

அநுபல்லவி.

மண்ணில்மெத்தவுமிரை — வைத்திகன்தீமை
கண்ணிலக்கண்டதுண்டோ — காருணைத்தம்பியோடு—பெண்

சரணங்கள்

௧. இந்தமாமுனிவர் — என்றொருபோர்தரிக்
கிருக்குமதாடக்கிவள் — பெருந்தமக்கதரிரி
அட்டகாசம்செய்தால — அத்துருபாகனிரி
அண்டகடம்னைக்கும் — இடிபுமேஅதிகா
எட்டுத்திசையிறுமுறுமு — முட்டுமேநுவன் அதனி
முட்டுறுவமிஷ்யுமினைக் — கட்டுமேதானிதனி
எட்டியும்பார்க்ககூடுமோ — கிட்டுறுவனிடனி
கிட்டுவாய்சொல்லுவேனுமோ — மட்டிலாய்பாவசன்மனி-பெ

௨. அதிசயம்குணமுருவோய — குணத்தாலும்அட்டும்
அதியோடுமுருத்தை அழித்ததுமஅழிக்கட்டும்
மானயாவனமேபோரிசொல்லுமுனிவர்க்குமபயந்துமட்டும
வறுவலன்மையுதன்னினத்தார்கள்நத்தையட்டும்

தூயதிசைஅனையெட்டும் சனநம்பாய்விழக்காட்டி
வாயில்நூறுபல்லிறுக்கி மேலடக்குவாளைகூட்டி
தீயகடைவாக்கினிபோலப் பாயுவாள்கைகளைநீட்டி
பேயையும்பிடித்தின்னும் பெய்யனவந்தலெள்ளாட்டி
பெண்.

௯. ஒருகுமரிஎன்றும்பெண்ணைப்பினக்தான்இந்திரன்அப்போது
ஒருபெண்கியாகியையயன ஒழித்தானேபுவிமீது
பெருமானேஇவள்அந்தப் பெண்ணெனவுங்கூடாது
பெண்ணென்றால்பேயும்இரங் குமேஅதிவளுக்கேது
இருடிகள்உடமனைமெக்கவுரிசைஎன்றகன்றிடுவோரோ
பெருமகம்செய்வோரைக்கொல்லவருகிறாள்இதென்னமுன்னோ
கிருதிஇவளைப்பெண்என்று கருதுகிறாய்என்னகண்டோ
ஒருகொடியில்கொல்லவேணும்குருமொழிதனக்குமரன்மோ
பெண்

## தாடகைமுதல் ஆனவர்கள்வதம்.

விருத்தம்

செய்திகளைஇவ்வாறுரைக்கச் சிரமேற்கொண்டோகுராமன்
வெய்துலனைக்கிக்குருவிசுவாமித்திரன்சொல்லேவேதச்சொல்
மையமனனேமகம்காக்க வரிவில்வளைத்தான்தாடகையும்
எய்தபாணம்பட்டுருவி எழுந்தாள்மலைபோல்விழுந்தாளே, (௪௨)

௧௧-தரு-நாதநாமக்கிரியைராகம்-ஆடதாளசாப்பு,

பல்லவி.

கொடியதாடகைபாவிவிழுந்தாள்-பொல்லாக்
கொடியதாடகைபாவிவிழுந்தாள்

அநுபல்லவி,

கொடியதாடகைபாவிவிழுந்தாள்-செம்பொன்
முடியன்ராவணன்வெற்றிக்கொடிவிழுந்தாற்போல்-கொடிய

சரணங்கள்

௧, உணர்ந்ததேவர்துன்பம் மறக்க-காலன்
இருக்காலும்காறுதருகிகண்டு பறக்க
அரக்கர்ஆதிக்கங்கள இறக்க-நல்ல
அநுகூலகாலம்மெய்முனிவர்க்குப் பிறக்க-கொடிய

௨. முதண்டகோடிக்கப் பாலே-ஓசை
முழக்கவிசுவாமித்திரன்சாலேக்கிப் பாலே



கோதண்டபாணிஅம் பாலே-கில
குலைந்துபுரண்டலறிக்கொண்டேப் பாலே—கொடிய

௩. கடலேவஞ்சனைமேயம் தடுக்க-சுவாமி
காள்கொண்டுமுதல்பபலி அரக்கரைக் கொடுக்க
கடினசுவாகுபட்டுப் படுக்க-ராமன்
சினையாலேமாரீசன் கடலோட்டம் எடுக்க—கொடிய

## அகலிகை சாபவிமோசனமும் சரித்திரமும்.

விருத்தம்,

தாடகைதான்விழுந்தபின்புதேவர்சொலலக்
சகலபண்டங்களுக்கொடுத்தேமுனிவர்எல்லாம்
கூடவரக்கொளசிகையேமுதல்ஆம்தீர்த்தம்
கொண்டாடிகௌதமன்ஆசிரமம்சேர்போதில்
காடதிலேரகுராமன்பதத்தூள்சிந்தக்
கல்லுருவபோய்நல்லுருவாய்விளங்கிநின்ற
பாடகக்கால்அகலிகையைஇவள்ஆர்என்னப்
பரிந்துவிசுவாமித்திரமுனிபகர்கின்றானே, (௪௩)

௧௨-தரு-ஆசாவேரிராகம்-ஆடதாளசாப்பு,

பல்லவி

தேவிஇவள்ராமா - கௌதமன்-ஆவிஇவள்ராமா

அநுபல்லவி.

ஆவலின்றல்ப் பண்டு
மேவல்மனம் கொண்டு
அநகரம் காதிய
இந்திரன் கூடிய—தேவி

சரணங்கள்

௧, மாபதிவிரதக்கன்னைஅடக்கலை பெற்ற
மாமுனிகண்டுவெகுண்டுபயம் சுற்ற
கோபத்தினால்இடும்சாபமொழி மெத்த
கூறையிலேகுமபாறைவடி வுற்ற—தேவி

௨, வெம்மியமாமுனிகன்னிக்னதிரப் பட்ட
வேளையில்கண்டுபொறுமல்முனி இட்ட

அம்பொன்முடிதொட்டடிவரையும் — முட்ட
ஆயிரம்கண்அந்தவாசவனுக் — கிட்ட—தேவி

௩, ஞானத்திருக்குடன்ஐயனைப்போக் — கெந்த
கன்மையுள்ளமேலும்அறிவேன்இப்போ — இந்த
காலத்திலேஉன்றன்பாதத்தாலென் — இந்த
கல்லுருவம்நீக்கல்லைத்தாய் — வந்த—தேவி

---

## ஸ்ரீராமர் சீதையைக்கண்டு ஐயுறல்

விருத்தம்,

இட்டமாம்விசுவாமித்திரன்இந்தச் செதியுரைக்கக்கேட்டுமனன்
உடனேகேட்டுமிதிலையிற்போய் ஒருமாளிகைமேடையிற்சீதை
மட்வாள்காணத்தகன்மேல் அந்த மயிலைத்தானும்ஸ்ரீராமன்
கட்கிள்வாய்வருசெந்திருவனைப்போல் கன்னியவிரகம்கொண்டானே (ஸ்ரீ)

௰௨-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்,

பல்லவி,

ஆரோஇவர்ஆரோ - என்ன-பேரோஅறியேனே.

அநுபல்லவி.

காருலாவும்சீர் — உலாவும்மிதிலையில்
கன்னிமாடந்தன்னில் — முன்னேநின்றவர்—ஆரோ

சரணங்கள்,

௧, பண்ணிப்பதித்தாற்போல் — இருக்குதுமுகம்-கூடப்
பாக்கியர்கள்இவரும் — அரைத்தனமும்
எண்ணைத்தாழும்மைத்தாழும் — பங்கயப்
பெண்ணைப்போலக்கண்ணில் — காணும்மங்கையர்—ஆரோ

௨, பாக்கியமென்பதிவர் — தெரிசனமே-அதிங்கே
பலித்ததென்னபுண்ணியமோ — மனமே
நோக்கும்விழியும்நீக்கமாய்இன்னமும் — பெண்கள்
பார்க்கப்பார்க்ககோக்கும்கொள்ளுமே — கண்கள்—ஆரோ

௩, சந்திரபிம்பமுக — மந்தாசே-என்னைத்
தாமேபார்க்கிறார் — நெஞ்சமே
அந்தகாலத்தொந்தப்போலே — உருகிறார்
இந்தகாலில்வந்துசேர்ந்தவை — தருகிறார்—ஆரோ



## கௌசிகர்ஸ்ரீராமர் வரலாறு சொல்லுதல்

விருத்தம்.

மனதில்இத்தப்படிநினைந்து மன்னன்எழுந்துஅமைகம்செய்யும்
கனகமணிமண்டபத்தினிற்போய்க் காகுத்தனும்தம்பியும்இருக்கக்கண்டார்
அனையகாலத்திலவர்பெருமை அருமைதெரியவாய்என்றே
சனகனுரைக்கக்கௌசிகன்உத்தமப்பாணிவரம்விரிப்பானே

௰௩-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்,

பல்லவி

ஆரென்றெண்ணுமோவேனேனும்-இவன்-அதிசயங்களைச்சொல்லக்கேளும்

அநுபல்லவி.

சூரதிருவன் ராமனெனும்பேரன்
கருணைநிரம்பி — குலகுமாரன்—இவனே (ஆர்)

சரணங்கள்,

௧, ஆதியில்தசரதன் புத்திரகாமேஷ்டி
யாகம்செய்யவென்று — தொடுத்தான்-வந்த
பூதம்கொடுத்தபாயசத்தைக்காலாகப்
பொன்னரசிசகலருக்கும் — எடுத்தான்-அதில்
சோதிகோசலைக்கொன்றும் கைகேசிக்கொன்றும்
சுமித்திரைக்குரண்டும்பாக் — கொடுத்தான்-மூத்த
பேதைகோசலை இடத்தில்ராகவன்
பிறந்தான்என்கவலையை — விடுத்தான்-இவனே(ஆர)

௨. தலைநம்பிபரதன் லட்சுமணன்சத்துருக்கன்
தம்பியர்இவனுக்கு — நேயம்-மிகக்
கொலையாளன்சுபாகுவையும் சேனையையும்இவன்அம்பு
கொண்டுபோனதென்ன — மாயம்-தான்
உலையாதென்வேள்வியை முடித்தானேஇவன்அப்பால்
உருண்டதேதாடகை — காயம்-மெத்த
மலைபோலேவந்ததும் பனிபோலேபோச்சித்த
மகாச்சன்செய்தசு — காயம்-இவனே(ஆர்)

௩. தாரத்தும்சாபம் அகலிகைக்குக்காலினாலே
துடைத்தானேஅவள்உடல் — மாசை-சொல்லும்
பெருக்கமென்னஇவன் பிறக்கவேஉலகெங்கும்
பிறந்ததேமங்கள — ஓசை-உங்கள்

பருத்தவில்லிவன்கைக்குப் பேறுமோபோதாதோ
பார்க்கவேணும்இன்றோர் ஆசை-இங்கே
வாச்சொன்னதும்லாக் கிடைக்குமோலவுவிலே
வகதாவேனீங்கள்செய்த பூசை-இவனே(ஆர்)

## ஸ்ரீராமர் வில்வளைத்தல்.

விருத்தம்,

புங்கவன்ஆம்முனிவன்இந்தவாறுசொல்லப்
பொங்கிவில்லை அருமையிறுவிரப்போலே
அங்குவரும்படிசெய்தான் இதைதானெற்ற
ஆரும்என்றுல்மருமகனே ஆரும்என்றான்
செங்கமலமும்சனகனுடன்வின்னும்மன்னும்
திடுக்கிடவெல்லாரும் ராமன்கையால்
தங்கமுள்ள அத்தவில்லை வளைக்கத்
தொடக்கண்டார் இரண்டுதுண்டாய்விடக்கண்டாரே, (கஎ)

கஅ-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வில்லைதாண்டாய்-ஒடிந்து-விழுந்ததேபாரில்.

அநுபல்லவி.

கல்வியாளராமன் அனகன் கையால்மிதிலையில்வாழ்சனகன்-வில்

சரணங்கள்,

க. சுத்திபெறும்முனிவோர்கள்மங்கள சோபனங்கள்பலகூற
பத்துத்திசைவானவர்எல்லோரும் பனிமலர்மாரிகள்தூற
சித்தப்பிரமையாலேதால்இரு திசையானைகள்தலைமீற
சுத்தப்பிடி இடையாள்சானகிகாதல்என்னமனதுநிறைவேற-வி

உ. சிங்காரமாக்ரவிகுலமே ஜிலாக்கியமென்றொளிவீச
உங்காரம்செய்தாசர்எல்லோரும் ஒருத்தர்போலமுகம்கூச
இங்கேபெண்கைசெய்தவப்பலனை லபிக்குதென்றுபலர்பேச
செங்காதரன்அல்லாலொருவருக்கும்கிடைப்பதுண்டோதமகாப்பிரயாச-வி

ங. தருமாகமசாஸ்திரகோடிகளு சகலவேதங்களும்பாட
கருமாமுனிவிசுவாமித்திரன்சொல் மறைவில்லாதபடிகூட
ஒருகாலுமிந்தவாசகன்கிளை ஓர்க்கொளுமல்செய்மூட
நிரமாமுனிஇவன்னகோதண்ட இட்சாகுருஎன்றுகொண்டாட



## மிதிலைக்குச் சக்கிரவர்த்தியின் எழுச்சி

விருத்தம்,

தன்ஆதியவில்லைதான்முரிக்கபின்பு
கடைத்தூதர்களியானைஇலகாட்ட
அன்னவன்தானும்சாதனும்பானையேறி
அநுராஜன்கத்தோமியதும்படையுங்கூடத்
தன்படையுசக்கிரவர்த்திபிறவுமேசென்றான்
சனகசனகதுரங்கதனக்தேறுடே
என்ஆதியகளிப்பாகவுமேமேற்கொண்டே
எதிர்வந்தான்உடன்மிதிலைப்பதிவேந்தனே (கஅ)

கக-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்,

பல்லவி,

ராசன்தானும்தசரதராசன் சனகமகாராசன்பதிக்குவந்தானே

அநுபல்லவி,

வாசவன்புகழ்ராசத வேசன்கலியாணத்தை
வாசகமகனறிவித வாசகேசமடன்படி--ராசன்

சரணங்கள்.

க, கொட்டும்இடும்மிகமேளம்-அட்டம்இடும்தாளம்
எட்டியகுதிரையும்-கட்டியதேர்களையும்
இட்டமுள்ளராசரும-அட்டாளதேசரும்சூழ்
பட்டவர்த்தனர்இளைக்க கப்பனம்
இடிமுழக்கவரவாகக
வட்டவெண்குடையும்முடிகளும் துலங்க
மகாதோரணங்கள்புறைபுறை இலங்க
சட்டம்ஆனதிசை எட்டினமேலும்பகை
மட்டில்லாமல்கூட கட்டியம்போட-பெண்கள்பாட-கொண்டாட
ராசன்

உ, உச்சமாணிக்கத்தாலே-தச்சபல்லக்கின்மேலே
அச்சுதன்தாய்முதலா-மெச்சியதேவிமார்கள்
இச்சையால்முன்னேபோ கச்செய்தபின்னுகவே
பச்சைப்பைம்கிளிஒன்னவே பாங்கியர்
மொய்க்கக்கொண்டுதன்னவே
வச்சிரமானினை மலர்முகம் மின்ன
மன்னுமவின்னும்பன்ன அதிசயம் என்ன

உச்சிமீதுகரம் வைச்சுமன்னவர்கள்
எச்சரிக்கைபேச-கவரிவீச-வெகுவிலாச-உலாச
ராசன்

௩, மெத்தப்பெருஞ்சேனைகள்-சம்மத்துந்துமிபேரி
சத்தமேகம்போல்ஆர்க்க-அத்திசைசையிலேநின்று
சத்திரபதிகனகன்-செற்றிசேர்ஆகவர
முற்றியகடல்மேலே புகுந்த
மற்றொருகடல்போலே
பத்திஆகஇரு படைகளும் கலந்து
பார்த்தாண்டு ராசருமமுகம் மலர்ந்து
வெற்றிவிறிய புசத்திலேஅவனை
ஒற்றிஆனைத்துமாற்றி-மிருகதகீர்த்தி-படைத்தமூர்த்தி-அயோத்தி
ராசன்

## ஸ்ரீராமர் பவனிவருதல்.

விருத்தம்

வந்ததசரதராசன்தன்னைமுன்னே
வந்திருந்தாரனுந்தம்பியும்போய்க்கண்டார்
அந்தஇருவருந்தாதை அருளைக்கொண்டார்
அரசர்இருவரும்பின்னேவரமுன்சென்றார்
பந்தம்உள்ளமித்திலைவீதியிலேதேர்மேல
பவனிவருமராமனைக்கண்டாசைகொண்டு
செந்திருவைநிகர்ஆனபெண்கள்பின்னே
செல்லுவார்மதிமயங்கிச் சொல்லுவாரே (௧அ)

கள-திபதை-சௌளிபந்துராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்

௧, சோதிசெடுக்தேர்மிதிலை வீதியினில்வரக்கண்டு
சுவாமிமுகம்காணவந்தார் வெகுமாதர்
பூதலந்தனில்இந்தஊர் மாதவம்என்னசெய்ததோ
புண்ணியன்இங்கேவந்தானென்றார் வெகுமாதர்
௨, ஆடகலோகத்தமுதை ஈய்கள்மொய்த்துக்கொண்டதுபோல்
அய்யனைமொய்த்துக்கொண்டார் வெகுமாதர்
கோடைதனிலேதண்ணீர் ஓடைக்கண்டமான்கள்போலக்
கூடிக்கொண்டோடிவந்தார் வெகுமாதர்
௩, ஆழியும்வளையும்செம்பொன் ஓலையும்மாலையும்விட்டாள்
ஆடைவிடாமல்நின்றாள் ஒருமாது



கேழ்விமுறையில்லையோ சுவாமிஉன்முன்னேஅம்பாலே
கிழிக்கின்றான்மாரன்என்றாள் ஒருமாது
௪, பெருத்தமலைபோல்வில்லை ஒடித்தாயேசீதைக்காக
பெலத்தவன்நீயேயென்றாள் ஒருமாது
வருத்தமோமாரன்கையில் கரும்புவில்லைஒடிக்க
மாட்டாயோசுவாமியென்றாள் ஒருமாது
௫, கண்ணுக்கோருருவாய்ப்பார்ப்போர்கண்ணில்எல்லாம்தோன்றுமிவன்
கண்ணனேஆகும்என்றாள் ஒருமாது
மண்ணும்விண்ணும்கடந்தானைக்கண்ணால்வளைத்துக்கொண்டாளே
வைதேகியேபெண்என்றாள் ஒருமாது
௬, சாய்க்கொருவரையும்காணாள் சாமிதனையேகண்டாள்
தனியனோராமன்என்றாள் ஒருமாது
வார்த்தையும்உடைமைகளும்பூந்துகிலும்சோர்ந்தாள்உயிர்
மாத்திரமசோராமலநின்றாள் ஒருமாது
௭, இங்கேஉளம்புகுந்தான் கண்கதவினாலேமூடி
இறுக்குவேன்இவனைஎன்றாள் ஒருமாது
மங்கையரேஎனமனது வள்ளல்பின்னேபோச்சதல்லே
வரக்கண்டதுண்டோஎன்றாள் ஒருமாது
௮, தன்மருகன்ஆகநின்ற மன்னனைப்பெற்றசனகன்
தர்மவானஎனறுசொன்னாள் ஒருமாது
கன்மனதாக்காரன்இவன் தன்மகனுக்காகவில்லை
ஏன்வளைக்கச்சொன்னான்என்றாள் ஒருமாது

## சீதை சபாமண்டபத்துக்கு வருதல்.

விருத்தம்

பாவையர்இப்படிஉருகப்பவனிவந்தான்
படையரசர்தசரதனும்பலரும்வந்தார்
மாவிசுவாமித்திரனுடன்தம்பிமாரும்
மருங்கிருக்கராகவனும்இருந்தான்இப்பால்
தாவுபுகழ்வசிஷ்டமுனிவார்த்தைகொண்ட
சனகன்உரைகொண்டுமணிமண்டபத்தில்
பூவுலகில்தேவர்சிறைமீட்கவந்த
பொருளினாள்சீதையெழுந்தருளினாளே. (௧௯)

௰௩-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்

பல்லவி

அன்னை சானகிவந்தாளே-ராசதிராசர்-அனைவருக்குங்காட்சிதந்தாளே

அநுபல்லவி.

கன்னிமார்களுக்காரா கணத்திலசந்திரனைநேரா
பொன்னின்ஒளியும்பூ மணமும்கொண்டுதொடர்ந்து
மன்னன்சனகன்மணி மண்டபத்திலகடந்து-அன்னை

சரணங்கள்

௧. கந்தரப்பாதம்வைக்கவே ரத்தினச்சிலம்பின்
சோதிநிலத்தில்மொய்க்கவே பூமிஆகிய
தனதாய்மகளுக்கெனவே விரித்ததேமாங்
[illegible]ளிர்போலெங்கெக்குமயின்னவே
[illegible]ந்தஅபூர்தமகண்ட இந்திரன்போலேதாகம்
[illegible]யராமன்முனனே சோனையர்கள்வாக
க[illegible]ர்க்கைவளைச் சோதியினுலோண்டு
கண[illegible]க்கண்கள்கொண்டுராமன் வடிப்பங்களகண்டுகொண்டு-அ

௨, வீராமன்னைநின்டியே கொடும்போதவன்
மென்னைபிடிக்கவேண்டியே அம்மன்கைஆல்
வாரிசமலர்விரித்துக் காட்டும்சூரியன்போல
மாணிக்கக்கங்கணம்தரித்து
சோராநடைகண்டு கேர்ஆகாமல்மெத்தத்
தவளும்அன்னங்கள்போலக் கவரிமங்கையர்சுற்ற
சிராமனைவிடுத்து ஆர்அருக்கும்தய்ய
தெய்வம்இவளென்றெண்ணிக்கைகள் அஞ்சலிசெய்ய- அன்

௩, சிவியகூடக்கல்மேலே பூரணச்சந்திரன்போல்
தெரிந்திட்டஒருக்காலே மாளிகைகூடி
தாவில்லாமல முன்னாலே தேவர்களசெய்த
தவம்வெளிவந்ததுபோலே
மூவுலகுபெறுத்தும் ராவணனுக்குப்பண்டு
முகந்தெடுக்கவந்த சித்திரவட்டினைக்கண்டு
தேடிஇவளென்றால் ராகவன்இந்தச்சின்ன
சிலையோடிப்பான்வேற மலையும்ஒடிப்பானென்று-அன்



௪, தெரிசனம்காணப்போகுமோ சொல்லன்றாலும்
சேஷனாலேயும்ஆகுமோ இந்திராணிமுதல்
அரிவையர்க்குமெய்யானுமே ராமனும்காண
அனந்தம்கோடிகல்வேனுமே
பிரமனமுதல்வானவும் பெற்றவனுக்குகல்ல
உருவினில்இனிவேறு உடமைகள்என்னசொல்ல
அருமையாஉலகிலக்கல் யாணதினத்தில்பெண்கள்
திருமங்கிலியத்தில்இடும் திருஆகியவங்கள்-அன்னை

ஸ்ரீராமர் மணக்கோலங் கொள்ளுதல்.

விருத்தம்

சீலம்கொண்டிப்படிவந்த சீதைமாதரோடும்சென்றான்
மூலமகொண்டகௌசிகனும் முகூர்த்தம்காணென்றுசொன்னான்
ஓலம்கொண்டவேதனமுதல் ஓராயிரத்தெட்டண்டமும்தன்
கோலம்கொண்டராமன்மணக் கோலம்கொண்டான்கொண்டானே. ()

௰௪-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

ராமசாமிகொண்டகோலம்-என்-றாலேசொல்லப்போமோ

அநுபல்லவி.

கோடிநிலாசன்முன் அனேக-கோடிமன்மதனேநிகர்ஆக—ராம

சரணங்கள்,

௧. பாதகடகம் சேர்த்தி-மருங்கினில்
பகம்பொன்ஆடை போர்த்தி-மார்பின்
மீதுபொன்நால் எற்றி-தன்காமமும்
விளங்கவே சாத்தி
சீதைஆசைஇது எனப்பாராட்டி.
தெரிந்தசந்திரசூரியர் அதைநாட்டி.
ஓதிமாறுகா நிலேஒளிகாட்டி-குண்டலங்கள்பூட்டி
ராம.

௨. சுமுகப்பட்டம் வரித்து-சுவாத்தின
தொங்கல்மாலை பரித்து-முடிமேல்
விமலமகுடம் தரித்து-பீதாம்பரம்
மேனிமேலே விரித்து
கமலமாமலர் ஆளானாரண

# இராமநாடகம்.

கங்கணக்கண்டெசு    கைக்கனிப்புனை
அமுர்தகிரணச்சந்திரன்போல்முகக்காரா-யோகலயாகா
ராம.

௩. ஆகமீது    வன்னவன்னம்
ஆபரணங்கள்    மின்னா-பச்சை
மேகம்போலே    காந்தி-விளங்கும்
மேனியிலக்கலவை    சாத்தி
வாகுமகுட    கிரீடமுங்குண்ட
லங்களை    மணிவளையுங்கொண்டு
காகுத்தரே    பூசங்களிமண்டப-விசேதங்கள
ராம.

## கலியாணச் சடங்கு செய்தல்

### விருத்தம்,

சக்கிரபதியாகியதசரதன் இவ்வாறு
சனகன்றன்மனைவாசல்சேர்ந்தெய்தினான்
அக்கணமேதம்பியருங்கோசிகனுடனே
அரசர்களுந்தசரதனும்பக்கத்திலாரும்
திக்கிலுள்ளமுனிவருமேவிப்புகழ்
தனைகட்பெயல்மிசுப்பெருக்கிவிதிவேதம்வில்
முக்கியமடைமையாட்கெல்லாம்
முன்மணமேசருக்கல்யாணத்தாறுசெய்தாரே (௯௧)

உ-டி-இராகம்-மோகனராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. கல்யாணவேதிகை    ஆடித்தார்-சனகன்
சொல்லியவாக்குதவையும்    படித்தார்
எல்லாருமானந்தம்    கூடினார்-ஆவர்
எக்கெங்கும்கட்டியம்    பாடினார்
௨. வாழைக்கமுகுகள்    கட்டினார்-கெடி
வாணம்மட்டம்பந்தல்    பூட்டினார்
ஆழிபோலேதிரை    அமைத்தார்-ஆலவ
காரமேந்திகை    கொடுத்தார்
௩. தானக்குத்தறைபடை    காட்டினார்-சந்திர
ஆலயக்கேக்கண்ணடை    காட்டினார்



சானுக்குச் சாலமாலை    தொடுத்தார்-தங்கத்
தாலமுங்கும்பமும்    எடுத்தார்
௪. பொன்னரிமாலைகள்    விக்கினார்-முத்தும்
பொன்னும்பவளமும்    தூக்கினார்
இன்னரிவீணைகள்    பாடினார்-மெத்த
கேளிக்கைமாதர்கள்    ஆடினார்
௫. பூரணகும்பங்கள்    பதித்தார்-முக்கிய
பூசுரர்வேதத்தால்    துதித்தார்
தோரணத்தால்வெளி    மறைத்தார்-எங்கும்
சொர்ணவருஷமா    இறைத்தார்
௬. மாணிக்கதீபங்கள்    ஏற்றினார்-நல்ல
வாடைகஸ்தூரிகள்    தூற்றினார்
ஆணிப்பொன் ஆடைகள்    சாற்றினார்-பனிநீர்
ஆகத்தெருவெங்கும்    ஊற்றினார்
௭. சந்தனத்தால்க்கோலம்    தீட்டினார்-பஞ்ச
தருவையுமன்றாக    நாட்டினார்
சுந்தரப்பாலிகை    கூட்டினார்-நறுக்
தூபமுந்தீபமும்    காட்டினார்
௮. பொன் ஆலவட்டமும்    பட்டமும்-திவ்விய
புஷ்பமுங்கந்தமும்    சத்ரமும்
தன்னாரவண்ணமாக்    கட்டினார்-எங்கும்
தங்கப்பொடிகளாக்    கொட்டினார்
௯. மத்தளம்மல்லரி    தாளங்கள்-பஞ்ச
வாத்தியம்நாகெச    மேளங்கள்
திக்கிகளாச்சக்கிர    வாளமும்-ஓசை
செவிடுபடுமேயண்ட    கோளமும்
௰. சனகனுந்தசரத    ராசனும்-வா
சவனுடனேஅன    கேசன்போல்
கலியாணசந்தோஷம்    மீறினார்-வந்து
கல்யாணமண்டபம்    ஏறினார்

| | |
|---|---|
| கக. வெள்ளைவிடையினை | ஊர்ந்தார்-உமை |
| வேணிஅரன்வந்து | சேர்ந்தார் |
| வள்ளியுங்கந்தனும் | சேர்ந்தார்-மூத்த |
| மைந்தன்வல்லபையும் | சார்ந்தார் |
| கஉ. வேதனும்வாணியும் | கூடினர்-தே |
| வேந்திரன்இந்திராணியுங் | கூடினர் |
| மாதர்தேவர்மென். | மேலே-அந்த |
| மண்டபம்சேர்ந்தாரிப் | பாலே |
| கஙு. மங்களம்ஆம்ராமச் | சந்திரன்-சூரிய |
| வங்கிசமணிஆன | சந்திரன் |
| கங்கைமுதல்தீர்த்தம் | ஆடினன்-மிகக் |
| கலைச்சலைகள் | சூடினன் |
| கச. மாலைமகுட | முகத்தணி-பட்டம் |
| வாகுவலயம் | சாப்பணி |
| காலணிகைவளை | பரித்தார்-பதக் |
| கங்கள்முதல்அலங் | கரித்தார் |
| கரு. தனதாம்பரதன்கை | நீட்டவே-மற்ற |
| தம்பியர்சாமரை | ஆட்டவே |
| கனகரதம்கண்டு | தாவினன்-ராமன் |
| கலியாணவேதிகை | மேவினன் |
| கசு. எப்பொருளும்பெற்ற | கோதையே-அவட |
| லட்சுமியும்ஆன | சீதையை |
| ஒப்பனைசெய்யவும் | தேடுமோ-என் |
| ஒருத்தனுலேசொல்லக் | கூடுமோ |
| கஎ, பூமியுள்ளோர்க்கெல்லாம் | ஆவியை-நல்ல |
| பூவைவெனும்சீதா | தேவியை |
| சாமிஅருகினி | லேதந்தார்-வசிஷ் |
| டருந்தருப்பைகொண்டு | வந்தார் |
| கஅ. முத்தானதண்டலம் | விரித்தார்-வேத |
| முறைபேசட்டுக்கெல்லாம் | தரித்தார் |



| | |
|---|---|
| உத்தமமந்திரம் | விளைத்தார்-முனிவர் |
| ஓமாக்கினியை | வளர்த்தார் |
| தானதருமங்கள் | ஓங்கவே-ரா |
| சுதர்போய்ப்பூமிபாரம் | வாங்கவே |
| வானவர்க்கின்பம | சுற்றவே-ஓமம் |
| வலம்கொண்டேமூன்றது | மெத்தவே |
| சல்லாபன்ஆகிய | கேசவ-சீதை |
| தன்னைஅருந்ததி | லேசன் |
| எல்லாருங்காணமுன் | னுலே-சொல்லி |
| சங்கதரனோமன்னை | மேலே |
| உக. அய்யனும்மைதபல்லை | பிடித்தான்-கவி |
| பாணைவிதியெல்லா | முடித்தான் |
| செய்யவனும்திரு | மாலும்-போலச் |
| சேர்த்தெழுந்தரேமென் | மேலும் |

## ஸ்ரீராமர் அக்கினிவலம் வருதல் முதலியதுகள்.

### விருத்தம்.

ராகவன்சீதையைப்பாணிக்கிரகணம்செய்து
சுற்றீவைவலம்வந்தான்சீதைபாதம்
மோகமுடன்பற்றிஅம்மிமீதில்வைத்தான்
முக்காலும்அருந்ததியுங்காட்டினன்பின்
ஏகமனதுடன்முனிவர்தக்கைதாய்மார்
எல்லார்க்கும்சேவித்தான்அப்பால்இன்பம்
ஆகவொருதன்மனையில்சீதையோடும
அமர்ந்திட்டான்அண்டமெல்லாம்சுமர்ந்திட்டானே. (உஉ

## சோபனம்பாடுதல்.

### இதுவும் அது.

மணம்உள்ளமலர்மாரிஅந்தவேளை
வானவர்கள்பொழிந்திட்டார்முனிவர்எல்லாம்
கனம்உள்ளஆசிர்வாதங்கள்சொன்னர்
காவலர்கள்பொன்மலர்கள்சொரிந்தார்தாய்மார்.

பணம்உள்ளகல்விசைபலவும்பந்தார்
பத்திஉள்ளபக்துக்களெல்லமெய்த்தார்
குணம்உள்ளசுமங்கிலிகள்அம்மேவந்து
கூடினர்சோபனங்கள்பாடினரே

௨௧-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி

சோபனம் சோபனம்-ராம-சுவாமிக்கும் சீதைக்கும்
சோபனம் சோபனம்

அநுபல்லவி.

பூபன்தசரதமதிக்கும் சோபனம்
புண்ணியசனகபூபதிக்கும் சோபனம்(சோபனம்

சரணங்கள்

௧. தாமம்மேவியரதிக்குமரதிகந் தாணுக்கும்-சோபனம்
சீர்மகளஇந்திராணிக்குமஇந் திரனுக்கும்-சோபனம்
மாமதிபெருகும்வாணிக்குமஅவள் வாணுக்கும்-சோபனம்
தாமரைமலர்த்திருவுக்குமதாமோ தரனுக்கும்-தேவிக்கும்
(அரனுக்கும்-சோபனம்—சோபனம்

௨. நேர்வருசுமந்திரன்முதல்மந்திரி கேசர்க்கும்-சோபனம்
ஏர்பெறுவசிஷ்டன்கௌசிகன்முதல்ஆமயோகீசர்க்கும்-சோப
வார்முலைஅரம்பைமாதர்க்குமஎண்டிசை வாசர்க்கும்-சோபனம
சேவைசெய்துமகம்மகிழுமஐம்பத்தாறு தேசர்க்கும்-ராசாதி
(ராசர்க்கும்-சோபனம்—சோபனம்)

௩. வருகௌசலைகைகேயிசுமித்திரைஎனும்தாய் மார்க்கும-சோபன
பெருகுபரதன்முதல்ஆகிய மூன்று பேருக்கும்-சோபனம்
ஒருமையாய்துசொன்னவால்மீகமுனிவர் இருமேவாருக்கும்-சோப
அருணாசலகவிநாடகம்இதுபடிப் பார்க்கும்கேட்கும்
(எல்லாருக்கும்-சோபனம்—சோபனம்

ஸ்ரீராமருக்கும் [illegible]ராமருக்கும் சம்வாதம்.

விருத்தம்,

திருமகன்ஜானகிகல்யாணம்செய்து
செயமுள்ளதம்பியர்க்கும்விவாகங்கள்செய்து
வரும்வழியில்சகுனவிபரீதத்தினாலே
மலைபோலேமுனிபரசுராமனெனுகதாள்



பெருகுதசரதன்கண்டுநடுங்கும்போ
பிரசண்டகோதண்டகுருராமன்தானும்
ஒருவரும்நேர்இல்லையெனவிலைநேந்தி
உரம்சொல்வான்உடனேஉத்தரம்சொல்வானே. (௨௪)

௨௨-நீபதை-கல்யாணிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்

௧. மண்ணில்அரசர்போலக் காணுகிறாயேஆசீர் ராமா
வாதம்ராகு
கண்ணில்வேதியர்போலத்தோனுகிறாயேகமலக் ராமா
காரம்பரசு

௨, காடுகைஎனும்பெண்மேல் சண்டைகொள்ளரசர்க்குத் ராமா
தான்விதியோ
வேடர்கள்தொடுக்கும்வில்லைப் பிராமணர்தொட்டதலை ராமா
விதியோபரசு

௩. ஆணல்பெண்கொலைசெய்வல் ஆமோஎனக்கிது ராமா
அடைவோராகு
தான்ஆகப்பெற்றெடுத்த தாயைக்கொலைசெய்தாயே ராமா
தகுமோபரசு

௪. தருமமானன்னைப்பெற்ற தகப்பன்சொல்படிசெய்தேன் ராமா
தாய்க்கொலையோ
குருவார்த்தைதடுக்காமல் காணும்செய்பெண் ராமா
கொலையோபரசு

௫. சொத்தைவில்ஒடித்தத்தை மெத்தமெத்தவெண்ணித் ராமா
துள்ளாதேராகு
கற்றவேதியன்என்று பொறுத்தேன்பொறுத்தேன்குறிக் ராமா
காதேபரசு

௬. அந்தவில்லைத்தாயே இந்தவில்லைஇக்கா ராமா
அடமாகு
இந்தவில்லைநாணேற்றினில் வைத்தஅம்புக்குவழி ராமா
எங்கேபரசு

௭. அம்புக்குவழியில்லை நான்பிராமணன்இனி ராமா
அனுக்கிரகம்செய்

# ஸ்ரீ இராம நாடகம்.

பின்புதாக... ன்இரு பிறப்பன்உன்னோடேஎன்ன
பேச்சுபாசு
அ. சா. செயதபங்கள் எல்லாம்உன்சரத்துக்கே
தகதேனாகு
வந்தவழிபார்த்துக்கொண் டோடிப்போவதோஅல்ல
மார்க்கம்பாசு

## ஸ்ரீராமர் அயோத்தியைச் சேர்தல்.

விருத்தம்.

இன்னவகைசொன்னாககனைவாழ்த்தி
இனியதவம்செயப்பரசுராமன்போனான்
அனையவன்கைக்கொள்வடவில்லைவருணராசன்
அடைக்கலமாவைத்துவிட்டுராமச்சந்திரன்
மன்னவரும்தம்பியரும்தேர்மேலக்கொள்ளும்
வாஅருகேதாளும்மணித்தேர்மேலேறி-
மின்அனைசீதையுடனேசந்தோஷம
மிகவந்தான்அயோத்திமாநகர்வந்தானே.

பாலகாண்டம் - முற்றும்.

வசனம்-க, விருத்தங்கள்-உ௪, ஆக-உரு.

தோடையம்-க, திபதைகள்-௬, தருக்கள்-க௮, ஆ. உஉ,

ஆக-பாயிரம்-க-க்கும்-காண்டம்-க-க்கும்-கூடிய

கொச்சகம்-க, வெண்பா-உ, வசனம்-க, விருத்தம்-௰ ஆ. க௪

தோடையம்-க. திபதைகள்-௬, தருக்கள்-உரு, ஆ. உ௯;

ஸ்ரீ சக்கரவர்த்தித் திருமகனார்

திருவடிகளே சரணம்,



ஸ்ரீராமஜெயம்.

இரண்டாவது

# அயோத்தியாகாண்டம்.

## சக்கிரவர்த்தி முடிசூட ஸ்ரீராமனை வேண்டுதல்.

விருத்தம்.

வனிதைமணிச்சனகியுடன் அயோத்திமேவி
மணவாளராமனென இருக்குங்காலில்
கனிவுசெறப்பரதனைச்சத்துருக்கனோடே
கைகையன்பால்விடுத்துசின்னாள்கழிந்தபின்பு
இனியதசரதன்வசிஷ்டன்மந்திரிமாரும்
இசைந்தபடித்துறந்திடராகவனைக்கூவித்
தனிமகுடம்புனைனைவே அவனுக்கன்பாய்ச்
சாற்றுவான்தன்கவலை ஆற்றுவானே. (௧)

௧-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தமனுத்தரவேணும்மகனே - ராமா-இந்தமனுத்தரவேணும்மகனே

அநுபல்லவி.

இந்தமனுத்தரவேணும் மகனே-ராமச்
சந்திரனேபுவிஆளத்தகும்நீ உத்தமனே-இந்த

சரணங்கள்.

௧. அறுபதினாயிரம்வருஷ காலம்-வாழ்ந்தேன்
அதிலேகாணுதலெலாம் கண்டறிந்தேன் இந்திரஜாலம
மறுவதமோஎன்காய ஸ்தூலம்-இனிப்
பார்க்கவேணும்என்கண்ணால்நீயாளுங்கோலம்—இந்த

௨. முடியாதமோகாந்த காரம்-இந்தக
முதுமையிலும்நானென்மனதிலிருக்கின்ன சாரம்
குடிதாங்கினக்கோர்உப காரம்-இந்த
குவலயந்தனைக்கொண்டுமுத்திகொடுப்பதுன்பாரம்—இந்த



௩. ஒருவன் அறுபதினாயிரத் தொகை-கன்னை
உதவிமுத்திகொடுத்தானே மகிரதன்முன்னோனை
இருநிலத்தில் அதுபோல்உன் னை-உதவ
எனக்குமுத்திதரஆள்வாய் இனிஇந்தப்பாரை—இந்த

௪. உள்ளத்தைஉன்றேடேசொன் னேனே-முன்னுள்
ஊழ்மகன்டதனவாக உள்ளடக்கினேனே
பிள்ளைகளிரத்தபெரு மானே-இந்தப்
பெரும்புவிகொள்ளமுத்தி பெறவேணும்நானே—இந்த

௫. மலர்க்கையால்பிடிப்பாய்செங் கோலே-என்தன்
வார்த்தைதடுக்காய்எனவே உரைத்தேன்ஒருகாலே
தலைச்சுமைதந்தானென்றென்தன் மேலே-சற்றும்
தாழ்வாய்எண்ணாதே இனித் தாங்காதென்னாலே—இந்த

௬. வழிவழிவருமுறை யாலே-இந்த
மண்டலத்தைஆண்டதுண்டு மன்னர்ஒருகாலே
சூழ்மதில்அயோத்தியைஅது போலே-நீயும்
சுமந்தாளவேணுமென்தன் சொல்வழியினாலே—இந்த

௭. குலத்தில்உள்ளகுறைஎல்லாம் வாங்கும்-உன்தன்
குணத்தாலேஉலகெல்லாம் மென்மேலோங்கும்
மலைக்குமலை அலவோ தாங்கும்-இந்த
மண்டலத்தைநீதாங்கினால் என்கவலைநீங்கும்—இந்த

## ஐம்பத்தாறுதேசத்து ராஜர்கள்வருதல்.

விருத்தம்.

சங்கிலைஇப்படிமகனை இசையக்கூறி
இனியதசரதராஜன் கனிதர்சொல்லப்
பாங்குபெறுதேசராஜர்க்குராமன்
பட்டாபிஷேகம்இனைக் கறிவீரென்றும்
நீங்கள்எல்லாம்அயோத்திசேர வருவீரென்றும்
நினைப்பினால்தன்ஓலை அனுப்பிவிட்டான்
ஆங்கவரும்மிகமிகச் சந்தோஷமீறி
அந்தந்ததேசம்விட்டே அணுகினரே.

உ-தரு-மத்யமாவதிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

வந்தனரெங்கள்கல்யாண-ராமச-சந்திரன்திருமுடிகாண

சரணங்கள்.

| | |
|---|---|
| க. அந்தணர் அந்தந்ததேசத்துள்ளோர் | கூடும் |
| மன்னனை இராமனைச் சொர்ண | முடிசூடும் |
| சந்திரிசூழ்வையாக் கண்டிட இதோ | கொண்டு |
| தம்தலைமேல்வைத்துக் கனகமணியிலே | ஒற்றி—வந்த |
| உ. அங்கர்சிங்களர் மாளவர் | சோனகர் |
| மராடர்கர்நாடமகதர் | குருதர்கள் |
| கொங்கணர்வங்கணர் குச்சரர் | மச்சர் |
| கலிங்கர்கலிங்கர் தெலுங்கர் | முதலார—வந்த |
| ங. சேரலர்சாளுவர் உற்கலர் | பப்பரர் |
| நேமியர்குந்தளர் சிந்தர் | அவந்திகர் |
| ஆரியாவிளர் விதர்ப்பர் | விதேகர்கள் |
| ஓட்டர்சௌராஷ்டிரர்கூராஷ்டர் | முதலாக—வந்த |
| ச. புண்டரீகக்கண் இராமனுக்கு | முடி |
| புனைச்செய்தால்இது காணப்பெற்றோம் | என்று |
| மனமெழும்பத்தம் தேசத்து | ராஜரும் |
| மன்முடிமன்றுக் கொண்டாடிக் | கொண்டாடி—வந்த |

—————

திரு அயோத்தியை அலங்கரித்தல்.

விருத்தம்.

தேசதேசத்தில்வந்த ராஜரெல்லாம்
தசரதராஜன்சமூகம் தனிலேகூடி
தேசமுடன்ராமனுக்கு மகுடஞ்சூட்ட
நினைத்தபடிசெய்யவே மகிழ்ந்துகூற
ஆசகலும்அயோத்தியா நகரிலேயுந்தன்
ஆலயமெல்லாந்தாமிகன் அழைப்பித்தென்னைப்
பூசுரரும்ராஜர்களும் அதிக்குகொண்டே
பூரியமார்நகரம் அலங்கரிப்பாரே.



க-இராகை-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| க விசையதுந்துமி | அடித்தார் - நகரெங்கும் |
| தசரதன் அருளியமொழி | படித்தார் |
| திசைதிசைசொல்லி | விடுத்தார் - வாசலில் |
| அசையும்விசையவேதனம் | எடுத்தார் |
| உ. பூரணகும்பம் | அமைத்தார்-தெருவெங்கும் |
| தோரணம்அழகுடனே | சமைத்தார் |
| வாரணம் | அலங்கரித்தார் - முனிவர்கள் |
| ஆரணம்முறைமுறை | ஆரம்பரித்தார் |
| ங. மாளிகைதொடுத்து | வைத்தார் - முத்துமாலைப் |
| மாளிகைபலபலமுத்து | வைத்தார் |
| ஆலயம்விளக்கு | வித்தார் - பூமலர்ச் |
| சோலையும்சாலையும்துலக்கு | வித்தார் |
| ச அத்திகள் | பொருவாரும்-வெள்ளிவட்ட |
| முத்துக்குடைபிடித்து | வருவாரும் |
| சித்திரம் | புனைவாரும் - சந்தன |
| கஸ்தூரிகளமத்தால் | நனைவாரும் |
| ரு. சிங்காரம் | எழுதிடுவார் - பரிமளச் |
| சந்தனத்தால்தரை | மெழுகிடுவார் |
| சக்கப்பொடிகள் | இறைப்பார் - மாவணைப் |
| பந்தல்இட்டந்தவெளி | மறைப்பார் |
| சு வானவர் | வந்துதிரிவார் - அடிக்கடி |
| மேனகைஊர்வசி | நடம்புரிவார் |
| கானவித் | தைகள்படிப்பார் - அநுதினம் |
| ஆனைகோயிலம்போல் | கதிபிடிப்பார் |
| எ அங்கே | எதிர்செல்லுவார் - இடம்காட்டி |
| இங்கேஇரும்இரும் | - எனச்சொல்லுவார் |
| சிங்கா | சனம் அணிவார் - கௌசலை |
| கண்கணாலேஇனை | அடிபணிவார் |
| அ. சடங்குகள் | செய்வாரும் - சமித்துகள் |
| இடம்படுதருப்பைகள் | கொய்வாரும் |
| உடக்கையாத் | திரிவாரும் - பொன்மழை |
| இடம்கண்டவர்க்கெல்லாம் | சொரிவாரும் |

௩. சங்கையர் — கூடாட - வினையில்
அம்புருசாசர் — இசையாட
செம்பொன் — மவுலிசூட - ராமற்குச்
சம்பிரமமசொன்னமன்னர் — எழுந்தோட
௪. சலவரி — பேரிகாளம் - துந்துபி
மலவரிவெருமெ — கெசமேளம்
சொலமிய — அண்டகோளம் - இடியட
எல்லையுங்குமுறிடு — மேளம்
௫ இப்படி — கொண்டாடி - ராமனுக்கு
ஒப்பனைசெய்யவே — தெண்டாடி
அப்போது — கோப்பாடி - கூனியும்
வெப்புடனேவந்தாளே — குடிகேடி.

கூனி கைகேசியைக் கலைக்கவருதல்.

விருத்தம்.

அதிக்கிடும் அயோத்தியதனும் சொன்னமாமுடிராமற்கே
மதித்திடவேனுமென்று மன்னரும் ஆர்ப்பரித்தக்கண்டாள்
இதைக்கலைத்திடவேனென்று ராமனைவிடைவிடையாளே
கொதித்திடும்மனத்தாள் ஆன கூனியுந்தானும்வந்தாளே. (௪)

௩-தரு-மோகனராகம்-ஆதிதாளம்,

பல்லவி,

கூனிவந்தாளே-பொல்லாத-கூனிவந்தாளே

அநுபல்லவி.

மோசகாரமனஞ்செய்த பகைபரக்க — காய்ந்து
பூனைபோலிருந்து புலிபோலப் — பாய்ந்து—கூனி

சரணங்கள்.

௧. அதிக்குமோராமனுக்கு அரசொருக் — காலே
ஆர்கொடுக்கிறுர் அந்தை அறிந்தேன் — மேலே
கெடுக்கிறேனென்னான பரக்கடத் — தாலே
கிணறுவெட்டப்பூதம் புறப்பட்டாளப் — போலே—கூனி
௨. பூமிபாரதனுக்குத் தருமனை — உரைக்க
பூனைகைகேசிகள் மனமதைக் — கலைக்க
கிராமசேதிகளை கிலைக்கறியாய் — துலைக்க
தமிழையிருந்தலைக்கு மெருகுச் — சிரைக்க—கூனி



௩. கொட்டியமஞ்சபோலுடம்பெல்லாம் — தளர்ந்து
கூனிகுறுகுறுத்தவில்லைப்போல — வளைந்து
மட்டம்கட்டைகுட்டிவேபனென — குழைந்து
மழையமதைகளைஎண்ணிமுழுனைரு — கலைந்து—கூனி
௪. சந்தானகுயோப்புட்டிய — காவி
சனைபோலகைத்துத்திரங்கிய — தோலி
இந்திராதிதேவருக்கனு — கூலி
இலங்கைராக்ஷதர்கள்குடிக்கொரு — தீவி—கூனி

கைகேசி கூனியைக் கோபித்தல்.

விருத்தம்,

வந்தவொருகூனிமனை தெரிச்சலாலே
வல்லினுமடைகேகிகளைஎழுப்பி
இந்தமன்னன்ராமனுக்குமகுடமகுட்ட
எண்ணினானென்னுமொழிசொலவும்முன்னே
விந்தைமுகமலர்ந்துநவரத்தினமாலை
வெகுமானம்செயதிடவும் அவமானித்துச்
சிந்தைவஞ்சத்தொடுகலைத்தகூனிதனைச்
சேதிப்பேனென்றுகைகேயிபேசினாளே. (௫)

௪-தரு-ஆநந்தபைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமனுக்குமன்னன்முடிதரித்தாலே-கன்னமிட்டொருக்காலே

அநுபல்லவி.

மாமாமேஉனக்கென்னடி — பேச்சே
மழுங்குமுவிப்பாலில்விழுந்தால்ப்போல் — ஆச்சே—ராமனுக்கு

சரணங்கள்.

௧ இந்தவார்த்தைசொன்னாய் — எனக்கெவர்கோடி
பிரம்மாதிகளுடைய — வரடி
இதுபோல — சீரடி
வாயாடக்தே — மாரடி
ஆரடி — எனக்குச்சரி—ராமனுக்கு

௨. மகாராமன்செல்வம் — தீர்த்தவனடி
நம்மைஎல்லாம் — காத்தவனடி
பட்டம்கட்ட — ஏத்தவனடி
நானுமேறில — மூத்தவனடி
அவன் — என்கண்மணி—ராமனுக்கு

௩. பரதன்பட்டம்கட்டாவிட்டால் — கட்டியோ
அவன்சர்க்கரைக் — கட்டியோ
என்பிள்ளைராமன் — எட்டியோ
கான்தானென்ன — மட்டியோ
வெட்டிப் — போடுவேன்உன்னை—ராமனுக்கு

---

## இதுவும்கைகேசியைக் கூனிகலைத்தல்.

விருத்தம்,

துங்கம்ஆம்அயோத்திஆளச் சொல்லியராமனுக்கே
தங்கமாமுடிகொடாமல் சடைமுடிகொடுப்பேனென்று
பங்கம்ஆம்கூனிமூன்றாள் பகையினாலேகைகேசி
மங்கையாள்எதிரேபின்னும் வார்த்தையால்கலைக்கின்றாளே (௧)

உ-பிரதை-அசாவேரிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்

௧. ராமன்முடிசூடும்என்ற பேய்மதிஉனக்குவந்தது
ஏதம்மா என்ன-வாதம்மா — அடி
சீமாட்டி உன்பிள்ளையாதன்-காமாட்டி ஆனேனே என்ன
செய்கையே-அம்மா-கைகேயே

௨. உன்மகனைஊர்க்கில்லாமேலோ தன்மகனைமுடிசூட்ட
உன்னினாள்-கோசலை-எண்ணினாள் — அந்த
மன்னவனும்அவள்சொன்ன வார்த்தைகடவாமல்உன்னை
வாதித்தான்-ஏதோ-போதித்தான்

௩. கண்உள்ளபோதல்லவோகண் காட்சிஎன்பதறியாயோ
கண்ணியே-என்ன-உன்னியே — ஊர்க்கும்
பண்ணியபாவிகில்அல்லவோ புண்ணியம்தெரியும்அடி
பாவியே-என்தன்-ஆவியே

௪. ஜடம்விட்டஆயம்அடிச் சுடும்என்றுசொல்லும்வார்த்தை
உள்ளதோ-பெண்ணே-இல்லதோ — அதுபோல



சடமுடிக்குன்தாய்தந்தைமார் உன்னைவந்தடைந்தபோதில்
என்செய்வாய்-எவரைக்-கெஞ்சுவாய்

௫. ஊருக்கோபால்வார்த்துன்பதுஉடம்புக்கோபால்வார்த்துன்பது — அடி
ஏதடி-செய்ல-தேதடி
ஆருக்கும்பெண்ணைமண்பிள்ளை அருமைதன்பிள்ளைஎன்ப
தறியாயோ-ஒன்றும்-குறியாயோ

௬. கவுசலைபிள்ளைக்குப்பட்டம் கட்டினால்உன்பிள்ளைக்கென்ன — பரதன்
கட்டுவாய்-எவரைக்-கிட்டுவாய்
தவசிஆச்சந்நியாசிஆயும் பரதேசம்போவதேல்ல
சமர்த்தடி-கோபத்தை-அமர்த்தடி

௭. சீர்ஆனகோசலைவிட்டுச் சிறுக்கிக்கும்சிறுக்கிக்குச்
செருக்காயோ-என்ன-வருத்தமோ — அடி
யார்யார்கையிலென்னென்னபட வேணுமோஅதெல்லாம்பட
லயித்ததே-தெய்வம்-சபித்ததே

௮. பலகாலும்உன்றுடேனதாய் பாடுபட்டதெல்லாம்வீணே — ஐயோ
பாதகி-அடி-தோதகி
இலவுகாத்தகிளிபோலே போகவோசன்மம்உன்னைநம்பி
என்னவினேன்-வீம்பு-பண்ணினேன்

௯. நல்லோரும்தன்மகன்மேலேபோல் உன்மகன்மேலேகோசலை — அடி
வைகலானோ-பட்சம்-செய்வாளோ
கண்ணில்என்னைவேகிக்கும் பிடிவில்லான்வெய்யகாசுமனம்
கரிக்குமோ-அன்பு-தரிக்குமோ

௰. காயகணகோசலைபிள்ளை ஆளவந்தமன்னவரும் — ஊர்க்கும்
தன்மையே-சொல்வாய்-உண்மையே
தாய்கையில்பசும்பொன்னிலும்தன்கையில்பச்சிலைமேலாகும்
ஞையாலே-இதென்ன-மையலே

௧௧. என்னசெய்வேனென்றுநீ முன்னேகொண்டவரங்களும் — அந்த
இல்லையோ-தரச்-சொல்லையோ
மன்னவன்உனக்குச்சொன்ன வார்த்தைக்குசம்மதிசொல்வானே
வாங்கடி-இதுவே-பாங்கடி.

௰௨. ஒருவரம்பரதன்நாடாள ஒருவரம்ராமன்காடாள — இந்த
ஓதடி-இதே-சூதடி.
இருவரமும்கொண்டால்உனக்கு இகிசேர்ந்திடுமடிமக
ராசியே என்தன்னை-கேசியே

## கைகேசிக்கும் சக்கிரவர்த்திக்கும் சம்வாதம்.

விருத்தம்

அந்தவகைகூனிசொல்லமனதிலேறாய்
அப்படியேசெய்வெனெனமானஞ்செய்து
கொந்தளகஞ்சோரவணிசோரமஞ்சமேல்
குப்புறவேகிடந்திடுங்கைகேசிதன்னை
வந்ததசரதராசன்கையால்த்தூக்கி
மலர்மேனிதடைத்தெனதுமானே தேனே
பைந்தொடியேயுன்குறைஏதெனப்பட்டேபோல
படிக்கின்றான்தசரதனும் அடிக்கிலன்றானே. (௬௭)

௭-இபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்

௧. இந்தஅலங்கோலமும் இந்தமனோதுக்கமும்
ஏனவந்ததோகைகை மின்அரசே-உன்தன்
சிந்தையிலென்ன சந்தேகம் உள்ளங்கைநெல்லிக்கனிபோல்
தெரியச்சொல்லாய்கைகை மின்அரசே
௨. மருவுமலரும்போலப் பாலும்நீருபோலே
மானமனைத்தாண்டீரோ மன்னவரே-உந்தன்
கருவிழிமணிபோலக் கரிசனம்ஆகஎன்னைக்
கண்ணுண்டாய்க்காத்தீரே மன்னவரே
௩. காந்தநற்சொன்னகுறை இப்போதும்என்னஉன்னைக்
கைகழுவவிட்டேனோ மின்அரசே-நீ
பார்த்ததுகேட்டதிலும் எந்தவரம்ஆனாலும்
பரிந்துதருகிறேன்காண் மின்அரசே
௪. மற்றொன்றும்இல்லையாம் எனக்குமுன்னீர்கொடுத்த
வரமிரண்டுமேகேட்கிறேன் மன்னவரே-ஒன்றும்
உற்றதுசொன்னால்அல்லோ அற்றதுபொருந்தும்நான்
உள்ளதுசொன்னேன்காணும் மன்னவரே
௫. அந்தவரம்இரண்டுமே தந்தேன்இனிஉனக்கு
அட்டிசொல்வேனோகைகை மின்அரசே-உன்
மைந்தன்இராமன்ஆணை வார்த்தைபிரட்டியேன்
வாங்கிக்கொள்வாய்கைகை மின்அரசே
௬. முன்னொருவரம்பரதன் நாடாளமணிக்க
முடிபெறவேணும்ஐயா மன்னவரே-அதின்



பின்னொருவரம்ராமன் காடாளச்சடைமுடி
பெறவேணுமகாரும்ஐயா மன்னவரே
மலைபோலொருவர்செய்த வஞ்சனையோஎன்ன
வார்த்தைசொன்னாய்கைகை மின்அரசே அது
கலைப்பார்கலைத்தாக்கால் கல்லுங்கரையும்என்ற
கதைபோல்ஆச்சுதேகைகை மின்அரசே
கலைப்பார்கவசலை உமக்குஎனக்குவேறே
கலைப்பாரொருவரில்லை மன்னவரே - நீர்
சலத்தால்சொல்லுகிறீரோ சொன்னதேசொன்னதுகாண்
தம்மாதிச்சொல்ஐயனே மன்னவரே
மூத்தவனைத்தள்ளிவிட்டு இளையவனைப்பட்டம்கட்டல்
முறையையல்லவேகைகை மின்அரசே-யாரும்
எத்தும்மநுவிக்கியான சாஸ்திரத்தினில்முன்னம்
இசைத்தபடியிதுவே மின்அரசே
மூத்தவன்இந்திரனோ மாயனோஅகிலாண்டம்
முழுதும்செலுத்துகிறான் மன்னவரே-வெகு
நேத்திஇதுமுன்சொன்ன வார்த்தையைவிட்டேசொல்நீர
நெறிகள்யோசிக்கல்ஆமோ மன்னவரே
ஆனைஇருந்தசொண்டு அரசாளும்மண்டபத்தில்
ஆடியாப்பிள்ளைபரதன் மின்அரசே-சிறு
பூனைஇருந்துகொண்டு புலம்புகிறதுபோலப்
புலம்பல்ஆமோகைகை மின்அரசே
ஆனையும்பூனையும் நீர்பெற்றபிள்ளை அல்லாமல்
அசலார்பெற்றபிள்ளையோ மன்னவரே-நீர்
மானம்வைத்தால்போதும் அநுவும்மலையும்அந்த
வஞ்சனையுகான் அறிவேனே மன்னவரே
ஆயிரம்ஆனாலும் பெண்புத்தியையறிய
ஆராலும்முடியுமோ மின்அரசே-செல்லது
போயினதுபோகட்டும் ராமனைவனம்விட்டேன்
போச்சொல்லென்கிறாய்கைகை மின்அரசே
எதுக்குராமனை வனம்விட்டுப்போவென்றாய்
என்றுகேட்கவந்தீரோ மன்னவரே-கடுப்
பாதிக்குள்பரதனை வாசில்தங்கவொட்டாமல்
பண்ணிட்டாராத்திரியிட்டீர் மன்னவரே

௰௫. அவனும்சம்மதிக்கவே மாட்டான்வனம்போவென்றேன்
அநியாயஞ்சொன்னேனே மின்னரசே-உனக்கு
கவனம்இல்லையோஎன்ன காரணமோஇந்த
கபடம்பேசாதேகைகை மின்னரசே

௰௬. கவனமும்உன்கிறு காரணமும்இல்லை
கபடமும்பேசஇல்லை மன்னவரே-இன்று
விலனும்சம்மதிக்கவே வர்விட்டுப்போம்என்றேன்
என்னைதப்பிதம்சொன்னேன் மன்னவரே

௰௭, பூமியுந்தருகிறேன் பரதற்குப்பொன்முடியும்
பூட்டுகிறேன்கைகை மின்னரசே-என்
சாமியைஎன்உயிரா ராமனைப்பிரிந்தால்காண்
தரிக்கறியேன்கைகை மின்னரசே

௰௮, என்னுயிர்அவன்போனல் இருக்கறியாதென்றீர்
என்னசத்தியம்இது மன்னவரே-அவனை
சின்னம்சிறுவயதில் முனிபின்போகச்சொன்னீர்உம்
சிவநாக்குஎன்மேலதுன்பம் மன்னவரே

௰௯, கும்பிடுகிறேன்உன்தன் காலையும்பிடிக்கிறேன்
கோபம்செய்யாதேகைகை மின்னரசே-நீ
எம்பெருமானைஎன்தன் கண்மணிராமனைஇங்
கிருக்கச்சொல்லாய்மாய்கைகை மின்னரசே

௨௦ தானம்கேட்கும்போதே என்சரீரம்உமது
தம்சரீரம்அல்லவோ மன்னவரே-நீர்
ஆரைக்கும்பிடுகிறீர் ஆர்காலில்விழுகிறீர்
அசலார்என்னென்னலாமோ மன்னவரே

௨௧, அடியில்விழுவோர்என்றும் அடக்கிஒழிக்கிறேகான்
அனந்தம்வார்த்தைசொல்லியும் மின்னரசே-சற்றும்
கடினமில்லாதபோலே நீசச்சிலையைபோட்டு
கழுத்தைஅறுக்கலாமோ மின்னரசே

௨௨, காட்டுப்புறவுக்காகச் சதைஅரிந்தமன்னனைக்
கதையிலும்கேட்டிலீரோ மன்னவரேஉந்தன்
விட்டுப்பெண்சாதிக்காக இந்தச்சகசமும்.
வேறுபோயோபோதுமபோதும மன்னவரே

௨௩, கண்ணுருடைக்கருத்தும்ராமன் கண்ணுனும்ராமன்
காப்பவனும்ராமனே மின்னரசே-காண்



என்னும்தெய்வமும்அவன் அவன்போனல்என்உயிர்போம்
இருக்கச்சொல்லாய்கைகை மின்னரசே

௨௪. எனக்குப்பொய்யாராது பொய்சொன்னல்தோஷம்என்றீர்
எங்கமேயால்சொன்னீர் மன்னவரே-காண்
வனத்திலப்போச்சொல்லும்என்றசொல்த்திருப்பிவிட்டால்அது
மெத்தானபொய்அல்லவோ மன்னவரே

௨௫. ஆனல்ராமனை வனத்தில்ப்போகச்சொல்வதால்
ஆவதென்னடேகைகை மின்னரசே-அரும்
கானிலேராமனைப்போகச்சொல்லவிதுலும்என்
கண்கேட்டிலும்தருவேன் மின்னரசே

௨௬. காணகச்சொல்லவில்லை தெய்வம்சொல்லியதற்கு
நான்என்னசெய்வேன்காணும் மன்னவரே-ராமன்
போனாலும்காகத்திலே அவனுக்குவரும்
பொல்லாங்குஉண்டோசொல்வீர் மன்னவரே

௨௭. போஎன்றசொன்னவுடன் பொறிகலங்கினன்இவன்
போய்விடுமோகைகை சண்டாளி-காண்
ஆஎன்றுபோனபின்னை அள்ளிஇடுவாருண்டோ
கூறடிகைகேயி சண்டாளி

௨௮. இட்டாரம்கேட்கிறாய் ராமன்போனல்என்இவன்
உடனேபோமடிகைகை சண்டாளி
கட்டியதாலிக்கயிற்றை உன்மகற்குப்பட்டங்கட்ட
காப்புகட்டடிகைகை சண்டாளி

௨௯. வாசமுனிவனஅந வசிஷ்டமுனிவோஉன்னை
வரமகேட்கிறேன்தாராய்என் தெய்வமே-அந்த
பரதன்வந்தால்அவன் உத்தரகிரியைசெய்யாமல்
பந்துசமரச்சொல்என் தெய்வமே

௩௦. அவ்வியர்முனிவர்அல்ல பகையாளிகள்அல்ல
அசலார்தருவர்அல்ல தெய்வமே-இரும்
கொண்டபெண்சாதியாலே தசரதன்மூழ்கிற
கூற்றுவன்ஆய்வதாமே தெய்வமே

௩௧. ஒளியாய்இருந்துகொண்ற பின்னைப்பழிக்குமோனி
உரைதசரதம்இதுவோ தெய்வமே-உலகம்
எளியாரைவலியார்அடித்தால் வலியாரைத்தெய்வம்கேட்கும்
என்பதும்இதுதானோ தெய்வமே

கூஉ. பண்ணிட்ட எறும்புக்கா புருஷனைக்கொல்லவந்த
பாவிதன்பெயர இவள் அல்லோ — தெய்வமே-இந்த
மண்ணுலகுளத்தாரைப்பார்த்துப் பெண்ணைக் கொள்ளென்றுசொல்
லவும்பிரசுவருமோ — தெய்வமே (இம்

கூங. பிச்சுக்கலிபோனால்என்ன உயிர்போனாலும்என்ன
டக்கம்ஸ்ராமன்மாத்திரம் — தெய்வமே-அயோத்தி
பட்டக்குப்பதியாகிய இருக்கிறான்என்றுகாணும்
பாவிநான்பூமியிலேயே — தெய்வமே

## கைகேசி ஸ்ரீராமனை வனத்துக்கு ஏவுதல்,

விருத்தம்.

சொன்றவன்போல்தசரதன்இப்படிபுலம்ப
கூற்றவன்போலக்கைகேசிராமன்தன்னை
நின்றநிலைக்கழைத்துவரவென்னவந்து
நெடுமனைவாசலுக்குள்ளேபுகுந்தபோதில்
என்னுடம்தாசன்சொல்லான்காணேசொல்வேன்
என்றீரேழ்வருஷம்ராமாநீகாட்டில்
சென்றுதவம்செய்பரதன்உலகைஆள்வான்
செல்என்றாள்இதுவேந்தன்சொல்என்றாளே. (அ)

## ஸ்ரீராமர் வனம்ஏகக் கைகேசியின் விடைபெறல்.

இதுவும் அது,

உளம்மகிழ்ந்தொருகைகேசி உரைத்தகாய்மொழியைக்கேட்டு
களங்கமில்லாதராமன் கானகம்செல்வானே
தெளிந்தபரதன்ஆளச் செய்ததேமேன்மையென்று
தளர்ந்திடாத்தாளைவாழ்த்தித் தாழ்ந்தவன்விடைகொண்டானே.(க)

அ-தருகுருட்டிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி,

என்பாக்கியமேபாக்கியம் எனக்குண்டிந்தவிலாக்கியம்

அநுபல்லவி

அம்பாகவனம்போக அநுக்கிரகம்செய்தாயே (என்)

சரணங்கள்

க. குழியில்ப்பயிர்தன்னைஎடுத்துக் கூரைமேல்நடவிட்டு
வழுவாணதன்மாற்றி வளர்க்கிறதுபோலே



கழுவும்இத்தராச்சியத்துக்குச் சூடிமணிமுடியமர்த்தி
தழுவும்முத்திராச்சியத்துக்குச் சடைமுடிக்கத்தாயே (என்)

உ. சொக்கரித்தபேர்எல்லாம் கூடத்தீப்பாய்வாரோ
பக்கம்உள்ளபேரணைக் காப்பாற்றவேப்பாரோ
சிக்கும்இந்தவலைகேகயித் தேவியாசுதந்திரம்
தக்கதவம்செய்யென்றநீ தயவுசெய்தாயே (என்)

ங. ஒருபிள்ளைராமன்பாரமேலோகாதகம்செய்ய
ஒருபிள்ளைபரதன்இந்த உலகம்தனைஆள
இருபிள்ளைகளுமக்கை இதபாரம்பெற்றாள்என்ன
வருசொல்லுமாய்க்கதென்ன மாதவம்செய்தேனோ (என்)

## ஸ்ரீராமர் வனம்வருதற்காகக் கோசலைபுலம்பல்,

விருத்தம்.

இப்படிசிறுதாயானை இறைஞ்சியேஅனுமதிகொண்டு
மைப்படிவண்ணராமன் வந்துகோசலையாளுக்கு
அப்பிலாதடியாவெல்லாம் தான்சொல்லக்கண்ணுற்றுக்கேட்டு
வெப்புறும்பகப்போல்அன்னை விழுகின்றாள் அழுகின்றாளே. (௧)

கூ-திபதை-முகாரிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்

க, ஐயையோராமா-வனம்போகத்தெய்வம்சம்மதியாயோ-உன்னைநான்
எவ்வகைப்பிரிவேனோ-கண்ணே-செல்லுவதரியேனோ

உ, என்று நாயகமே-ரவிகுல மன்னவர்ராயகமே-ஆராவ்
உன்னையும்பெறத்தானோ-கண்ணே-என்னுயிர்போகத்தானோ

ங, கட்டிமணிமுடிபோச்சோ-கல்மேல - சடைமுடியாய்ஆச்சோ-கே (ட்க
உடல்பதறுதேமேலே-பனைமலிட-விடஉடைக்குதேமேலே

ச, காய்வாய்அயோத்தி பூமியை-காலல்பரதன்கொள்ள-ஆளட்டும்
நீவனம்போவானேன்-இப்படி-நீங்கியவாராயோ

ரு, கலியுகம்மேலிட்டதோ-சூரிய-குலமுறைபோய்விட்டதோ-நீஇந்த
நிலைமையின்படியல்ஆமோ-பரதன்-தலைமைகொண்டுடல்ஆமோ

சா, எப்படிதாம்சகிப்பேன் உனைப்பிரிந்து-எப்படிஇருப்பேன்-ராமா
எப்படிகண்விழிப்பேன்உயிர்கொண்டெப்படிநான்சகிப்பேன்-உயிர்

௪, பொன்அரைக்கச்சதோ-மேனியில் வன்னமும்மச்சத்தோ-வெயில்
பட்டால், என்னகுருதிப்பாயோ-கல்லும்முள்ளும -என்னருமைப்பிள்ளை
(ப்பாயோ
௫, நீசெலும்வனந்தானே -உன்றுட -னேசெலுவேன்நானே-என்னிட
ஆசைஎல்லாமறந்தேன்-இருக்கோ-கோசலைபெண்பிறந்தேன்

## ஸ்ரீராமர் கோசலையைத்தேற்றி விடைகொளல்.

விருத்தம்

தாய்வருந்திட இவ்வாறு தளருவாள் தன்னைநோக்கிப்
பாய்வரும்பதினுல்ஆண்டும் பதினுலாம்ஐ அம்மா
நீவருந்திடவேண்டாம் நின்கிருபையால்கானில்ப்
போய்வருவேன்கேள்என்று போற்றவாள்தேற்றினானே, (௰௧)

௰-ஆ-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

வனம்போய்வருகிறேன் அம்மா-கோசலைஅம்மா
வனம்போய்வருகிறேன்அம்மா

சரணங்கள்.

௧, வனம்போய்வருகிறேன்நானே பெற்ற-மாதாபிதாவசனந்தானே
தனமகனிமந்திரமும்அது சகலதந்திரமும்அது
சத்தியமும்அதுபார் முத்தியும்அதுதானே—வனம்
௨, கானகம்நான்போகவேணும்-நீர்-கவலைகொள்வதால்குற்றம்நாணும்
காவிலம்பாதனுக் கல்லனென்னப்போமோ
தாய்இருக்கதசனைப் பொய்சொல்லச்சொல்லலாமோ—வனம்
௩, ஆதிகைதரிவீர்நீரும் - சகர் - அறுபதினாயிரம்பேரும்
தாதைசொல்ப்படிதங்கள் உயிர்கொடுத்தாரேமுனம்
தகப்பன்சொல்படிக்குராம் தவம்செய்வதோகடினம—வனம்
௪, என்றவன்சொல்லேதம்கானே-பரசு-ராமன்தாயைவெட்டினானே
அன்றுபதினாறுபோய் வருவான்எனக்கண்டோ
அரசங்கனைப்போனன்றுல்இருவாய்க்கெதிர்வாய்டண்டோ-வன



## ஸ்ரீராமர் வனம் ஏகலைப்பற்றி லட்சுமண கோபம்

விருத்தம்.

சிந்தையைக்கைகேசிக்குக்கேற்றபடிராமன்வனம்
சுக்கிரீவமித்திராதேவர் [illegible]
இந்தமாமருடிச்சாமிக் கிடேதேன்றுப்போமென்று
அந்தமாலட்சுமணன்கள் [illegible] (௰௨)

௰௧-ஆ-கௌளிபந்துராகம்- ஆதிதாளம்.

பல்லவி.

சகோதரா காமனன்-ஆனுலக்கிலக்கேன் [illegible] மருதம்
அனுபல்லவி
சேனைபோர்வந்தே எதிர்க்கட்டும்குறிக்கட்டும்
சித்திரக்கண்ணாயாலவென்று [illegible] [illegible]

சரணங்கள்.

குருட்டுச்சாக்கமிழிப்பிழைக்குலப்போலேபட்டம்
கொள்ளுமேபாதக்கரு [illegible]
தாரணியில்சக்கரமும் மாவும்சரியான [illegible]
தாதனுமட்டு [illegible]
இரவியுமப்பலிபோலேனன்றேயெதிர்க்கமக்கள்
எவரும்பகைபுரு [illegible]
அரசிட்டசாமிக்குக் [illegible]
ஆட்டுக்குட்டிபோலே [illegible]
கொருக்குகாலிகைக்க [illegible]
[illegible] [illegible]
பகைக்காரர்தலைபறக்குமேபோகட்டும்
பகைப்பெரும்தடக [illegible]
இதற்குகாலேஆரைமாரபலோ [illegible]
என்பதெல்லாக்குக்கெள் [illegible]
வருக்கர்மடந்தையர் [illegible]
[illegible]
கட்டமென்றுமப்பசை [illegible]
[illegible] [illegible]
எட்டிப்பறக்காதும் [illegible]
இந்தப்பாதனுக்கேன் [illegible]

வெட்டித்தலைதலையா குவியாவிட்டாலென்கை
வில்லுமிலேயுவதுண்டோ வீரம்
பொட்டவயோத்திப் பட்டணமெல்லாம்வந்து
போர்கொடுத்தாலும்விட்டேனோஆர்தொடுத்தாலும்இங்கேநாம்(க

## ஸ்ரீராமர் லக்ஷுமணர் கோபத்தைத் தணித்தல்.

விருத்தம்,

சினங்கொண்ட இளையோன் இக்கெதியே சொல்லும் ஓசை
கணங்கொண்ட ராமச்சந்திரன காதிலேவிழக்கண்டோடி
இணைகொண்ட தந்தைவார்த்தைக்கெதிரடன்போதம்பியென்று
மனமகிழ்ந்தேதந்திக்கோபமாற்றலான் ஆற்றலானே (௫௬)

௫௨-தரு-மோகனராகம் - ஆதிதாளம்,

பல்லவி

இத்தனைகோபமுங்கல்லாய் - வந்ததேதடாதம்பி இதுசொல்லாய்

அநுபல்லவி,

தத்தையும்சுகமுண்டதன் புத்தியெல்லாம்வெள்ளை
தகப்பன்பேர்விளங்கிற பிள்ளை அல்லோபிள்ளை - இத்தனை

சரணங்கள்.

௧, இரும்போதாய்மயம் காட்டிலேபோய்த்திரி
என்னுடன்வாய்வருமோ நீ அதைப்பரிகரி
கரும்புகசப்பதெல்லாம் வாய்க்குற்றமேசரி
காலஞ்செய்ததல்லாமல் ஆர்செய்தார்அரிகரி - இத்தனை

௨, தகப்பனைச்சத்தியவாக்கியன் அல்லவென்றுசுழிக்கவோ
தாய்கொண்டவிரதத்தை முடியாமலழிக்கவோ
அகத்திலை ஆம்பரதன் செல்வத்தைப்பழிக்கவோ
அப்புறமுடனேக்கவிட பேரெல்லாம்பழிக்கவோ - இத்த

௩, உரம்அருங்கடம்செய்தாய் உனக்குநல்லதோஇதோ
ஒன்றும்பேசாதேகோட்டைக்குள்ளேபடைவெட்டலாதோ
அரசுபரதன்கொண்டால் நமக்கினிமேல்யாதோ
ஆக்கப்பொறுத்தாமக் காறும்பட்டும்பொறுதோ - இத்தனை



## சுமித்திரை லட்சுமணருக்குப் புத்திசொல்லல்.

விருத்தம.

அற்புதத்தம்பிகோபம் ஆற்றியேராமன்தாயார்
பொற்பதம்வணங்கும்போது பூவைகைகேசியெனும்
அக்கலைமாதர்காட்டிய வாங்கிலட்சுமணனேன்
நேசர்பதிகொடும்போனவர் சுமித்திரைக்கூடவாமே.

௫௩-தெரு-பைரவிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள், ?

௧. சித்தமாசூரி அத்தவனத்திலக்கொள்ள
பேருவேன்றென்வார்த்தை லட்சுமணா
இந்தவார்த்தையே மந்திரமாஅண்ணன்
அடிதுணைசெய்அடா லட்சுமணா

௨. அண்ணன்ராமனை வள்ளலேனென்றெண்ணி
சொல்லிவிரியாதே லட்சுமணா
கண்ணின்இமைபோலே என்னையெல்லாஞ்செய்து
காத்தருக்கத்திருடா லட்சுமணா

௩. வெம்பெரிய கானில்அரக்கர்வந்தால் அண்ணன்
முன்போய்நில்லடா லட்சுமணா
தம்பிகையலப் பணிக்கஞ்சாமல்ஞானசொல்
சகித்துக்கொள்ளடா லட்சுமணா

௪. அலைநீபுறப்பட்டாலும் அண்ணன் இருக்கமட்டும்
ஆராய்ந்தன்னசெய்யலிடும் லட்சுமணா
மலைமேல்இருப்பாரைப் பயப்படுவாய்போய
மாய்க்கப்பேசுதலாமே லட்சுமணா

௫. உனக்கொண்ட அண்ணன் எப்படிசொன்னாலும் அப்படி
வழிவேனடா லட்சுமணா
இலங்கன்றுபோலும் அறிவாதென்றுபோவை
எதிர்த்தொன்றும்சொல்லாதே லட்சுமணா

௬. தாயேசீதையுன் தகப்பன்ராமனிந்த
கானமேநாடா லட்சுமணா
ஆயாசப்படாதே உன்னெண்ணம்முன்னையெல்லாம்
ஆகச்செய்துவாடா லட்சுமணா

௭. பின்றுஞ்சிசைவயும் மாயுங்காலமேராமன்
பிறகேவந்தேனென்று லட்சுமணா

நல்லமாமனென்றுதேசெல்வம்பண்ணியதிருக்
கூத்துக்கென்செய்யலாம் லட்சுமணா
௪, கர்த்தன்தசரதன் சித்தத்திலேயென்றும்
கட்டளைப்படிதானே லட்சுமணா
புத்திரர்கள்செய்தால் அப்போதல்லோஎன்றன்
புத்திரனீபோய்வாடா லட்சுமணா

—⇒✳⇐—

## ஸ்ரீராமர் பிரிந்திலக்குறித்துச் சீதைபிரலாபம்.

விருத்தம்.

மன்னாம்சிரங்கமாக்குக்க மதுதயானைஅனுப்பக்கொண்
டென்றும்சிரங்குமலட்சுமணன் றனைக்கண்டவேதுராமன்
நன்றாம்சானகிதனைப்பார்த்து நான்போய்வருவேனகேளு
மன்றும்பருவம்வனம்சென்றான் மாதாள்சீதைகலங்கினளே. (௰௫)

செஞ்சுருட்டி-ராகம்-ரூபகதாளசாப்பு.

பல்லவி,

எப்படி மனந்துணிந்தீர்தாசரதி-வனம்போய்வருகிறேன்
என்றுமிரைக்குமோ பூமி

அநுபல்லவி

எப்பிறப்பிலும்பிரியவிடேன் என்றகைதொட்டீரே
ஏழைஅனாதைதனைமட் டாற்றிலேவிட்டீரே-எப்படி.

சரணங்கள்

௧. கரும்புமுறித்தாற்போலேசொல்லல் ஆச்சுதோ-ஒருக்
காலும்பிரியேன் என்றசொன்னசொல்லும்போச்சுதோ
வருந்திருக்கிறதேவரீர் வெல்ல
வார்த்தைபாலக்கொல்லாமல் கொல்ல
இருப்புமனதுண்டாச்சு தல்லோ
என்னைவிட்டுப்போகிறேனென்று சொல்ல-எப்படி.

௨, அன்னைகொண்டவரம் உன்னைஎன்னைத் தள்ளவோ-நீர்
அழகுக்கோவில்எடுத்தது நிலம்ஒன்றிக் கொள்ளவோ
நல்லமேடைக்கென்னைத் தாரம்
கொடுத்தவன்மேல்அல்லோ நேயம்
என்னைவிட்டுக்கொண்டுபோவதோ பாரம்
இதுவோ உன்பின்னைக்கு வீரம்-எப்படி.



௩. காநகில்போய்இருக்கும்வனத்தில்போசொல்லவேணும்-அத்தை
காணமனதுக்கொவ்வுமோ நாஅதுகேட்பதகவல்லும காணும
சுந்தராட்சகனிருக்கும காடு
துணையில்லாமையாகிநல்ல காடு
காரிகைநானுலவாத வீடு
கல்லையும்தெரியும்என் பாடு-எப்படி.

## ஸ்ரீராமர் வனம்போகலாம் புரசனங்கள் புலம்பல்.

விருத்தம்.

ஆவகளும்சீதைமனதுக்காமன்
அப்பவேவருகனனும்வெளியேபோகதால்
தேவர்களும்முனிவர்களும்சலவமுனொர்
செயராமன்லட்சுமணன்சீதையோடும
மூவர்களும்மாளிகையைவிட்டுக்கொண்டார்
முடியபோலவேயோத்திநகர்ச்செருவிலேயே
போவதுகண்டஅதில்ஆணும்பெண்ணும்
புலம்பிஅழுதார்கள்விம்மிட்டலம்பினுமே, (௰௬)

மத்தியமாவதி ராகமும் ரூபகதாளம்.

கண்ணிகள்,

௧, அரசமணிமுடிவைத்துமேனேல்
வருகிறதுக்காகவும்பகலாலும்
அந்தக்கதைதுயர்நிறேவைத்து கொத்தரிலேபோகன்
மாவுரியுமணைமுடிமுடி
உடுதவேகாருமிருந்ததோயனைத்தங்கள்
வாயேவெயாதபோகவேமைம் மாதரிலேபோகவே

௨, அப்போதிக்குஅருணைமந்திருமனை
மெய்போவனம்போறல்கைக்கிளி
அறுதலையமெனைகல்லாமை தழுதாரிலேபோகவே
செய்யவின்செய்யக்கிப்பாதமே
வாகமேகெடுமனைக்குகெட்டுதக்கல்
இதிகொண்டவிருந்தபோமைமானமனைத்தாரிலேபோகவே

௩, கண்ணுக்குக்கண்ணதுகோகனைனை
எண்ணமும்எல்லாம்போச்சேராமனுக்குக்
காடேகநிமாயப்போகோவென்று கனைத்தாரிலேபோகன்

பஃறுளிதவம்இருக்கோதசரதன்
புண்ணியவான்ஆனால்ஒருதரம்
பழிகாற்சந்தமையாளோஎன்று பதைத்தார்சிலபேர்கள்

௪. சொல்லியவரம்தானென்றுகணவனைக்
கொல்லவேவழிபார்க்காள் அல்லாமல்
நாரதிஷ்டயாய்ப்பார்த்தாளோஎன்று நாடித்தார்சிலபேர்கள்

கல்உருகவும்புல்உருகவும்கண்ட
கைகேசிக்குத்தன்மகன்மாத்திரம்
கரும்போஇவன்வேம்போஎனமாம் கசிந்தார்சிலபேர்கள்

௫. முறைபோனன்னமூட்டப்பிள்ளையாகிலும்
மூத்தபிள்ளைஎன்றுசொல்லும்பழ
மொழிஆகிலும்ராமனுக்கில்லையோ வென்றழுதார்சிலபேர்கள்

குறையாமலேஇருக்கின்றகுடிய
குலத்திலேகல்லமாத்திலப்புல்லுருவிபோல்
குடிகேடிஎங்கிருந்தாள்எனக்குலை குலைந்தார்சிலபேர்கள்

௬. மைஆர்கண்ணிஇளையவள்தோதக
வலையிலேசிக்கித்தலைமகன்ராமனை
மன்னவன்செய்ததென்னசொல்வோம்என்றுவைதார்சிலபேர் (கள்

கைகேசியும்பிள்ளையும்கூனியும்
கட்டாந்தரைஅட்டையைப்போல்மன்னனைக்
கட்டிக்கொண்டுஎப்புரைட்டுமெனக்கூடிகலைந்தார்சிலபேர்க

விழிமுன்னே கொல்லுகிறேன்-மனு
யோசனை இல்லை இப்பொழுதிந்த
யோத்திக்கும செல்லுகிறேன்-வாகை
கேசிபாதனைல்லாரையும்வேருடன்
கெல்லுகிறேன்உன்னை வெல்லுகிறேன்-என்று(மாய)

## இந்திரசித்துவெட்டின சீதைக்காக அநுமார்புலம்பல்

விருத்தம்

வந்தபாதகன் இந்திரசித்தென்பான்மாயாசீதையைவாளாலே
விந்தைமாருதிநல்லவர்தனைசொலவும்நல்லாரையாசீதப்பட்டான்
பந்தமாம்துபோத்திமேலேபோகுகாடழிந்துபடலாய்நின்றதால்
சிந்தைமாருதிகணைவிட்டுசோமபின்னல் அழுதழுதுபுலம்பினனே

௯௪-தரு-எருக்கலகாம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இறக்கோகான்பட்டது கம்மா-பாவி அநுமான்
இனிமேல்காணனைசெய்வேன் அய்யா

அநுபல்லவி.

பிறந்தும்கண்ணில்லையோச்சே விழுவக்கிறைந்தநீர்சுச்சே-இதை

சரணங்கள்

௧. நயனமுடன்நானுவந்தேன் உன்உயிர்க்குக்கேதந்தேன்
ஆமென்றபடிசெலவேன் அய்யனுக்கெப்படிசொல்வேன்
சாமிதானென்னென்றுகேட்பான் தாய்நீஇருந்தால்அல்லோ மீட்பான்
இமைதானேமேல்பட்டதோ தெய்வமுமதான்கண்கெட்டதோ
இதுக்கோதான்.

௨. அன்னமேதாயேஎன்தன்னை அறிந்தாய்இந்திரசித்தன்னை
பின்னமேசெய்திடாமனே பிரேதம்போலஇருந்தேனே
சொன்னசஞ்சீவிகாத்தான்டி கொடுக்காகரானஉன்னைவேண்டி.
என்னவென்னசெய்தாலுமதுக்கே இப்படிஆச்சுதேஇங்கே
இதுக்கோதான்,

௩, அருந்ததிதொழும்பெண்ணே அனைவர்க்கும்இருகண்ணே
விரும்புமுயிர்க்குயிர்ஆயே விலக்குஜனனனனதாயே.
கரைதநாகாரனஉன்னைத்தேடி கண்டேனான்றுறுனேடி.
இருந்தாளன்றவராயாலே இறந்தாளன்னவோமேலே
இதுக்கோதான.

---

சீதைக்காகஇறங்குகிற ஸ்ரீராமனைலட்சுமணர் முடுக்குதல்

விருத்தம்

அஞ்சனைபாலகன்இந்தப்படிக்குசொன்னான்
அய்யன்இராமனுக்குப்போய்அறிக்கைஇட்டான்
செஞ்சிலைவீரனும்அறிந்தான்எறிந்தான்வில்லைத்
தேடினன்வாடினன்தியக்கம்கொண்டான்
தன்செயல்அனைத்துமமறந்தான்அந்தவேளை
தம்பியுமப்படிதளர்ந்தான்இனிமேல்சாமி
என்செயல்ஆவதாகமக்கும்இருப்பேதென்றே
இலம்சொல்வான்லட்சுமணன்சினம்சொல்வானே,

௫௩-தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

இனிமேல்யோசனைஏதையா-தேவிபோனபின்இராமகிறுல்ஆகாதையா

அநுபல்லவி

உனதாகவலைசொன்னால் ஊரார்க்கென்னகஷ்டியோ
சினம்வாங்கோபோச்சுதையோ சிலங்கருப்பட்டியோ-இனி

சரணங்கள்.

௧. இலங்கைஉள்ளாரும்தேவரும் எல்லாரையும்இப்போதகேசே
குலங்களோடும்கொல்லாவிட்டால் கொஞ்சம்சொல்லிகைப்புமே



புலம்பல்ஆமோஇன்னம்சம்ற பொறுக்கால்எதிர்க்கபேசை.
விலக்கிடும்போர்வார்அடிமை வேலையுமசெய்யச்சொல்வாரோ
இனிமேல்,

௨, விலக்கவும்சீதையைப்பாவி விசினான்றனுமான்சொன்ன
கலக்கம்கொண்டாய்தர்மக்தாக்கிற காலமோஅல்லவேசின்ன
கொலைத்தொழில்செய்தபாவிஎக்கும் கொறுத்துலாய்செருப்பா (மினன
தலைக்குமேல்ஓடியவெள்ளம்சாண்ஓடிஎன்னமுழம்ஓடிஎன்ன
இனிமேல்,

௩, காட்டில்அரசம்போச்சுதுவனுடைய தன்மையாலேலங்கதெண்டம்
காட்டிலும்வந்திருதக்கொலைனை கட்டிக்கொண்டேமேநானகெண்டம்
பூட்டிநீவில்லைவளைத்தால் பொடிப்பொடிஆமேமுதண்டம்
ஆட்டம்காட்டலஆமோசாமி அடியேன்சொன்னபடிஎங்கோதண் (டம்
இனிமேல்,

---

ஸ்ரீராமனை அநுமார் முடுக்குதல்.

விருத்தம்

சினமாஇப்படிஇளையோன்உரைக்கஇந்திர
சித்தயோத்துயின்மேலேபோனபோதகை
அநுமானும்சாமியுடன்சொன்னான்சாமி
ஆவிதுமோநினன்அந்தவேளை
புனைவீரப்படைகளையுமஉமையும்கொண்டு
போய்அரக்கன்முன்குநிற்பேன்அல்லவென்றால்
முனையாநானேபொருதசொலவேன்என்று
முடுக்குவான்மாருதியுமகவிகுலமே

௫௪-தரு-கல்யாணிராகம்-ஆதிதாளம்,

பல்லவி

இதுக்கோஇந்தயோசனைசாமி-அநுமானான்இருக்க
இதுக்கோஇந்தயோசனைசாமி

அநுபல்லவி.

பதைக்கிறேன்இந்திரசித்தை உதைக்கிறேன்அவனைநான்
வதைக்கிறேன்அயோத்தியில் புதைக்கிறேன்அதுக்கென்ன-இது

சரணங்கள்,

௧, சத்தியமதில்வரும் நீட்டி-ராவணன்தன்னைக்
எற்றிஊசிலேகையை
கொத்துப்பனங்காய்போலே தாட்டி-மகனேஇந்திர
பத்துத்தலையும்பிடித்

வந்தேனென்றவனங்கே
கத்தியலறப்பட்ட — பாட்டி-ஆட்டுக்குட்டிபோல
மொய்த்தவரக்கர்களை
குத்திக்குழுக்கினா — வெட்டி-பாராயென்சாமி
சற்றேலங்கைக்கத்தைப்பொருவ்வொரு
பச்சைப்போலாளாக்கிவிடச் செத்துவிட்டனடியேனே—இது

௨. துமிக்காளன்தாய்ப்புலைத்து
எடுத்தானவனுக்குக் — கிள்ளிட்டேன்-கொல்லாதேனென்று
படித்துப்படித்துச்சொலவி
அடிக்கடிவேண்டியேவடிக் — கொல்விட்டேன்-சேனாபதிப்பாவி
முங்கிவிழக்கண்டு
துடித்துத்துடித்துமனம் — விண்டேன்-பாதன்மேலே
வடக்குத்திசையைநோக்கி
கடகடவென்கண்ணீராக — கண்டேன்-உக்கிரமத்தால்
பிடிபட்டேனென்றுஅடியாக் — கடிபட்டேன்-அவனுயிரை
குடிப்பேன்பழிக்குப்பழி — முடிப்பேன்-என்றன்ஆகாதோ (இது)

௩. பூக்கபுவனமெல்லாம
காத்திடவந்தபரம் — ராமா-உன்வில்லுக்கும்
மூர்த்திகளாகிலும்
பாத்திரரோருகு — ராமா-தாம்செயயென்ற
சாஸ்திரமுடனே
தோத்திரமுந்தப்பிப் — போமா-நம்பினதேவர்
பேய்த்தனமாசொன்னவென்ன
கூத்திவர்களுந்தல் — ஆமா-சேனையும்தோளில்
ஏற்றிஉடமையும்கொடி — மாத்திரத்துக்குள்ளாக
கேதியாக்கொண்டுபோய்அ — யோத்தியிலகுறிக்கிறேன்—(இது)

———*———

## சீதையின் இருப்பைக்கண்டு விபீஷணன் ஸ்ரீராமருக்குஅறிவித்தல்.

விருத்தம்.

ஆளப்பரியஅனுமன்இது சொல்லவிபீஷணன் அதனை
அறிந்தான்காணப்போய்
வளப்பமெல்லாம்கண்டுவந்து சொல்வேனென்றிலங்கை
விரைந்துவிட்டாய்ப்போனான்



களக்கம்இல்லாச்சீதையையும் இலங்கையையரக்கன்செய்
வம்பகண்டான்
உனக்குவேலைக்கடலைக்கடக்கக் கணைசெய்வான்சாமிமுன்னே
உரைசெய்வானே.

௫௭-தருமோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி

இருக்கிறாளையா அசோகவனத்தினில்இருக்கிறாள்சாமி

அநுபல்லவி.

இருக்கிறாள்நமக்கொரு — பாக்கியமுற்றாற்போல
ராவணன்குடிகெடவொரு — சூனியமலைத்தாற்போல—இருக்

சரணங்கள்.

௧. போதுமேனென்றும் இருக்கிறேனென்றும்
முறைமுறை — யேயின்று-சொல்லும்
வ்யாதரக்கர்முன் புலிக்கூட்டத்திலொரு
மான்போல — மனம்மிண்டு-என்று
நிகலாதுராமாமிர்தமே
சேனை — ஆசஉண்டு-ராகு
காதலைஉன்கைவில்லையும்வா
ளையுமகண்டு — பரிபூரணம்கொண்டு—இருக்கிறா

௨. சொன்னமுறைப்படிச் சிறைப்பட்டதனையறிந்து
துவந்தாளன் — மேமுற்றுமோ-தர்மமேசெயம்
என்னகாதுவேதங்களும்...மாள்
இரக்கமும் — மிஞ்சுத்துமோகலைது
இனிமேதமெய்அனல்சந்திரசூரியகதி
இரண்டுமிதை — சேர்ந்துமோ-என்தன்
அனைவரையுந்தொட்டால்உவண்இன்னமுமிருப்பாளே
அருக்களிப்பேதக்கையோ நெருப்பைமுப்பற்றுமோ-இரு

௩. அக்கினிப்பிரவேசம்செய்யப்போனான்
அறிகேனே — அவன்குறை-சாமி
உன்தன்அயோத்திக்கவர் ஊர்அடிமைத்தலங்கிலே
உனக்கேன் — பலமேதை-சீதை
சீதைசேர்த்தவான்அடியேன்விபீஷணன்பெண்
இசைவை — எழுமபேதை-மதி

மந்திரி அனுமார்முன்னே-இந்திரசித்துகொன்றது
மாயசீதை அது     தாயார்என்பதை—(இருக்கிறு)

## ஸ்ரீராமர்லட்சுமணருக்குயுத்ததந்திரங்கற்பித்தல்.

விருத்தம்,

கலக்கம் அற இப்படிசொல்லிக் காட்டி அந்தவிபீஷணன்பின்
விலக்கவேணும்நிகும்பலையின் வேள்விமுடியாமுன்னென்றான்
பெலத்தபடையும்தம்பியுமன் பின்கூட்டென்றான்சாமிஉட்கொண்ட
டிலக்குமணனை அழைத்து உயுத்தன்சொல்லத்தொடுத்தானே

௫௮-௫-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி,

தம்பிலட்சுமணு-இந்திரசித்தன்-தலைகொண்டுவாபோடா

அநுபல்லவி

நம்பிஉன்னுடையவர் எதிர்ப்பார்கள்
நான்அறிவேனேஉன்     வீரம்-சத்தியம்
ஆனதுவே     உபசாரம்-உனக்
கேன்இனிச்சொல்லவிஸ்தாரம்-இதுவேபாரம்-இக்கோரம்-அடா-தம்

சரணங்கள்.

௧. முதல்ச்சண்டைபோல்மறுசண்டைபோல்ச்சேனையை
மோசப்படுத்தாமல்த்     தேக்கி-நின்று
பகைத்தவன் அம்புக்கெதிர் அம்புபோட்டுப்
பதினாள் ஆகவே     நீக்கி-காலு
விதத்திலும்போர்செய்து கைமெய்சலித்தவன்
மெலிவானவேளையை     நோக்கி-மார்பில்ப்
பதித்தகவசமுமவில்லையும்போக்குவாய்
பார்த்திடுவார்தேவர்     சாக்ஷி-அந்த
கூற்றுவன்போல்அம்பு     தாக்கி-எல்லாம்
தோற்றிடவேஒன்றாக்கிஉயிரைப்போக்கிவெட்டித்தூக்கி-அடா-தம்

௨. ஆசைநிகும்பலை வேள்விமுடித்தாலப்பின்
ஆராலும்வெல்லக்கூ     டாதே-ஒரு
கேசரிப்போலப்படை யோடும்போய்அத்தனைக்
கெடுத்திடுவாய்வேளை     யாதே அந்த
ஈசன்ஆனவன் பிரம்மாஸ்திரம்தொட்டால்
நீயும்பிரம்மாஸ்திரம்தொ     டாதே



ஈசன்சூலமும் சக்கரமும்இவை
சண்டையும்போட நினை     யாதே-அது
தாண்டிதுண்டாகும்சப்     பாதே-அவன்
சண்டைஎல்லாம்மெய்யாய்ந்தேமலைக்காதேஇப்போதேஅடா
தம்பிலட்சுமணு.

௩. மந்திரவாள்இது இந்திரன்கையினில்
வச்சிரத்தைப்பொய்யும்     நீங்கு-பார்
இந்தவில் அந்த மாயவனவில்இதனை
ஏதும்செய்யாதுபோல்     லாங்கு-என்று
அந்தகாளிகைக் கும்பமுனிசொல்ல
அதிகமாய்நீ அல்லவோ     ஆங்கு-இனி
வந்தமக்கு அருமைதானேபிர
மாணம்என்றுகையில்     வாங்கு-நான்
பூஜையும்வசத்தது     தாங்கு-அம்பறுத்
தானைஇந்தப்பிடித்தோங்கு-வென்றுநீங்கு-இதேபாங்கு-அடா
தம்பிலட்சுமணு.

## இந்திரசித்தை அநுமார்பழித்தல்.

விருத்தம்,

படிக்கார்ராமன்சொன்னபடி பாய்ந்தார்லட்சுமணன்முதலோர்
அடிக்கார்பிடித்தார்கரிபரிதேர் அழித்தார்கழித்தார்அரக்கர்உயிர்
குடித்தார்கடித்தார்படைகள்தை குலைத்தார்கலைத்தார்கொக்கரித்தார்
இடித்தார்வரிவில்இந்திரசித்தை இழுப்பானஅநுமான்பழிப்பானே.

௫௬-௫-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்திரசித்தேஉன்தன் - தந்திரவித்தைகள்எல்லாம்-எங்கேபறப்பட(டா

அநுபல்லவி.

உன்தன்நிகும்பலையில்     ஒளித்துச்செய்கிறாய்பூசை
ஒளிக்கும்சேவகனுக்கு     முகத்திலஎனடாமீசை—இந்தி.

சரணங்கள்,

௧. முந்தகன்தாயைப்போல்     ஒருத்தியைக்கொன்றாயே
முடிக்கஅயோத்திமேல     நடக்கிறேனென்றாயே
நீயும்சென்றாயோ
பகல்அலைக்கவேறா     வென்றாயோ
பரதனை     வெட்கலச்சைகேடா
அந்தராவணனுக்கு
அங்கத்தைக்கொண்டுபோய்ஆற்றில் அலைசொன்னதோ
நடா

வந்துநாணிக்கொள்ள — மஞ்சமோகயிறு
வாளுள்வைக்கவேணுமோ-சான் அல்லவோவயிறு—இந்தி

௨. விடுக்கும்வச்சிராயுத — முனைவேலாயுதம்
விஷ்ணுசக்கராயுதம் — சிவன்சூலாயுதம்
எடுக்கும்நாகபாசம — பிரம்மாஸ்திரத்தோடு
எதைவேணும் — அதைகப்போடு
இடுக்கிடவினைசெய்யும் — உங்களுக்கேகாசம்
செத்தவனேஎங்க — ளுக்குண்டோடாமோசம
அடுக்களைப்பூனைபோல் — இடுக்கிலேகழிக்கிறாய்
ஆடெடுத்தகள்ளன் — போலேவிழிக்கிறாய்—இந்தி

௩. நிறைகடல்போலஉன் — சேனைகள்களமேலே
கோராகவிழுகத்தைப் — பாரடாகவ்ணாலே
பறபறப்பிலேங்கும் — பலையாகமும்போச்சே
பாழும்கடலே — ஆச்சே
இதுகருவிகமனும்வந்து — குறுகிக்கொண்டான்உன்னை
காலம்முடிந்ததினி — மேலேஎன்னடாமுன்னை
சிறைபட்டஇந்திரனும் — குறைவிட்டுத்தழைக்கிறான்
செல்வலட்சுமணன்இதோ-கொல்லவந்தழைக்கிறான்—இந்தி

இந்திரசித்துக்கும்லட்சுமணருக்கும்.

மூன்றும்முறையுத்தம்.

விருத்தம்.

மாருதிஇவ்வாறோத வனாந்தராசுருதரும்சேனை
வீரவானரரும்சண்டை விளைத்திட்டார்இந்திரசித்தன்
தேரினில்ஏறிக்கொண்டான் சிலைகொண்டான்தம்பிதானும்
மாருதிமேல்கொண் டம்புவருஷித்தான்கருஷித்தானே

ராக-தரு-கலியாணிராகம்-ரூபகதாளம்-

பல்லவி,

அஸ்திரவருஷம்தம்பிபொழிந்தானே கிரும்பலையிலே இந்திர
சித்தனபடைகள்போ பொழிந்தானே

அநுபல்லவி

வைதகசயித்தும் பிணமும்எரியட மந்திரபூரணகும்பமநெரிபட
எத்திஅதில்வழும் தேரும்திசைபட எருமையின் கூட்டங்கள்எல்லாம்
ரத்தமழுந்திட சும்மம்விழுந்திட (வதைபட
யாகம்கலைந்திட பூசம்குலைந்திட—அஸ்திர



சரணங்கள்,

௧. ரதரில்அரக்கன்ஏறி அனுமானைச் — செய்தான்
சிலகணையால்க்கலை
கேரில்எழுந்த அனுமன்புயம்தம்பி — பெய்தான்
நின்றகணைசில
சூரியவாளிகளால அரக்கன்அந்த — அறுத்தான்
குரங்குப்படைசிந்த
வாரிஅம்பால்தம்பி அரக்கன்சேனையை — மடித்தான்-தேர்
மண்ணோடுமண்ஆக
வலம்கொண்டுசுற்ற-அனுமான்-இடம்கொண்டுதேத்த-அவன்தேர்
வானில்உலாவ அனுமான்கூட்டென்னன்றதாவ-இருவர்கை
வாழிநெடுங்கணை — எங்கும்மறை இட
மலைகள்எல்லாம்வெந்து — நீருய்இ
எழுகடல்நீரும் — வற்றிக் நடபட
எட்டுத்திக்கும்தெரி — யாமல்மறைய
எங்கும்புகைமுட்ட — எங்கும்தணல்கொட்ட
இரவுபகல்ஆக — திருதன்மனம்கோக—அஸ்தி

௨. இளையான்மேல்பின்னும் அரக்கன்சிறி — விடுத்தான்
இருபத்தைந்துகணை
தொளையா அவன்மார்புமகவசமும்தப்பி — தொடுத்தான்
தொளைத்தோடஓர்கணை
கணைஆய் அவன் அனுமான்மேலேரத்தம் — விதைத்தான்
காணச்சிலகணை
வளையாவரும்அனுமான்தேரினை — உதைத்தான்-அவன்
மனுக்கென்றேடியவே
மற்றொன்றில்ஏறி-அய்யன்மேலே- பத்தம்மைத்தூறி - விடத்தம்பி
மற்றொன்றில்ஏறி-அய்யன்மேலே- பொட்டஅவன்
வடிக்கணைசிந்தி-அவன்அதைத்-தடுக்காமலமுகநி - அம்பால்தொளைசெய்ய
மந்தரத்தோளைஓர் — தேரைவிழக்கொய்ய
மற்றோர்அம்பால்அவன் — கக்கிஅவசத்தில
கொரதரக்கன்ரத்தம் — தடபிகவசத்தில்
நாறுபத்தம்பெய்யத் — பழுதாய்விடக்கண்டு
நழையாமலேவிண்டு — எங்குமதன்கைமுகத—அஸ்தி.
நுங்கிஅவன்பிந்த

௩. சிந்தச்சிலகணை அரக்கன்பின்னும்அந்தச் — தூற்றினான்
சேவகன்மார்பினில்

புத்திமதிதம்பி அரக்கன்மனதெற்றி
புதையச்சிலகனை — ஏற்றினன்
இந்தவில்அந்த மாயன்வில்இவன்
நாசன்ஆமனென்றவன் — கூசினன்
அந்தவேளை விபீஷணன்தம்பியை
அரக்கன்மேலுருமேகனை — பேசினன்-அவன்
அக்கினி-அஸ்திரம் விடத்தம்பி-அக்கினி அஸ்திரம்-விட்டே அவனை
ஆதித்தன்-அஸ்திரம்-விடத்தம்பி-ஆதித்தன அஸ்திரம் விட்டேவிசை
ஆகப்பின் ஐம்பில் — அம்பைப்பொழிந்திட
அணிஅணியாகின்ற — தேர்கள்அழிந்திட
எத்திசைக்கும் — கெசங்கள்படிந்திட
ரத வீரர்கள் — அருமடிந்திட
இற்றனை ...ங்களும் — அற்றுமண்டைகளும்
லங்கையிலப்போய்வீழ — மங்கையர்கண்டழ—அஸ்தி

௪. ஆரணன்அஸ்திரம் அவன்விடச்சிவன்
ஆயுதத்தால்தம்பி — கொய்தான்
காலன்சூலத்தை அவன்விடத்தம்பி
கைச்சூலத்தாலப்பொடி — செய்தான்
நாரணன்அஸ்திரம் தொட்டரக்கன்எங்கும்
நடுங்கிடவேஎய் — தோங்கினன்
போரினில்தம்பியை அதுவலஞ்செய்து
போகக்கண்டேபயந் — தேங்கினன்தன்
புத்தியுங்கெட்டான்-தனக்குள்ள-சத்தியும்விட்டான்- தம்பிசெய்த
போரையும்பார்த்தான் - ஓடிஒளிக்க - ஊரையும்பார்த்தான்-அதுக்கும்
போக்கிடம்இல்லாது — பார்த்துமெல்பட்ட
போதினிலேஅந்தப் — பாதகன்மேலப்போட்ட
வாக்கிஅய்யன்அம்புபோடக் — களைபட்டு
மார்பும்கரங்களும் — தோளுந்தொளைபட்டு
வல்அரக்கன்லட்சம் — எல்லாம்ஒருலட்சம்
சல்லடைக்கண்ஆகச் — சில்லிகள்ஆய்ப்போக—அஸ்தி

## இந்திரசித்துவிழமண்டோதரிவயிற்றெரிச்சலாலேங்குதல்

விருத்தம்,

சில்லிகளாய்ப்போன இந்திரசித்தனவன்அழிந்தொருதேர்மேல் நின்றே, கல்லின்மழைஎன அம்புபொழிந்தங்கேவீடணனைக்கண்டான்



எம்மைக், கொல்லவிரும்பலைகெடுத்தாய் அரக்கர்குலத்தையுங்கெடுத்தாய்கோளினாலே, எல்லவரையுங்கெடுத்தாய் என்றுவசைபேசுவானேகவானே.

௪௩-ரு-பைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி

சிற்றப்பா நீதான் - இக்கினஅபகீர்த்தி பெற்றதேபோதும்அடா.

அநுபல்லவி,

சத்தியவிபீஷணனென்ன — கெடுத்தாயே-பேர்கான்
கெடுத்தாயே
சமைத்தகுடும்பவேயும் — போனுமோ அய்யோ
பெற்றமனிதர்களைப்பி
வளர்த்தபிடாக்கையில் பாய்ந்தாற்போலஆனதே—சிற்றப்

சரணங்கள்.

விபயம்சொல்லிமாயப்பூனைபோலத்தம்கொண்டாய் — கெல்லவோ-நாங்கள
வேறுடனேஎங்களைக்
அவைவரும்இறந்தபின் ஓராங்காரியா — செல்லவோ
அரசாளலங்கையில்ச்
இருமழுநகலத்தில உண்டும்இப்படிசதி — செல்லவோ-அற்ப
செய்தபாவம்இராச்
மனிதர்க்கும்பஞ்சை ஆய்ப் பணியச்செய்கிறாய்உயிர் — அல்லவோ—சிற்றப்
வைத்திருக்கிறதிலும் செத்தால்குணம்
மாடுமேய்க்கிறப்போல தடிகொண்டுதிரிகிறாய் — துறந்தாயோ - இனி
மானமும்லச்சையும்
குடிமுழுபெற்றதும் இவ்வாமனிதர்க்கு — இரங்கயோ
தொண்டன்ஆய்வாய்என்ன
தேடிநம்மையனைக்கும் பேரைநாமலனக்கினால் — மறந்தாயோ-உன்னுடன்
சின்னத்தனம்என்பதைக்
கூடப்பிறந்தவனைக் கொல்லன்றுகோட்சொல்லி — பிறந்தாயோ—சிற்றப்
குடிகெடுக்கவென்றிந்த குலத்தினில்ப்
பாந்ஆனல்ஆய்என்று மனப்பால்குடிக்கிறாய் — தன்றுமோ-இந்த
பஞ்சைஉன்றால்அது
ஊரில்வாரதுக்கு வழிஇட்டாயேஉனக் — கின்றுமோ
கொருக்காஅமவசைஇது
நீர்உள்ளமட்டுக்கும் மீனுமதுன்றும்அந் — தன்றுமோ-வெகு
நீர்போனாலமீனென்ன
பேர் ஆமாட்சுதர்எல்லாம் போயப்நீஒருத்தனும — நன்றுமோ-சிற்ற
பிணந்தின்றும்பூச்சிபோல் இருந்தாக்கனம்கொள்ளுமோ

## விபீஷணர் இந்திரசித்துக்கு நன்மொழிதல்

### விருத்தம்

எல்லாம்கூட்டன் இந்திரசித்தன் இவ்வாறுரைக்கஉரைத்ததெல்லாம்
செல்லாதடடா தருமமுமசத்தியமும்நாளைக்கொண்டேன
பொல்லாப்பாவமகைக்கொண்டாய் போவாயஉருண்டுபோவாயென்
நல்லார்மேனிவிபீஷணன்எச் சபைப்பாளமறுசொல்உரைப்பானே.

கூ௪-தரு-புன்னாகவராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி

அதேடப்பயலே-இந்திரசித்தேஎன்ன-சொன்னாய்அடாபயலே.

அநுபல்லவி.

இஷ்டம்ஆம்எனக்கு ராமன்பதமோசொந்தம்
எனக்குமஉங்களுக்கும் இனிமேல்என்னடாதொந்தம்—அதே

சரணங்கள்,

க. மன்னர்ஆகிமுன்பின் தர்மமதனைஅல்லாமல்
வாழ்ந்தவர் எவர்தாமோ
தன்னிலேகுதிக்கிறாய் பாவச்சாம்அல்லாமல
தர்மமனை பதுசாமோ
கன்னிசீதைஅன்னை சிறைஇருந்தழுகிற
கண்ணீர்சும்மாப் போமோ
அன்னிஸ்பதிரிபுண்ணியஸ்திரி என்றெண்ணிப்பாராமல்
அபகீர்த்தியம்செய்யும்உங்கள்முகத்தில்விழிக்கல்ஆமோ - அதே

௨. சிக்கைவஞ்சனைசெய்யேன் புலைசெய்யேன்கொலைசெய்யேன்
தெய்வமஎன்னை ஒறுக்குமோ.
அந்தப்புத்திஉங்களுக் கிருந்தால்வரவர
ஆறிக்கமும சிறக்குமோ
என்தாய்சீதைமேல் ஆசைஉன்அப்பனுக்கு
இன்னம்தான் வெறுக்குமோ
இந்தபுத்தியினாலே இலங்கைச்செல்வம்எல்லாம்
இழுக்கல்ஆச்சேகாய்க்கு முழுத்தேங்காய்பொறுக்குமோ-அதே

௩, கொடும்பாவம்என்ன-செய்தேனோ நான்உங்கள்
குலத்தில்வந்துடம் பெடுத்தேன்
கடகருபோகவேண்டி உங்களைக்கடலிலே
[illegible]றவி விடுத்தேன்
மடக்காராவணனுக்கு எத்தனைபுத்திகள்
வகைமணியாத் தொடுத்தேன்



அடங்காப்பாம்புக்கு ராசா! மூங்கில்தடி
ஆம்என நவனைவிட்டு ராமன்தனை அடுத்தேசன்—

## இந்திரசித்துதகப்பனுடன்முறைபடுதல்

### விருத்தம்

எதிர்கொல்வடி வவார்த்தைசொன்ன விபீஷணன்மேல் அம்பொன்
றையெய்தான் அத்தைக்,கதிகொண்ட தம்பிகொய்தான்வேலெய்தான்அ
த்தையும்அக்கணத்திலக்கொய்தான், முதிர்கொண்டகோபமுடன்சொ
ர்ச்சனைவிட்டொளித்திலங்கைமூதூர்சேர்ந்தான், குதிகொண்டான்அ
ப்பன்முன்னே முறைபட்டான்இந்திரசித்தன் குறைபட்டானே.

கூரு-தரு-கேதாரகௌளராகம்-ஆதிதாளம்,

பல்லவி

அய்யாராவணா-என்னும்சன்னையை ஆகாதாகாதைபா,

அநுபல்லவி.

கொய்ஆம்மனிதன் கைஅம்புகளாலே
கொந்தேஒளித்தோடி வந்தேஇனிமேலே—அய்யா

சரணங்கள்

க. வட்டவார்உலகில்த் தம்பிறக்கத்தனை
மட்டம்ஆச்சுதென்பார் எனக்கேஅந்ததனை
கிட்டிஉன்தம்பி—ன் வேள்வியைத்தடுத்தானே
கெடுத்தான் கெடுத்தானே
திட்டம்ஆனதொரு பிரம்மாஸ்திரம்போட்டு
சிவன்படையுடனேகே சவன்படைதன்னைவிட்டும்
குட்டிக்கரணம்போட் டென்றாலேஆனமட்டும்
குதித்தும்குடத்தில்இட்ட விளக்காச்சேஎன்னபட்டும்—அய்யா

௨. ஆரும்அறிவா ரேஎன்கைவில்லை
ஆண்டுஎன்காரியத்தில் சற்றும்வஞ்சனைஇல்லை
ஜாராளமா அடிக்கடிபோய்நின்றேன்
சகலபே ரையுங்கொன்றேன்
வாராஉயிர்வந்து வந்துகினைக்கிறார்
வருத்தபயறெழுந்து முனைத்தாலபோலமுனைக்கிறார்
இராப்பழிகொண்டோம் ஆரைவிட்டதுசனி
தெய்வபலமும்இல்லை செய்வதென்னடோஇனி—அய்யா

நீறிஆகோம் — என்செல்வம்செருக்கிறேம்
நீயுமாறும்அல்லோ — தப்பிஇருக்கிறேம்
ஏகோபலம் — வரவரஅடங்குதே
எந்தஅடி — மடங்குதே
ஆகலாலஅவர்முன்னென்றுசெல்லாமல்விட்டுப்போட்டேன்
அங்கேஇன்னமும்போனுல் — இங்கேநானவராமாட்டேன்
சினக்கவைவிடுவது — காரியம்அப்பால்உன்றன்
சித்தத்துக்குச்சரிப் — போனபடிஎன்றன்—அய்யா

இந்திரசித்தைராவணன்உதாசனித்தல்.

விருத்தம்,

இனம்கொண்டிப்படிசொன்னை இசைத்ததைஇலங்கைவேந்தன்
சினம்கொண்டதனலவாய்செய்யைககவிழ்த்ததுபோலேகொண்டான்
மனம்கொண்டபயத்தாலச் சொன்ஞய் மனிதரோர்பொருட்டோஎன
சினம்கொண்டேஇந்திரசித்தைச்சீறிவாய்கூறுவானே, (லச்

கூசு-தரு-சாதாரமக்கிரியைராகம்-ஆதிதாளம்,

பல்லவி,

என்னபுத்திசொன்னுய்அடா-இந்திரசித்தேநீ-
என்னபுத்திசொன்னுய்அடா

அநுபல்லவி

என்னபுத்திசொன்னும்நீ சின்னமனிதர்க்கஞ்சி
என்னுடனேமுறை — இட்டாயே-பயப்
பட்டாயே-நீ
கெட்டாயே(என்னபுத்தி)

சரணங்கள்.

க. ஆறுமுகனையன் கோன் ஆறுமுகமிலையை
மேறுவின்னைபித்தனைத் — தலம்போச்சோ
நாறுசெய்வதற்குநீநாறுபடவேநீ
போர்தனிமன்னனென் — குலம்போச்சோ-படைக்
கலம்போச்சோ-மூல
பலம்போச்சோ(என்னபுத்தி)

உ, சோருவேருமனிதர் சாவுசிலாயுமெறி
வேருடனேகல்லிப் — பறியாமல்



X நீரும்போதுமரமன் பேரும்என்பேருமெல்
லாரும்சொல்லிக்கொள்வார் — பறியாமல்-இந்தை
அறியாமல்-முன்னே
குறியாமல்—என்ன

௩. செயம்ஆனகீர்த்தியை முயலாமல்மனிதர்க்குப்
பயம்ஆய்அபகீர்த்தியைத் — தொடுவேனே
கைபிலஆகாதவன்போலே மயிலபோலும்பிணைகைய
உயிரோடேநான்இனி — விடுவேனே-முது
கிடுவேனே-சுமமாய்ப்
படுவேனே—என்ன

நிலாமுனையுத்தத்தில்இந்திரசித்தன்வதை.

விருத்தம்

தவறுபடா திடக்கும்ஒரு தலைவலிக்குத்
தலையணையை மாற்றிப்போட்டாற்போமோஎன்
உலமைந்த என்மகன்வார்த்தை யைக்கேளாமல்
உறுமும்இராவணனைவிட்டான் னாவிட்டான்
கவனமொடா பிரம்குதிரை கொண்டதேர்மேல்க்
கடல்படையும் தானும்போர்க் களத்தில்வந்தான்
புலன்னைலட்சுமணன்அம்பு பாயப்பாயப்
பாய்ந்திட்டான் இந்திரசித்து மாய்ந்திட்டானே.

சுயி-தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி

விழுந்தானே-இந்திரசித்தன்-சுமித்திரையின்மகன்மேல்.

அநுபல்லவி.

இழந்திட்டோம்இலங்கையை — என்மனம்பின்னிடின்றி
அந்தத்தழுவி அப்பன் — ஆசைவிண்டுவிண்டு
எழும்பிப்பரிசுரா வீரம்கொண்டதேர்மேல்கொண்டு
குழந்தைத்தம்பிகைஅப்பாக்க விடுத்திட்டுவைதயுண்டு—விழு

சரணங்கள்.

க. விறையக்கணைதொடுத்தார் இரண்டுபேர்களும் — மழைபோலே
கெறகெறென்றுசொரி

X இந்த இரட்டித்துப்பாடியபோது நான்னென்முதல்லேசுட்
டிப்பாடிக்கொள்ளவும்.

பிரகலன்தேரையும் சாரதிதலையையும்
  பிளந்தானே தம்பி — அதன்மேலே
உறுதியா அரக்கன் கல்லின்மழைபொழிய
  உருண்டதே குரங்குகள் — ஒருகாலே
கருவிழி இளையவன் ஒருகணைவிட அந்தக்
  கனைகைதாக்கனைமேலப் — படலாலே
மறையும்கவசமபிளந் தாடம்படங்கனும்தைத்து
  வடிக்கனைநான்றால்அவன் விம்மிவன்குலமஇற்று
பிறையைப்பாம்புதொட்டுத் தரையில்விழுவதொத்து
  பிடித்தவில்லுடன்அவன் இடக்கையும்கூடஅற்று—விழு.

௨. வளர்த்ததாயாரும பெண்களும்இலங்கையில்
  வாய்விட்டழுதக்கண் — ணீர்வடிக்க
இனைப்பிலா இசை வந்ததென்றுபேய்
  எழும்பிஎழும்பிக்கொண் — டான்அடிக்க
ஒளித்திருட்டரக்கன் வருகிறானென்றுதேர்
  ஓசைகொண்டுதேவர் — கிலிபிடிக்க
கிளைத்தமலைபோலே ஆகாசத்திலவந்து
  கெர்ச்சித்தானேஅண்ட — மும்வெடிக்க
கெளைப்பில்லாமலவரும் — சேனைகளெட்டு
  திக்கிலும்மலட்சுமணன் கைக்கினாஆகவிட்டு
குளத்தைக்குழப்பிஅங்கே பருந்துக்கிரைஇட்டு
  கொடுத்தாலப்போல் அரக்கரைக்குரங்குக்கேஇட்டுபட்டு-வி

௩. நித்தியம்ஆவது வேதவிதிவச
  னத்திலேசொல்லும் — பொருள்ஒன்று
சித்தி ஆவது வேதியனைத்தெரி
  சிதறுவருகிற — தேகன்று
கர்த்தன் ஆமருராமனேபர
  தத்துவம்ஆம்அவன் — வேறன்று
(X) சத்தியம்எனில்இந்திர சித்தன்தலையி
  றத்திலேகொண்டு — வாவென்று
அர்த்தசந்திரபாணம் அய்யன்தொடுத்தாற்போலே
  அற்றதேஅவன்தலை எறிவிடுத்தாற்போலே
தத்துவமுனிவர்க்கெல்லாம்வெற்றிகொடுத்தாற்போலே
  தளருமஇந்திராதியர்க்குக் களைஎடுத்தாற்போலே—விழுந்

(X) இதைஇரட்டித்துப்பாடும்போதுஇவைஎன்றுமுதலிலேகூட்டிப்பாடிக்கொள்ளவும்.



## இந்திரசித்துவதைராவணன்கேட்டு இடத்திலேபுலம்பல்.

விருத்தம்.

இந்திரசித்தன்இந்தவிதம்விழுந்தான்தேவர்
  இரக்கத்தால்குரங்கினத்தார்எழுந்தார்தம்பி
வந்தனுமானுடன்போனான்சாமிகாலில
  வல்அரக்கன்தலைதனைஅங்கதனும்வைத்தான்
தொந்தவிபீஷணனைஅய்யன்மகிழ்ந்தான்அப்பால்த்
  தூதர்இராவணற்குப்போய்ச்சொன்னார்சொல்லப்
பந்தமெரிந்தாற்போலமகனைஎண்ணிப்
  பத்துவாயாலும்அலன்கத்துவானே.

௪௬-இபனைத-ஆநந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. மந்திரியேஎன்துரையே-மகனே மகனேஎன்பான்ஒருவாயால்
  இந்திரசித்தேஇந்திரசித்தேஎன்று இரைந்தழுவான்ஒருவாயால்
இருக்கிலென்னைத்தவிக்கவிட்டுநீயும் இறந்தாயேஎன்பான்ஒருவாயால
முகத்தைஇனிக்காண்பதெப்போதே என்றுமுறைஇடுவான்ஒருவாயா
௨, பனிவாழைக்கனிதனிலே-முள்ளு பாய்ந்ததுபோலேமகனே
மனிதன்அம்புகள்பாய்ந்ததோ- உன்தன்மார்பிலென்பான்ஒருவாயால
௩, பாமசேர்இந்திரன்முடிமேல்-மகனே பதித்தமணிந்தமணிமாலை
  கான்காலில்விழல்ஆச்சோ-இந்த காளில்என்பான்ஒருவாயால்
௪, தள்ளும்முசலரலேசிங்கம்-பெருந் தாவில்விழுந்ததுபோலே
பிள்ளைமனிதன்கைஅம்பால்பட்டுப் பிரண்டாயோஎன்பான்ஒருவா
௫. ஈசன்முதலோர்படைகளும்-உயி எனப்போமேஉன்னைக்காலயால
  பாசமறுதீண்டிடுமோ-இப்போ பதறிஎன்பான்ஒருவாயால்
௬, அரனையும்மாயனையும்வென்றுதிக்கில்அடுட்டசெயங்களையும்வென்று
  நரனுக்குத்தோற்றிடல்ஆச்சோ இந்நாளில்என்பான்ஒருவாயால்
௭, மலைகலங்கினும்மசற்றேஉன்தன் மனதுகலங்காயேமகனே
  நிலைகலங்கிவிழுந்தாயே-இந்த நிலத்தில்என்பான்ஒருவாயால்

## இந்திரசித்துக்காகராவணன்ரணகளத்திலேபுலம்பல்

விருத்தம்.

என்றழுதுகளம்பார்க்கஎடுத்தான்பின்னை
  இடக்கையும்வில்லும்அற்றுக்கிடக்கக்கண்டான்

சென்றெடுத்தான் முண்டம்ஆய் உடம்பைக்கண்டான்
சிரங்காணான் இரங்கினான் உலகம்மூன்றும்
வென்றவன் இந்த அலங்கோலம்பார்க்க
விதித்தாயோ என்மகனே மகனே என்று
கன்றிழந்தபசுப்போல வாயைவிட்டுக்
கதறினான் ராவணன் பயபதறினானே.

௯௯-தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

மகனே இந்திரசித்தே காண்-இனி மனதெப்படி ஆறுவேன்,

அநுபல்லவி.

இசம்மேல்காண் ஒரு பெண்ணாசையைத்தொட்டு
என் உயிர்க்குயிரான உன்னை இழந்துவிட்டு—மக

சரணங்கள்,

௧, வனமான் ஒருபுலியை அடித்தாற்போல
மனிதனை உன்னை அடிக்க விடுத்தேனே
கனமும் ஞானத்தனமும் தரும் உன்னை என் இரு
கண்பறிகொடுத்தாற்போலக் கொடுத்தேனே
மனிதன் காலைச் சண்டை யினில் என்னை மாட்டுவானே
மயங்கிய நமனும்மைச் சங்கிலி ஆட்டுவானே
இனிமேல் இந்திரனும் எனைக்காப்புகாட்டுவானே
இலங்கையில் சூரியன்தேரைக் கலங்காமல் ஓட்டுவானே—மக

௨, நாற்றிசையிலும் உன்தன் சுத்தமார் அழக்கண்டு
காணும் அமுதுதக களிப்பேனோ
சித்தியாம் சிவனுக்கும் மாயனுக்கும் பயந்து
திருடன்போலே இனி ஒளிப்பேனோ
பார்த்தால் இனி இந்த லங்கைத்தெருவாரே
பரியாசம்செய்து என்னைத் தானென்று மருவாரே
பேர்த்தெவரும் வகை வார்த்தைகள் தருவாரே
பெண்டுகள் கூட இனிச் சண்டைக்கு வருவாரோ—மக

௩, பயம்ஆம் குரங்கினில் ஒன்றும் செத்ததில்லையே
படிகளத்தினில் நீயே செத்தாயே
கயமாய் எனக்கு நீ செய்யும் உற்றுரிமையை
நானே உனக்குச்செய்ய வைத்தாயே
உயிரோடே மன்தன கையில்விழுந்தபேச்சே
உலகம் உள்ளமட்டிக்கும் தொலையாதோ இதுவச்சே



வயிரம்குடலும்பற்றி மண்டி எரியல் ஆச்சே
வல்லமையும்செல்வமும் எல்லாம் உன்னோடே போச்சே—மக

## இந்திரசித்துக்காக மண்டோதரிபுலம்பல்

விருத்தம்,

எடுத்திந்தவண்ணம் போர்க்களத்தினுள்ளே
இராவணனும் அழுது மகன் உடலைக்கொண்டு
தடுக்கரிய அரமனையில் வந்துசேர்ந்தான்
தாய்மண்டோதரி அறிந்தாள் அவன்கால்விழுந்து
கெடுத்தாயோ மகனை என்றொப்பாரி சொன்னாள்
கெட்டகெடு என்றுபுரண்டாள் பின் மகன்மேல்விழுந்தாள்
அடுத்தமகன் உடலைத்தன் கண்ணீராலே
அலம்பினாள் பதைபதைத்துப் புலம்பினாளே,

௱-தரு-ஆஹிரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி,

ஐயோமகனே-இனிஎன்செய்வேன்-ஐயையோமகனே,

சரணங்கள்,

௧ கைஇருபதுள்ள உன்தன்
ஐயனைப்போல் மூவுலகும்
மெய்மை ஆக நீ அரசு
செய்குவாய் என்றிருந்தேனே
ஐயோ, (முன்

௨, குழந்தை ஆய்ப்பிறந்த அன்
றழும்குரல்கேட்டிடுமேகம்
மழுங்கியே கெங்கைமண்மேல்
விழுந்தசீர்த்தியும் பாழாச்சே
ஐயோ,

௩, தன்னிகர் ஒன்றும் இல்லாத
உன்னை இவ்வுலகத்தில் ஓர்
சின்னமனிதன் கொல்லவே
என்னபாவம்பண்ணினேனே
ஐயோ,

௪, அம்புலிவாவென்ன வந்து
கும்பிட்டவன்மேல் அமுதை
வழங்குமென்றாக்கும் உன்தன்
தென்மையான் என்று காண்பே
ஐயோ, (னே

௫, கண்ணேஎன் கருக்குலமே
மன்னனே என் ஆனையோ
பெண்ணாலே கெட்டகுடியாப்
பண்ணிவிட்டானே உன் அப்பன்
ஐயோ,

௬, காட்டுச்சிங்கக்குட்டிகளைக்
கூட்டி நீ பிடித்த சண்டை
மூட்டியும் உன்னையும் வளினை
வாட்டை என்றைக்குக் காண்பே
ஐயோ, (னோ

௭, சின்னஞ்சிறு[illegible] [illegible]னில்
இனையடி ஆனாய்[illegible]
எனைமாய்பாவிப்[illegible] [illegible]ன்
தன்கைஎழுத்தை[illegible] [illegible]னே
ஐயோ

௮, அக்காமசி[illegible] யதந்த
இந்திரனைக்கய[illegible] [illegible]ன்றன்
தந்தைமுன்விட்[illegible] யேஇன்று
என்தனை தெரு[illegible] [illegible]ட்டையே
ஐ[illegible]

௯, கோருேம்குண்டுனைப்பேசும்
காளுமைசொல்லிஉன் அத்தை
ஆறுமயின்னையைக்கொல்ல
மூளுவித்தாளேபோர்யாவி
ஐயோ,

௰, இரக்கம்ஆய்உன்தேவியர்ஆம்
அரக்கியர்கூடிவந்திங்கே
உரககஅழுதும்உன்முகம்
பார்க்கநீகாட்டாத்தேனே
ஐயோ,

௰௧, ஒக்கலையும்மக்களையும்
தக்காமலேசெய்தெங்காளும்
மக்கிமனங்குலைந்துகான்
வெட்கவைத்தானேஉன்அப்பன்
ஐயோ,

௰௨ இச்சகம்பேசுவோர்வார்த்தை
மெய்ச்சியேஉன் அப்பன்என்தன்
மச்சுனர்சொன்ன வார்த்தையைத்
துச்சம்ஆகமதித்தானே
ஐயோ,

௰௩, வீரியம்இல்லாமனிதன்செய்
போரில்நீஎழுந்துமக
மேருவும்மவாயுவினலே
வேரற்றுவிழுந்தாற்போலாச்சே
ஐயோ,

௰௪, அநிசெய்த சீதையைவிடத்
ததிஇதென்றுநீசொல்லியும
விதிவழியிலேஉனை அப்பன
மதிபோச்சுதேஎனசெய்வேன்
ஐயோ

௰௫, ஒப்பிலாசீதையாலேநீ
இப்படிமடிந்தபோதுன்
அப்பன்ஆர்உயிரும்தானோ
எப்படிஆமோஅறியேன்
ஐயோ.

௰௬, பெருகும்உன் துயரும்தானோ
வருதுயர்தன்னையுமஎண்ணி
இருதலைகொள்ளியில்எறும்
புருகுதல்போலஆனேனே
ஐயோ,

சீதையைவெட்ட நடந்தராவணனைமகோதான்தடுத்தல்

விருத்தம்.

தொடுத்துமண்டோதரிபுலம்பும் வாக்கியம்எல்லாம்
சுருக்கென்றுசுட்டிடஉம நிடுக்கென்றங்கே
அடுத்திருந்தஅரக்கன்மனம கலங்கிமக்கள்
அனைவர்களும்அரக்கர்களும் மாண்டார்ஆசை
விடுத்தனென்சீதையைஇன்மேலக் கொல்வேனஎன்று
வெகுண்டெடுத்தான் அந்தவேளைஇந்த
துடுக்காமோராவணாஇதுபெண்பாவம்
செய்யன்றுமகோதரனும்நில்எனறுனே

௩௮-தரு.- ஆகந்தபைரவிராகம்-ஆதிதாளம்,

பல்லவி.

இந்தச்சணிதன்னைக்-கண்டிக்கடக்கருய்- ஏதையாராவணேஸ்வரா.

அநுபல்லவி.

சொந்தமகன்தலையைப் பந்துபோல்கொண்டுபோன
துஷ்டமனிதர்தம்மை விட்டுவிட்டேதைதூன—இந்த

சரணங்கள்,

௧, பொங்காதேவர்களும் கெட்டங்கம்படிப்பாரே
புலஸ்தியன்குலத்துதகோர் பழிகாட்டிஇடிப்பாரே



அந்தடசெசமும்புகழ் கெட்டாய்என்றெண்ணுதே
அரனர்கயிலாசமும் பரியாசம்பண்ணுதே
கட்டானகாலகேயர் மேலேறிநதவரை
கன்னிமேலேஏறிநதால் குன்மைசொல்லாரோகானை
முட்டாளும்கூடஉன்னைச் சட்டைதான்செய்வாரோ
மூன்றுலோகமுமகட்டி ஆண்டிப்படிகாரோ—இந்

௨. முடிக்கில்இருந்துசொன்ன துடிக்கிறாய்என்னசாரம்
மூன்கொனமமனிகை மூனகொண்டால்அல்லோவீரம்
அடுக்காரைக்கெடுக்கிருய் உன்னைப்போல்உண்டோஎழை
ஆயிரம்வேதமகற்றும் நீயேகற்றறிமோமைழ
பிடித்தகத்திஉறையில் அடக்கவேணும்என்சாமி
பெண்பழிகொண்டால்முனை பங்கம்சொல்லதோபூமி
எடுப்பானபேருக்கெல்லாம் எடுப்பானநீஉன்மேலே
எய்தவனைநோகாமல் அம்மைநொந்ததுபோலே—இந்

௩, அரிஅரபிரம்மாதிகள் யாவர்க்கும்முதல்மூர்த்தி
ஆகியஉனக்கிது அருமையும்கீர்த்தி
பெருமையோசிறுமையோ பாராய்எனதுசொல்லை
பெண்மேல்கத்திஎடுத்த மன்னவர்எங்கும்இல்லை
தரும்ஒருகோபம்வந்து இனைநிலவிழுந்தாலஆயிரம்
சநதோஷம்வந்தாலும் எழும்பப்போமோசரீரம்
காளைக்கெலிப்பாயகானை கிருதகளும்பூணுவாய்
நகரில்வருவாய்பிற கிவளைஎங்கேகாணுவாய்—இந்

அதர்ராவணனுக்குமூலபலத்தைவிவரித்தல்

விருத்தம்.

அருந்துணைமந்திரிஇந்தவாறுசொல்ல
அரக்கனும்வாளவிட்டெறிந்தான்மகன்உடம்பைப்
பெருந்தயிலத்தோணிஇட்டான்அழைக்கப்போன
பெருமூலபலசேனைவரவுகேட்டான்
விரிந்தஅதுஅணி அணியாய்ப் போகட்டென்றுன்
மனமேலும்அதுபோக வகதனூதர்
தெரிந்தசொல்வோம சாமிகாதுக்குள்ளே
சேர்என்றார்வகைவகையாய்ப்பார்என்றுரே

௰௨-திபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு,

கண்ணிகள்

க, இராவணவீரா விசயம்சேர் இருபதுதோளாய்
ஆரூனும்சொல்லா மூலபலம்இதை அறிந்ததுசொல்லக்கேளாய்

௨, சாகத்தீவினில்உறைவார் இவர்வேகத்தைஎவர்மொழிவார்
மேகத்தைத்கூடத் தாகத்தினாலேலோகத்தைகொண்டுபிழிவார்

௩, குசைஎனும்பெருந்தீவோர் இவர் விசயம்கேள்ஒருபேச்சு
வசனம்சொலலவேஇசையும்தேவர்க்கும் அசையுமோஒருமூச்சு

௪, இறலித்தீவினில்உறைவோர் உன்தன்முறைதப்பாமலேதிரிவோர்
திறம்மிக்கோர்இந்தக்கறைமுழுவதும்மறைக்கும்கொலைபுரிவோர்

௫, பவளத்தீவினைவிட்டோர் இவர்க்கனத்தால்புறப்பட்டோர்
அவனிக்கேபெருந் திவலைப்பாய்கடல் கவறக்கால்அடி இட்டோர்

௬, மலையமாமலைத்தீவோர் இவர் தொலைவிலேனின்றும்வந்தோர்
சிலையினால்இந்திரன் நிலையையுங்குலை குலைபடவேவசைவந்தோர்

எ, இவர்கள்கிரவுஞ்சத்தீவோர் இவர் எவரிலும்பிரதாபர்
அவர்இவர்என்றும் பாரார்தாயேஆகிலும்கொல்லும்கோபர்

அ, கந்தமாதனக்கோளர் இவர் சொந்தம்ஆழ்படையாளர்
அந்தகனுக்கும அந்தகனென்ன வந்தபாவசண்டாளர்

௯, புட்கரப்பெருந்தீவோர் இவர்விக்கிரமமன்னசெய்யார்
திக்கெசகளை மற்கொம்பைக்கையில வைக்கிறஇவர் அய்யார்

௰, இலவமாமரத்தீவோர் இவர் கலகமேகத்தைப்பிடித்தோர்
மலையையும்கடல்அலையையும்சேடன்தலையையும் தூக்கிப்பிடித்தோர்

சமர்க்குப்பேசினவன்னியைமாலியவான் இடித்தல்

விருத்தம்,

மதியுடன்இப்படி மூலபலத்தின்சேதி
வந்ததூதுவர்சொன்னார் அரக்கன்கேட்டான்
அதில்ஒருவன்வன்னிஎன்பான் சிதையாலே
அனைத்தெல்லாம்அறிந்தவர் ஆர்வலினென்னென்
பகறிஅரும்நோயாளி முகத்தின்முன்னே
பரிகாரிதலைமாட்டில்அழுகின்றாற்போல்
எதிர்இருந்தமாலியவான்வன்னிதன்னை
இடிக்கின்றான்பழமைசொல்லிப்படிக்கின்றானே,



௰௩-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி

வன்னிபோசனைசெய்வ தேதடா-அந்த
மாணிடரைவெல்லப்போவதேதடா

அநுபல்லவி

உன்றனுடையகெறுவத்தாலே ஒருகிறுப்புநம்வசம்
தென்னிலங்கைபட்டபாடு சென்மசென்மத்துக்கும்போதும்-வன்னி

சரணங்கள்.

க. கோலாமரீசனும்மானைப் போலவேசென்றுகெட்டான்
சாலவேகரனும்கொடி வேலையிலேபட்டான்
வாலியும்அவர்கை அம்பினாலேஉயிரைவிட்டான்
நீலவருணனுமாரத்தின மாலைதந்தனும்பிட்டான்
மேலென்னசரணிஎன்னும் விழுந்திடும்காமதப்பமோ
காலிலேசுற்றியபாம்பு கடித்தால்ஒழியப்போமோ-வன்னி

௨. பண்டுகும்பகர்ணனையும் கண்டதுண்டமாக்கினார்
அன்றும்அதிகாயன்முடி பின்றிவிழத்தாக்கினார்
கண்டகன்இந்திரசித்தன் மண்டைவிழத்தாக்கினார்
ஒண்டுஒழிக்கோரைகமல் துண்டைமேலேபோக்கினார்
மண்டுசேடலவெந்தமே வந்ததில்லைபோறிகுப்பு
பிண்டர்ஆம்அரக்கர்க்கினி மேலென்னஇருப்பு-வன்னி

௩. முக்கண்ணிற்குடித்தகேசர் சிகமஅனைபோட
தக்கிறதுகுரங்குசேர ஞமிந்தத்திவ்வாரட
மற்றதுசரசுர்விதந்த விதைனனபாரட
செத்தவர்பிழைத்தால்இனி வெற்றிகொள்வதாரட
இத்தலைஆயிரம்வெள்ளம் சகலதருமஅனாலே
புத்திலசலபோல்மடிந்து போவதுமினிமேலே-வன்னி

மூலபலம்கண்டுஓடின சாம்புவான் முதலானோமறித்த
அங்கதனுக்கு அவன்சொல்லுதல்.

விருத்தம்

அரக்கன்இந்தப்படிமாட்டவன்னிக்கோத
அதைமறுத்தான்மூலபலம்தன்னைவிட்டான்
தனைக்கடங்காதுவாக்கண்டஞ்சினஞ்சி
சாம்பன்முதல்அனைவரும்சாமினைவிட்டப்பால்
சாக்கரினைக்குமிலகடலைத்தாண்டிப்போனார்
ராகுத்தன் அருளாலேதுப்போதக்க

கூ ள

குரக்கினத்தைஅங்கதன்போய்மறிப்பேனென்று
கூடிஞன்சாம்பனுரையாடிஞனே.

எ௰-தரு-புன்னாகவாராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி

எங்களால்ஆகாதையா-மூலபலத்தின்- எதிர்க்கப்போகாதையா.

அநுபல்லவி.

அங்கதாட்டன்தர்மம் எங்கள்மேலேயோவர்மம்
அரக்கர்கெஜகளைக் கொடுக்கத்துடிக்கிருய்
அருகினைப்பிடித்துப் பருகிக்கடிக்கிருய்—எங்க

சரணங்கள்

க. விளைக்குள்இந்திரசித்தம்பால் பட்டபுண்கள் ஆறி
வேறேரத்தம்இன்னம் ஊறவும்இல்லையே
அனர்த்தகாலம்போலக்கன்குகளைகாணுச்சேனைமேல்
அஞ்சாதேஅனுறக்கிருய் என்செய்வோம்கொலேயே
தனுக்கையா இருவரும் அனுமானும்இவர்முன்னே
தரிக்கொள்வதேமெத்த பெரிதவர்கிலேயே
பணித்தவற்றினிற்பாயும் கனல்போல்எங்களை அவர்
பாய்ந்துகொல்வாரென்று ஆய்ந்துபார்க்கலேயே
கனத்தகும்பகர் னேத்தின்பாரு
அரக்கன்பொரிக்கறி போதும்
கனிதம்இவர்களுக் குன்கோபெருங்கடல்
மனைலேயேனன்று ஆலும்
உனக்கென்ன சிறுபிள்ளை ஆலோ
சலைக்குத்தெரியுமோ காணும்
ஒட்டும்பாதையும் இட்டுத்தலைதொட்டேன்
உயிர்க்குப்பிளைநீசொன் ஆனும்—எங்க

உ. ஆனராவணன்தலைபத்திவர்க்காயிரம்
ஐந்தாறுதலைகண்டோம் என்னென்னபோரோ
போனவாலியுங்காலனேயியும்மாவியும்
பூச்சிபோல்இவர்க்கொரு மூச்சுக்காவாரோ
கனாஆரும்இவனா மூவரும்தாங்கி
நெட்டிப்பார்ப்பாரல்லாமல்நிட்டிப்பார்ப்பாரோ
இனர்ஆபிபெகஞ்ச வர்வார்காயஅந்த
தேவர்களிலும்பிலம் ஆகியடோ
உனையாஇந்த சேனைமுன்விடுத்த
தேன்குழைக்கநீபோல் குழைக்கிருய்



உற்றப்போர்களைக்கெடுக்கவோஉன்தன்
சிற்றப்பனெருடு பிழைக்கிருய்
ஆனமட்டும்பார்த்தோமேதுணையே
ஏனேவினிலே உழைக்கிருய்
அறமுறைக்குகொண்டபிரிபோல்அற்றுவிட
அறியாப்புத்தியி ஞேலேஅழைக்கிருய்—எங்க
ஙூ. இனித்தான்அவர்எங்களைத்தொடாமல்அனையைப்போய்.
இடிக்கிரேம்இதற்குநீ தடுத்துச்சொல்லாதே
சினத்தளருதும்ளருதும்போராடிடுமப்புல்லைக்
தேய்த்தால்போலஎங்களை எய்த்துக்கொல்லாதே
இனத்தோடேகாங்கள்எல்லாரும்போய்அவர்கையில்
இறக்கும்மட்டும்உனது பறப்புஇல்லாதே
தனித்துதாய்வயிற்றினில்செனிக்கையிலேஇனர்
சதியுமாயமுடிகற்றேர் அதுவும்அல்லாதே
பனிப்பெருக்கிலேகப்பலூட்டிட
நினைக்கிருய் நீசொன்ன
படிக்குநடக்குமோகுரங்குப்பிடியே
பிடிக்கிருய்பன்னப் பன்ன
அனுப்பினுல்மூபதுவெள்ளமும்ஒரு
வனுக்குப்போதுமோ இன்ன
அருந்தத்தலையும்உடைக்குறைஉண்டு
அரக்கர்ஆனபெடன்ன ...கர் ஆண்டெடன்ன—எங்க

அங்கதன் சாம்புவனை இடித்தல்

விருத்தம்,

இரங்கிசாம்பன்முதலானோர் இவ்வுமுரைக்கநீங்கள்என்ன
உரம்கெட்டோபடைக்கஞ்சி இப்படிமோகுரலுக்குத்
தரும்பத்தனையேபிலன்னென்ன சொல்வார்இலேயோவாகும்என்று
பரிந்தப்போதங்கதன்நீதி படிப்பான்சொல்லி இடிப்பானே.

எக-தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி,

என்னகாரியம்என்னினீர்-சாம்புவரேநீர்-என்னகாரியம்பண்ணினீர்

அநுபல்லவி,

தன்னவர்என்றும்மைச் சாமிசொன்னதும்பேச்சே
சாமித்துரோகினின்று பூமிக்கும்பேர்ஆச்சே

மன்றும்அங்கதன்என்சொல் என்றுமல்லுதங்கிறீர்
பகைக்குப்பயந்திப்போது செடிக்குள்ளேபதுங்கிறீர்—என்

சரணங்கள்.

௧. பேய்த்தனம்ஆகவே இகத்துக்கும்பரத்துக்கும்
பிரட்டனென்றுசொல்லக் கெட்டீரே
பிராணன்போனால்என்ன மானம்போகல்ஆமோஙம்
பிணைபேணைப்போரில்க்கை விட்டீரே
ஏற்றாமன்ஆதி மூர்த்திஎன்றதீரே
இங்கேஒளிக்கத்தலைப் பட்டீரே
இளங்கைஅல்லவேகீர்என் லாம்தெரிந்திருந்தும்கா
டிப்பானேயிஙில்க்கையை இட்டீரே
ஆத்தரமோஅவர்க் கென்னஉங்களைத்தொட்டு
அழிந்துவாவிஜர் அம்பால் விழுந்தானேதலைகட்டு
சாத்திரமோஉடல் ஆமோமுதுகிட்டு
சாகிறபேருக்குச் சமுத்திரம்முழங்கால்மட்டு—என்

௨. திடுக்கென்றபோம்இந்தப் பாழும்சரீரத்தைத்
திரயனென்றெங்கேஎண்ணம் பெற்றீரே
சிவன்போனால்என்ன கீர்த்தியும்உடன்போமோ
தெரியாமலநினைவெல்லாம் செத்தீரே
அடுத்தபேனைக்கொல்லும் விஷம்ஆனதீங்களும்
அமுதம்போலச்சாமியை உற்றீரே
அன்பெல்லாம்வெளிஆச்சே மனகுதிரையைநம்பி
ஆற்றில்இறங்கச்சொல்லி வைத்தீரே
முடுக்கிவாரும்உயிர் கொடுத்துப்பழிஒழிப்பீர்
முன்ஒன்றும்பின்ஒன்றும் செய்தவகைகழிப்பீர்
நடுக்கிஓடினலப்போ எடுத்தெப்படிசெழிப்பீர்
நாயகன்முகத்தினி மேல்எப்படிவிழிப்பீர்—என்

௩. காலவரும்போல்ச்சண்டை பார்ப்பதல்லாஉண்டோ
நம்மாலேசாமிக்கு லவலேசம்
நமக்குத்தான்அபகீர்த்தி சுமக்கலாயமோஇனி
நானைக்கெப்படிசெல்லும் விகலாசம்
மேல்கிழ்ஆனாலும் அய்யன்வில்இருக்க
மிஞ்சிநமக்குவரு மோமோசம்
வீரர்என்றுகும்மா பேர்கொண்டீரேஅய்யோ
வேண்டாமோஅனுவா நெரும்ரோசம்



சாலம்செய்தோடினால் நம்மைத்தடுப்பதிரோ
சதிசெய்யும்பேருக்குச் சமர்த்தர்என்றும்பேரோ
கீல்அரக்கர்கெடும்காலம் என்றறியீரோ
கில்லாதுவாருங்கள் கிலேகட்ந்துபாய்வாரோ—என்

## மூலபலசண்டை

விருத்தம்

ஓதிஇவ்வாறங்கதன்சொல்உரைக்குச்சாம்பன்
உடன்பட்டான்அங்குதம்பிமுதலஆனோர்கள்
காதன்உரையால்அவரைக்கூட்டிப்போனார்
காலுசமுத்திரமும்ஒன்றாய்வனைகதால்ப்போல
தீதுசெய்யுமூலபலம்எதிர்க்கக்கண்டான்
சீராமன்கோதண்டத்தினைநாண்எற்றிக்
காதளவுமவாங்கிஇதெம்மாதிரமென்று
கருஷித்தான்சரமாரிவருஷித்தானே

௭௨-தரு-பந்துவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி

மூலபலசண்டையைக்கேளும் - ஸ்ரீராமன்செய்த
மூலபலசண்டையைக்கேளும

அநுபல்லவி.

மூலபல்சண்டைகேளும் - வேலைசூழ்இலங்கைஆளும்
மூடன்இராவணன்குடி - கேடனுராவணன்கெடி
மூவ்உலகக்கிளைஞர்க்கும் - எவ்வுலகத்தவுணர்க்கும்
மூந்தஉபகசீம்பண்ணிப் - பிந்திடவிசாரமஎண்ணி
முன்அரக்கர்நம்பினோர் - தனனோடொத்ததம்பிமார்
முக்கியதேவாந்தகன் - உக்கிரமகாந்தகன்
முடிபெறும்சூரியகேது - கொடிபெறமயாககேது
முன்னைபெற்றசமபுமன்னன் - ரணமஸ்தன்குப்பகறனன்
முதுபோர்இடும்பன்அகம்பன் - அதிகாயன்கும்பன்நிகும்பன்
முச்சிரத்தாக்கன்சங்கன் - வச்சிரதெம்ஷ்டிறன்சிங்கன்
முகைக்கும்பருதிக்கன்னன் - புகைக்கும்குருதிக்கன்னன்
முதலவிரர்மடிந்தனர் - சதிமாருமமுடிந்தனர்
முழுதும்கெஞ்சுகாய்ந்தது - பழுதுவந்துநேர்ந்தது
முற்றுயிர்கொடுக்கும்போர்கள் - சத்திஎன்றெடுக்கும்பேர்கள்
முடவர்முதல்ஆகஇன்று - சுடுகிவாவேணும்என்று

மூயவிட்ட தூதர்செல்லப் - போய்எவர்க்கும்சேதிசொல்ல
மூந்திஇலங்கையைநாடி - வந்துதுக்கமகொண்டாடி
முண்டரக்கன் தன்னைத்தேற்றி - சண்டையைஉட்கொண்டுதோற்றி
மூளும்கனல் போலேபற்றி - ஆளும்கள மேலேசுற்றி
மூடவும்பூமிஅசைக் காடவும்-தேவர்அஞ்சி
யாடவும்வானரர்கண்டோடவும்-தேடிவந்த—மூலபல

சரணங்கள்.

க அஞ்சுமுகங்கள் ஈர் அஞ்சுகை வெற்பங்கள்
ஐயபதுதலைகள் ஈர் ஐம்பது புசமலைகள்
ஐந்தூறுமுடிகள் ஈர் ஐந்நூறு தோள்அடிகள்
ஆயிரம்சிரங்கள் இரண் டாயிரம் காலகளுடன்
அக்கம்மிகு காத்திரங்கள் பொங்குபொறி நேத்திரங்கள்
அலைபோலும் காக்குகள் மலைபோலும் மூக்குகள்
ஆவெனத்திறந்த வாய்கள் தாவெனப்புகுந்த ஈய்கள்
ஆகாசம் தொட்டகைகள் ஏகாசம் இட்டமெய்கள்
அட்ரக்கறு கறுத்துப் படையைக் குவிகுவிக்க
அண்டத்தில உள்ளோர் நவகண்டத்தில்உள்ளோர்எல்லா
அடியோடெழும்பி அந்தக் கடலஎழும பொங்கிஇந்தம்
அரும்பார்க்குள்நிறைபட்டால்போ-புற்றினில்ஈசல்
பெரும்போக்கு புறப்பட்டால்போல்-மலைமலைகள்
ஆனபெருராட்சதர்கள்-மானம்அளவாநிறைந்து
ஆயிரம்வெள்ளம் சேனை-ரதங்களுடன்
பாய்பரிகொல்லும்யானை-இவைஉரைக்கில்
அஸ்தகிரிஏமகிரி சித்திரகூடாமகிரி
அனைபெருமத்தகெஜங்கள்-தேவரைவென்று
தனிவிருதுபெற்ற துஜங்கள்-கணக்கில்லாத
அண்டபகிரண்டம்முட்டும்-எண்டிசைஅகன்றமட்டும்
அளவும்காத்திர ரதங்கள்-கண்களில்ப்பொறி
வளரும்போர்த்துரகதங்கள்-முறைமுறையா
ஆற்றுமணல்அளவிட்டேகட்-சேத்திரம்அளவிட்டாலும்
அதிகக் குதிரைகூட்டம்-திக்குகள்எல்லாம
பதறிக்கொள் ஆட்டபாட்டம்-கைக்கடகங்கள்
ஆகம்அணிபதக்கங்கள்-தோள்வளைகள்கால்வளைகள்
அக்குமணிக் குண்டலங்கள்-மணிஇழைத்த
பொறகொலுசுவெண்டையங்கள்-வெற்றிக்கொடிகள்
ஆலவட்டம்தாலவட்டம்-சாமரங்கள்கருட்டிகள்
அவுதாக்கள்முத்துக்குடைகள்-பீலிக்குடைகள்
கவிகைகள்சித்திரக் குடைகள்-வெயிலமறைக்க
அதிவிதநாகசுரம்-தவிலொடுதாரைசின்னம்



அறைந்தசங்குகள் எக்காளங்கள்-கர்ணுவொடு
சிறந்தகொம்புகள்கைத்தாளங்கள்-துத்தாரிகள்
ஆகுளிகள்மேளங்கள்-காகளம்டமாரங்கள்
ஐந்துவித பேரிகைகள்-வீராணங்கள்
பம்பையொடுபூரிகைகள்-முழங்கிவர
அங்குசங்கள்பரிசைகள்-சங்கிலியின்வரிசைகள்
அஸ்திரம்வேலாயுதங்கள்-வல்உலக்கைகள்
சஸ்திரம் சூலாயுதங்கள்-இப்படிக்கொத்த
ஆயுதத்தின்பேதங்கள்-கோடிகோடிபூதங்கள்
அங்கைகொண்டுசூழ்ந்துவர-பேய்களும்கொண்டு
கங்குகங்காய் பாய்ந்துவர-புலிஇறைச்சி
ஆட்டிறைச்சிமான்இறைச்சி-மாட்டிறைச்சிநாய்இறைச்சி
அவைகைகள்கொடுத்துவர-மதுக்குடங்கள்
பலபேய்கள் எடுத்துவர-கெக்கலிகொட்டி
அண்டமும்அகன்றநகை-கண்டமும்கிடுகிடென்ன
ஆர்ப்பரித்துத்தொடைகள்தட்டி-விழிகள்எல்லாம்
தீப்பறக்கப்பொறிகள் கொட்டி-ராவணன்சொன்ன
தாரடாமனிதன் அவன்-ஆரடாவென்றேகத்திகள்
அட்டங்கலைவீசிக்கொண்டு-ராமன்எங்கேஎன்
றிடம்புகள்பேசிக்கொண்டு-விதம்விதமா
ஆளிபுலிகரடிகள்-ஞாளிகழுதைகள்மேலே
அரக்கர்மெத்தப்பாய்குவாரும்-சிங்கத்தில்ஏறி
இரைச்சலிட்டுச் சாய்குவாரும்-சிலஅரக்கர்
ஆகத்தினில்அடங்காத-தாகத்தாலேமேகங்களை
அங்கையாலப் பிடிப்பாரும்-சலம்பிழிந்து
செங்கையால்க்குடிப்பாரும்அதுக்கிஷ்டம்ஆடி
ஆரும்வேசாறிஅந்த-நீரும்அகப்படாமல
அலைகடலை அள்ளுவாரும்-பெருவாயாலே
சலசலெனக்கொள்ளுவாரும்-கைகளைநீட்டி
அஷ்டகெசங்களைக்கூட்ச்-கட்டெடுத்துத்தின்னவந்த
அனல்போலச்செறிவாரும்-மரங்களாலே
இனவுகளைச் சொறிவாரும்-பிறைகள்போலே
அக்கிரமம்மிகுந்தபல-வக்கிரதந்தங்களைக்காட்டி
ஆவென்றுதிறப்பாரும்-பசிக்குதையோ
கூவென்றுபறப்பாரும் கழுதைமுகம்
ஆனைமுகம்புலிமுகம்-பூனைமுகம்பரிமுகம்
ஆகும்அரக்கர் அனந்தம்-கண்கள்நெருப்பா
வேகும்அரக்கர் அனந்தம்-சற்றுஇலும்

அந்தத்தில்விரல்இல்லாமல்-ஒற்றைக்கையும்ஒற்றைக்காலும்
ஆன அரக்கர் கோடி-சொரூபம்கெட்டுப்
போன அரக்கர்கோடி-இவனைக்கண்டு
அண்டர்கள்எல்லாரும்கீலம்-கண்டன்இடம்போய்எப்படி
அய்யானென்றேழுந்திங்கியே-உயிர்மேல்ஆசை
வையாமலே கதிக்கியே-சிலனேஇந்த
அம்புவியிக்கடல்களும்,பம்புசராசரங்களும்
அரக்கர்ஆய் வந்தனஎன்று-ஓர் ஒளித்துக்
குரக்கினம்நொந்தனஇன்று-காங்களும்துனி
அமயாத்திருக்கும்இந்த-உம்பருலகத்தைவிட்டு
அப்பாலேசெல்வோமென்றார்-இருந்தால்இவர்
தப்பாமல்கொல்வாரென்றார்-என்னவேஅரன்
அந்தரமன்சாத்தாலே-இந்தஅரக்கர்கள்எல்லாம்
அதம்ஆகிப்போவார்இன்னம்-நீங்களெல்லாரும்
சதம்ஆகியோழ்வீர் என்ன-கேட்டமரர்கள்
அகத்தினிலேமுனம்-மிகுந்ததுயர்களெல்லாம்
அகற்றிப்பயங்கரம் விண்டார்-ராட்சதாகோரம்
சகித்துத்தவிரியம்கொண்டார்-முனிவர்எலலாம்
அண்டநிழல்இல்லைஎன்று-கண்டுகமண்டலங்கள்விட்
டலங்கோலம்ஆய்வெதுமபினார் தாமரை இலைச்
சலம்போலவே தளும்பினார்-சித்தர்களெல்லாம்
அனந்தம்அரக்கர்கொரு-குரங்கை உறைவிட்டாலும்
அளவிடத் தனைதென்பார்-இந்தச்சேனைக்கு
களம்இடம்கொள்ளாதென்பார்-சாக்கியர்எல்லாம்
அத்தனை இத்தனைஅல்ல இதனைபேர்களைகோ
அப்பனென்னசெய்யுமோஎன்பார்-கமலபங்கில்
தெய்வம்என்னசெய்யுமோ என்பார்-வித்தியாதரர்கள்
ஆயிரம்கோடிஅந்தகர்-ஆகிலும்இவனைக்கொல்ல
அனந்தம்காலவேணும்என்பார்-உலகழிக்க
நினைந்தேதாகாணும என்பார்-கந்தருவர்கள்
ஆனையும்சேஷனுமஇந்தப்-பூமியும்எப்படிஇவர்
அங்கத்தைச்சுமந்ததோஎன்பார்இத்தனைபேரும்
எங்கிட்டுச்சமைகதோஎன்பார்-இவர்கள்இந்த
ஆச்சரியம்கொள்ளவெகு-மாச்சரியம்கொண்டரக்கர்
அஷ்டதிசைமேலும் மேவினார்-ஆகாசமீனும்
வெட்டவெளிமேலும்காவினார்-இவனைக்கண்டு
ஆர்வமுள்ள பதினெட்டு-வீரகொடுசாம்புவனும
அரண்டுங்கோட்டம் கொள்ளவே-நடுநடுங்கிக்
குரங்கெலாம்ஓட்டம்கொள்ளவே-அவ்வனைக்கீசர்



அடர்ந்துமயேயம்குன்றும்-கடக்குறாழமதிக்கிலும்
படர்ந்தாரகவருமனலே-தொடர்ந்துதொடர்ந்தவந்த-அலைய

| | | | |
|---|---|---|---|
| உ. எட்டி | வருவார்சிலர் | கிட்டி | வருவார்சிலர் |
| சண்டி | வருவார்சிலர் | தண்டி | வருவார்சிலர் |
| ஏறி | வருவார்சிலர் | சீறி | வருவார்சிலர் |
| இரைந்து | வருவார்சிலர் | விரைந்து | வருவார்சிலர் |
| இடத்தில | வருவார்சிலர் | கலத்தில | வருவார்சிலர் |
| எமிக்க | வருவார்சிலர் | முடுக்க | வருவார்சிலர் |
| இடிஇடி | என்பார்சிலர் | பிடிபிடி | என்பார்சிலர் |
| எற்றும்எற்றும் | என்பார்சிலர் | குத்தும்குத்தும் | என்பார்சிலர் |
| எட்டும்எட்டும் | என்பார்சிலர் | வெட்டும்வெட்டும் | என்பார்சிலர் |
| எதிர்எதிர் | என்பார்சிலர் | மிதிமிதி | என்பார்சிலர் |

இந்தவனைசரமீனவந்தவந்துமென்மேலும்
ஈய்கள்மொய்த்தாற்கொண்டவனைப்போல் பெரும்புலியை
நாய்கள்சுற்றிக் கொண்டவனைப்போல்-சுற்றுவீர்அய்யன்
எஞ்சமர்த்தும்ராவணன்-தஞ்சமர்த்தும்வந்தபனை
மிஞ்சமர்த்தும்பார்ப்போமென்றேத்தினைக்குமெள்ள
புன்சிரிப்பு கொண்டுகொண்டே-திகராட்சதர்
எல்லாரும்இவனைவெகு-வல்லாளகண்டன்தனித்
திருக்குமடி ருகக்கேபோதும்-இதிலும்செயம்
பெருக்கவேணுமோ இதும்-என்றுமதிங்
எத்தேசகாலமும்-வெருப்பெருமசமுத்திரம்
என்றஅம்புருந்துரணிசாதம்-பிரசண்டகோ
தண்டவில்லை காணிவற்றி-குணத்தொனிசெய்
திட்டபோதுமுமடிதமும்-பொட்டெனவேவுமைன்டுகண்,
இருண்டசிலையானைகளுக்கும்-தெசவனடையும்கூட
உருண்டசிலையானைகளுக்குச்-சிலையனைமேல்
இருந்தபாகனைத்தனி-வருந்தலைத்தந்துவகைய
எடுத்துப்பிடித்தவோட்டம்-படத்தவதனம்பலாம
விழித்தது தேவர்கூட்டம்-வல்அரக்கர்கள்
ஏறிவந்தபுரவிகள்-வீழ்ந்தவர்த்தகதிமாடு
இனைத்துத்தன காமனைவெவாசகுதருக்கு
உனைத்துனளம் வாழனவே-பின்சாயிமுனைக்
கினைஇல்லாவெருசுகிட-கனைஎவிறின்றவர்கள்
எவரும்இறக்கஅடித்தான்-அப்பாலேவின்ற
அவரும்பறக்கமுடித்தான்-முடிக்கவேகாம

இருநூறுவெள்ளம்இவன்-ஒருமானிடன்போகாதிர்
எனத்திருப்பிக் கூடிக்கொண்டார்-சூரியன்முன்னே
பனிக்குலம்போல்மூடிக்கொண்டார்-இவ்ரோகமக்

கிட்டெனச்சிகைந்துகாற்றூடிபோல்ச்சுழலும்கணை
இலக்கம்அற்ற [illegible] தாக்கினான்-தாக்கிஅவரைத்
தொலைத்துவெட்டவெளிஆக்கினான்-பின்னும்அரக்கர்

இருநூறுவெள்ளமுடன்-ஒருநூறுவெள்ளம்கொண்டு
ஏகோபித்துவளைத்துக் கொண்டார்-நெருங்கிவந்து
மாகோபத்தில்வளைத்துக்கொண்டார்-அவர்அவர்கள்

ஏறும்வழிமாறவெகு-நூறுகணைதூறிமுது
கிட்டோடத்துரத்தி நின்றான்-சிலரைத்தரி
கெட்டோடமுறித்துநின்றான்-விடவிடவே

இப்படிஅந்நூறுவெள்ளம்-தப்பறமுடிந்ததுகல்
டிசமானன்வன்னிகன்பவன்-மிகவும்பர
வசம்ஆகியே புலம்புவன்அரக்கர்இன்று

இறந்தவர்எல்லாரும்-பறந்தனர்அய்யோஎன்
றேக்கம்ஆய்க்கவலைபெற்று-குறுகுறுத்து
மூக்கிலே விரலைவைத்து-இனிஎப்படி

ராவணன்முகமுன்நிற்கப்-போகுவோம்இதென்னமெத்த
லச்சைக்கேடென்றுவிளம்பி-விளம்பியபின்
அச்சத்தோடன்று கிளம்பிப்-பலதிசையின்

இரைச்சலைமாற்றிநின்ற அரக்கரைப்பார்த்துநீங்கள்
ஈடழிந்துநொந்ததேதென்றும்-மனிதர்க்கஞ்சி
ஓடிஇங்கேவந்ததேதென்றும்.தேவர்கள்கண்டால்

ஏச்சாகும்இதுகொஞ்சப்-பேச்சாகும்என்றவரை
ஏசிட ஏச்சைஏசி-சீசீஎனவே
ரோஷமாவார்த்தைபேசி-அரக்கர்எல்லாம்

இரைந்தோங்கியேஒரு-பெரும்பாம்பைத்தேனீகள்
இளப்பம்என்றுசுற்றிக்கொண்டாற்போல்விட்டில்பூச்சிகள்
விளக்கைவந்துமொய்த்துக்கொண்டாற்போல்- மொய்க்

எம்மாத்திரம்என்றுதானே-ஐந்நூறுவெள்ளம்சேனை (மனிதர்
ஏகமாக் கூடிவிட்டான்-அமரிலும்அறி
வேகமாமுடுகவிட்டான்-விடுத்தபின்னை

இளைத்தவன்போல்அவர்தன்னை-வளைத்திடும்படிக்குச்சற்றே
இடம்கொடுத்துப்பின்வாங்கினான்-எவரும்கைக்குள்
அடங்கவிட்டுமுன் ஓங்கினான்-வந்தஅரக்கர்

எறிந்தேரிசம்கட்டாரி-தறிதோமரங்கள்வாரி
லக்காகமீதில் சொரிந்தார்-அதுகள்நொர்க்கு
கொக்கரகாமன்அரிந்தான்-பின்னும்நெருங்கி



இரதம்ஓர்பக்கத்தில்விட்டும்-புரவிஓர்பக்கத்தில்விட்டும்
யானைஓர்பக்கத்தில் விட்டும்-அணியணியா
சேனைஓர்பக்கத்தில் விட்டும்-கிளைகிளையா

இருப்புலக்கைபிண்டிபாலம்-பெருத்தகத்திகண்டகுலம்
என்றுமபடைவாங்கி விடுத்தார்-விசிகதே அதினை
பின்னும்கணைஓங்கித் தொடுத்தார்-அவர்அவருக்

கெத்தனைகைஎத்தனைவில்-எத்தனைஅம்பெத்தனைதல
யெப்படிஒருவன் தடுப்பான்-அவர்மேல்அய்யன்
எப்படிதான்போர்கொடுப்பான்-பெருமழைபோல்

எடுத்துவிட்டபடைஎல்லாம்-தடுத்துவிட்டான்என்றுவாயால்
எட்டிக்கடிக்க மேவினார்-கைப்பிடிஆகக்
கட்டிப்பிடிக்கத்தாவினார்-ஆகாசத்தினில்

ஈசனார்நிருதர்கள்-நாசமாப்போவார்என்
றெல்லோர்க்கும்மனம்தேற்றினார்-சாமியைத்தேவர்
உல்லாசம்ஆக வாழ்த்தினார்-அந்தவேளையில்

எப்புறத்தும்ராட்சதர்கள்-அப்புறம்போகாமல்வாளிக்
கிரைக்காகத்தொகுத்துக்கொண்டான்-சுற்றிலும்பொட்ட
சரக்கூடம் வகுத்துக்கொண்டான்-வகுத்தபின்பு

ரதங்கள்யானைகள்துர-கதங்கள்சேனைகள்பட
எவரையும்மன்னனில்ச்சரித்தான்-பிடித்தவில்லோ
டவர்அவர்முன்னில்க்குதித்தான்-தனித்தனியே

இந்திரவாணம்மோகவாணம்-சந்திரவாணம்நாகவாணம்
எரிவாணம் வாயுவாணம்-விஜயமுர
ஹரிவாணம் மாயவாணம்-குபேரவாணம்

இமையாதவருணன்வாணம்-கமலவாணம்அருணன்வாணம்
இடிவாணம்ஆகதொடுத்தான்-அரக்கர்தம்மை
அடியோடேசாக அடித்தான்-பின்னையும்அவர்

என்இறந்தசேனைசண்டை-பண்ணிமுடியாதென்றெண்ணி
ஏகமாக் கடுகடுத்தான்-மந்திரம்சொல்லி
மோகனாஸ்திரம்தொடுத்தான்-தொடுத்தபோதில்

இக்குமாரன் அக்குமாரன்-அக்குமாரன்இக்குமாரன்
எக்குமாரன்ஆகத்தோற்றினான்-அவருக்கவர்
தங்களாலே சாகமாற்றினான்-இந்தவகையா

னர்ஆம்ஆயிரம்வெள்ளம்-சேனையும்முகூர்த்தம்தன்னில்
இறும்படிஆகப் புடைத்தான்-ரணகளத்தை
வெறுங்களம்ஆகத்துடைத்தான்-அனந்தம்கோடி

எரிவாளிகள்பிறந்த-கருமேகம்போல்ச்சிறந்த
ஒருராமனால்இரத-சருகுகள்போலப்பறந்த—மூலபல

௲. தோள்கள் அறுக்கபெரும் தாள்கள் முறிந்தபேரும்
தொடைகள் இடிந்தபேரும் இடைகள் ஒடிந்தபேரும்
தொந்திகள் சரிந்தபேரும் சந்துகள் முறிந்தபேரும்
அனைக்கைகள் இற்றபேரும் கணைக்கால்கள் அற்றபேரும்
தொண்டைகள் தறிந்தபேரும் மண்டைகள் இறந்தபேரும்
அண்டம்துண்டம் ஆனபேரும் கண்டமகண்டம் ஆனபேரும்
தாணிகள் இழந்தபேரும் காலணிகள் இழந்தபேரும்
ஆரகம் உலைந்தபேரும் இரதம் கலைந்தபேரும்
தோரணங்கள் கெட்டபேரும் வாரணங்கள் விட்டபேரும்
தோமரம் பறிந்தபேரும் சாமரம் எறிந்தபேரும்

தொட்டெடுத்துகாள்கெட்டு-கட்டைகட்டைபோல்ப் பட்டுத்
துள்ளித்துள்ளிகெளிப்பாரும்-பிணங்கள்தம்மேல்
தள்ளித்தள்ளி ஒளிப்பாரும்-பலபலவர்

அண்டங்கள் ஆடவம்புகள்-இடக்கொடிபோலஅம்பு
தைப்பட்டு மாய்வாரும்-குறைத்தலைஆய்
அறுபட்டுச்சாய்வாரும்-இவ்வளவென்று

சொல்இடமில்லாதபேரும்-சல்லடைக்கண்போல்உடம்பு
தொளைபட்டுவீழ்வாரும்-விடாயெடுத்துக்
களைபட்டுச் சாவாரும்-போடப்போடவும்

தொலையாஅம்புகளாலே-தலைபோய்ப்பம்பரம்போலே
சுற்றிச்சுற்றி மடிவாரும்-முண்டங்களாகித்
தத்தித்தத்திப்படிவாரும்-நிலைகலங்கி

தோள்என்றும்தாள்என்றும்-வாள்என்றும்அடையாளம்
தோற்றாமலக்கெட்டபேரும்-காயங்களாலே
ஆற்றாமலப் பட்டபேரும்-தலைகளறுந்துத்

தம்பிமேலேநின்றபடி-தெரம்பர்போலவாருகொண்டு
தொப்பெனவேவீழ்வாரும்-மண்ணைக்கடித்துக்
குப்புறவே தாழ்வாரும்-அம்புகளெங்கும்

சொருகிஉயிர்விடச்சே-மரணவலிப்பெடுத்துச்
சுருட்டிக்கொண்டுபடுப்பாரும்-கண்பூச்சிபறக்
கிருட்டிஉயிர் விடுப்பாரும்-கைகால்களறுந்துச்

சுருங்காமலேஅடிக்கும்-பெருங்காற்றில்க்கொம்புபோன
சோலைபோலேகாணுவாரும்-தங்கள்குடலை
மாலைபோலே பூணுவாரும் அடித்தடித்துத்

தொன்னூறுதரம்அய்யோ-தண்ணீர்தண்ணீரென்று
அடிஅடித்து ஓய்வாரும்-ரத்தத்தைஅள்ளிக்
குடிகுடித்துச்சாய்வாரும்-மனிதனென்று



தோண்டித்தோண்டிப்பிடுங்கித்-தாண்டித்தாண்டிப்பிணத்
தொலைத்திடும்சிலநாய்கள்-களத்திலெங்கும்
குலைத்திடும் சிலநாய்கள்-பெருகும்ரத்தச்

சுனைக்குள்விழும்பிணத்தை-உனக்கெனக்கென்றுசண்டை
தொடுத்திடும்சிலநரிகள்-துண்டிக்கிறையாக
கொடுத்திடும்சிலநரிகள்-இழுத்திழுத்துத்

தினுக்குத்தினுக்காகக்கொத்தி-பிணத்தைப்பெரும்பசி ஆம்
தூளைஇடும்சிலநரிகள்-இலங்கையைப்பார்த்
தூளைஇடும்சிலநரிகள் எலும்புகளும்

தொண்டைகளும்மண்டைகளும்-கொண்டுபோய் லங்கையிலே
தூற்றும்சிலபருந்துகள்-வீடுகள்மேலே
ஏற்றும்சில பருந்துகள்-மூக்குகளாலே

தொப்புளின்காம்புகளை-முப்புரிகொள்வதுபோலச்
சுருட்டும்சிலகழுகுகள்-தலைதலையா
உருட்டும்சிலகழுகுகள்-பிணமலைமேல்

தொத்தித்தொத்திமண்டைகளைக்-கொத்திக்கொத்தி மூக்கினாலே
தூக்கும்சில கழுகுகள்-ஓர்இடத்திலே
சேர்க்கும்சிலகழுகுகள்-கைஒழியாமல்

தூத்தித்தூத்திஅந்த-அரக்கரைப்பிடித்தெம
தூதரும் சலித்தாரோ-எட்டுத்திசைக்கு
மாதரும்கெலித்தாரோ-பிணங்கள்மேலே

சோரும்அரக்கியர்கண்ணீரில்க்குளித்துப்பூசைத்
தொண்டுபண்ணும்சிலகூளி-அதற்குப்பலன்
உண்டுபண்ணும் ரணகாளி-சம்மோகனங்

கடுகணையன்றாலே-விடும்மூலபலம்எல்லாம்
தொலைத்ததென்றார்சிலதேவர்-ராவணன்கொட்டம்
குலைத்ததென்றார் சிலதேவர்-இந்தக்கணையைத்

தொடுக்கிறவித்தைரா-கவனுக்கும்சிவனுக்கும்
தோணும்என்றார்சிலதேவர்-பின்ஆர்அறிவார்
காணும்என்றார் சிலதேவர்-ராகவன்மேலே

சொர்க்கத்தலத்திலஉள்ள-கற்பகமலர்பறித்துத்
தூவினார்சிலதேவர்-செயமங்களம்
கூவினார்சிலதேவர்-இப்படிக்கொத்த

துரைராமன்முன் நடந்து-திசைஆழிபோலப்படர்ந்து
வளைஆனகோதண்டத்தக்-கிளைஆகவே மடிந்த—மூலபல

அதுக்குச்சொல்லியவாயின்-இதிக்குக்காயிரம்அம்பு
சொரிபட்டுவதைவாரும்-இணைபிணைமா
அரிபட்டுச் சிதைவாரும்-கழுக்கள்கொத்த
தொங்கியபனங்காயிலே-தூங்குபோலக்கண்களும்போய்
டொங்குவிழும்தலைஎனந்தம்-ரத்தபெருகிப்
பொங்கிவிழும்தலை அனந்தம்-கழுத்துகளபோய்த்
தாரகொலையில்விழப் பிரிட்டுரக்தம்எழத்
தாழும்தலைகள் அனந்தம்-ஒன்றின்மேல்ஒன்று
ஏழும்தலைகள் அனந்தம்-அந்தத்தலையைத
தொந்தமிபிம்பேயினங்கள்-பந்துகள்போல்எடுத்தாடச்
சுற்றிலும்விழுதலை அனந்தம-கடலின்கரை
முற்றிலும்விழுதலைஅனந்தம்-கவரிஅம்பாலே
சொற்கம்உண்டெங்களுக்கென்று-கொக்கரித்துக்கொக்கரித்துத்
துடித்துவிழும்தலைஅனந்தம்-ஒன்றொடொன்றாக
அடித்துவிழும்தலை அனந்தம்-அம்புபட்டிரு
துண்டாச்சிலைகள்விழ-ரண்டாத்தலைகள்எழச்
சுழலும்கவந்தம்அனந்தம்-பிணங்களோட
உழலும்கவந்தம்அனந்தம் முடித்தலைகள
தண்டித்துவிழவும்தேகம்-கொண்டெட்டிடக்கப்பாலே
சோரும்கவந்தம்அனந்தம்-எதிர்எதிரா
நேரும்கவந்தம் அனந்தம்-சாரபளவரும்
துருவிட்டகண்பட்டு மாவட்டைஉருவிட்டுச்
சுருளும்கவந்தம் அனந்தம்-நரம்பசிக்க
உருளும்கவந்தம்அனந்தம்-நட்சத்திரம்போலத்
தொடுத்தமணிக்குண்டலத்தைத்-அடுத்தடுத்தம்மானைப் போடத்
தொட்டாடும்சிலபேய்கள்-கவந்தகோடு
முட்டாடும் சிலபேய்கள்-ரத்தத்திலஆனைத்
தோட்டியினில்பிணங்களை-மாட்டிவிளையாட்டுக்காகத்
தாண்டிவிடும் சிலபேய்கள்-அதைப்பறிக்கத்
தாண்டிவிழும்சிலபேய்கள்-தின்றுகொழுத்துச்
சயம்கொண்டராமனுக்குச் செயம்செயம்என்றுசொல்லித்
தரித்தாடும்சிலபேய்கள்-பிணமலைமேல
குதித்தாடும்சிலபேய்கள்-ஆனைமணியைச்
சேடானதாளம்ஆக்கி-ஆடிக்கொண்டுராகவற்குத்
ஸ்தோத்திரம்சொல்லும சிலபேய்கள்-சன்னைஉண்டென்று
சாஸ்திரம்சொல்லும் சிலபேய்கள்-ராட்சதர்வாயில்
சுவைபோன்றபல்லைப்-பொசினன்றுவாயில்கவ்வித்
தாவிஇடும்சிலநாய்கள்-லங்கையைப்பார்த்துக்
கூவிஇடும்சிலநாய்கள்-ஈசலைஎலலாம்



## லட்சுமணனுக்கும் ராவணனுக்கும் யுத்தம்

விருத்தம்

பொருமூலபலமஎல்லாம் இவ்வாறுசாமிகையில் போனபின்னை
வருபோரில்ராவணனும தேர்கொண்டான்பத்துவில்லும்வாங்கிக்கொ (ண்டான்
ஒருநூறுகோடிதேர் நானூறுகோடிபரி ஒங்குமயானை
இருநூறுகோடியுடன் குதித்திட்டான்இளையவன்வந் தெதிர்த்திட்டா (னே

ஏஅ-தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி

லட்சுமணனுக்கும்-ராவணனுக்கும்-நேர்ந்ததேசன்னை.

அநுபல்லவி.

அட்சயமானமூலபலம் — தன்னை
அக்கோதண்டம்உண்டுவிட்ட — பின்னை
கட்சிஅரக்கனும்தேரிலே — துள்ள
காவலிளையவன்அனுமான்மேற் — கொள்ள—லட்சு

சரணங்கள்,

க. குரங்குவெள்ளத்தாரும் அரக்கர்வெள்ளத்தாரும் — ஆடினார்
கூடித்தொந்தம்யுத்தம்
குன்றுமரங்களும தெண்டும்சரங்களும் — சாடினார்
கொண்டுஒன்றாய்ச்
செருக்களத்தினில் அரக்கன்நொடிக்குள்ளே — மேவினான்
சிலநூறுகோடிஅம்
திரும்பத்தம்பியும் அதுக்கதையேவிட்டுத் — தூவினான்
தெள்ளும்தவிடுபோலே — அரக்கன்எய்யவும்
தூரத்திப்பத்தமபை — தூளிசெய்யவும்
சுவாமிஅதைக்கூட்டத் — அஸ்திரம்தெறிக்கவும்
அரக்கன்மோகன — அம்பால்முறிக்கவும்—லட்சு
அய்யன்நாரணன்

உ. கொஞ்சதனம்எண்ணி அரக்கன்வீடணன் — தாண்டினான்
மேலேமயன்வேலைத்
குறுக்கேதம்பிக்கு முன்னேஅங்கதனோடு — தாண்டினான்
அனுமான்அதுக்கெதிர்
தஞ்சமஎன்றவிபிஷணனுக்காகத்தம்பி — ஓங்கினான்
இருவரையும்தள்ளி
சகலபேர்களும் உருகவேஅந்த — வாங்கினான்
வேலைமார்பினில

அஞ்சிவிபீஷணன் பயந்தோடவும்
அரக்கன்செவித்தோம்என் றாரிலோடவும்
சஞ்சீவியைக்கொண்டு அனுமான்அழைக்கவும்
தம்பியும்சே னைகளும்பிழைக்கவும்—௰௫

௧. பிழைத்ததம்பி விபீஷணன்சுகமோ
சுகமோஎன்று இளம்பினன்
பின்புசாம்புவன்ராமன்சேவடி
முன்பில்உள்ளது விளம்பினன்
தழைத்தராகவன் உனைப்போல்ஆரென்று
தம்பிதன்புகழ் பாடினன்
தங்கஞ்சிரஞ்சீவிஎன்றனு
மந்தனையுமகொண் டாடினன்
அழைத்துவானர வெள்ளம்கெர்ச்சிக்க
ஆசைமுனிவர்கள பேசிஅர்ச்சிக்க
மழைக்குநிகர்மலர் தேவர்தூற்றிட
வாழிஇளையவன் எனவாழ்த்திட—௰௬

மூலபலப்படைகளக்காட்சி

விருத்தம்.

சிலம்உள்ளராகவனும் இளையோன்தன்னைத்
தேற்றினன்பிறகு விபீஷணனும்அங்கே
கோலம்உள்ளசுக்கிரீவன் அனுமான்சாம்பன்
குமுதன்முதலோரைஎல்லாம்கூட்டிக்கொண்டான்
காலுதிக்கும்சூரியன்முன் பனியைப்போலே
காயகன்கைக்கோதண்டம்தன்றினாலே
மூலபலப்படைகளத்தைப்பாரீரென்று
மூட்டினன்வகைவகையாக் காட்டினனே.

௯௩-இராகம்-நீலாம்பரி-அடதாளசாப்பு.

கண்ணிகள்

௧. வெற்றிகொள்ளவந்த மூலபலமான
வேதண்டமும்வீர சேதண்டஞ்செய்ததைச்
சுற்றியசேனைப் படைத்தலைவருடன்
சுக்கிரீவரோராரும சுவாமிசெய்த விக்கிரமத்தைப்பாரும்

௨. சண்டப்பிரசண்டமெ முங்காற்றிலேவெகு
சாக்தந்தனுலவிழும் மேகக்குலம்போலே



அண்டர்பெருமான் இராமன்கையால்வீழ்ந்த
ஆனைகளைப்பாரும் கிடக்கிற சேனைகளைப்பாரும்
௩. துண்ணெனப்பொங்கிய ரத்தக்கடல்மேலே
சுவாமிஅம்பாலேசெந் தாமரைப்பூப்போலே
வண்ணம்செந்து மிதந்துவரும்முக
மண்டலத்தைப்பாரும் சிதறிய குண்டலத்தைப்பாரும்
௪. சிராம்பெரும்பாய்கள் கட்டும்கொடிஆக்ச
செத்தகள்த்திலே ரத்தக்குளத்திலே
ஓராயிரம்கோடி கப்பலைப்போலவே
ஓடும்தேரைப்பாரும் விசைஅறுந் நாடும்தேரைப்பாரும்
௫. கடலிலேபல மகரமீன்போலே
கண்டித்தயானையும் துண்டித்தயானையும்
இடலம்ஆகிய ரத்தக்கடல்மேலே
எழுகிறத்தைப்பாரும் அழுந்தி முழுகிறத்தைப்பாரும்
௬. கூத்தினில்நட்டுவன் பாத்திரம்என்றேத்தக்
குண்டலங்கள்குறைத் துண்டங்கள்ஆய்எங்கும்
பேர்த்துப்பேர்த்துநொண்டிக்கூத்தினைப்போல்ஆடும்
பிரேதங்களைப்பாரும் கைகள்கொட்டும் பூதங்களைப்பாரும்
௭. பண்டுபெட்டயானை வால்புறத்தேஅறுப்
புண்டுபெட்டயானையின் தலைகாணவே
ரண்டுபக்கமும்தலை உள்ளயானைபோலும் [ரும்
லட்சணத்தைப்பாரும்பேய்திகள்தின்னும் பட்சணத்தைப்பா
௮. அந்தரத்தக் கடலுக்குளேமத
யானைக்கொம்புஅந்தி வானத்திலேஇளஞ்
சந்திரனைப்போல மிதந்துமிதந்து
தளும்புவதைப்பாரும் அங்கங்கே கிளம்புவதைப்பாரும்
௯. அத்திக்கொம்பால்தந்த சுத்திசெய்துரத்தம்
அப்பிஅப்பிவாயைக் கொப்புளித்துவீழ்ந்த
கத்திகளைக்கொண்டு நாக்குவழிக்கிற
காளிதனைப்பாரும் சுற்றிவரும் கூளிகளைப்பாரும்
௰. யுத்தகளம்என்னும் ரத்தவயல்மேலே
எற்றசதைஎன்னும் சேற்றினிடத்திலே
அஸ்திரங்கள்பயிர் ஊத்துக்கிடக்கிற
அற்புதத்தைப்பாரும் ரத்தந்தனில் புற்புதத்தைப்பாரும்
[சும

௰௧. கொண்டகணவன்என் ஐம்பிணத்தைக்கையில்
கொண்டெழும்பும்பேயைக் கண்டஅரக்கியர்
அண்டம்மட்டும்அதை எட்டிப்பிடிக்கிற
ஆச்சரியத்தைப்பாரும் அவருடை மாச்சரியத்தைப்பாரும்

௰௨. தும்பிமுகத்திலே ராட்சதர்மீசையைத்
துள்ளறுகாச்சாந்திப் பிள்ளையாரென்றேத்திக்
கொம்பில்அவர்மண்டைத் தேங்காய்உடைக்கிற
குட்டிப்பேயைப்பாரும் குதிக்கிற மட்டிப்பேயைப்பாரும்.

௰௩. பேய்முகம்நாய்முகம் ஆகியராட்சதப்
பெண்டுகள்அந்தப் பிணம்பிடுங்கவந்த
பேய்முகம்நாய்முகம் கண்டேஅடையாளம்
பிடிக்கிறதைப்பாரும் நல்வார்த்தை படிக்கிறதைப்பாரும்

௰௪. பெண்அரம்பைக்கூத்து பார்க்கிறதெல்லாம்போய்ப்
பேய்க்கூத்தாச்சுதோ என்றுமுடைபட்டு
பண்ணுடனேகிழப் பெண்கள்ஒப்பாரி
பாடுவதைப்பாரும் தலைவிரித் தாடுவதைப்பாரும்

௰௫. இந்திரலோகமும் சந்திரலோகமும்
எட்டுத்திக்கும்கொள்ளை இட்டுச்சிறைவைத்து
கந்தஅரக்கரை ராமன்வில்லுக்கின்
கற்பித்ததைப்பாரும் இராவணன். ஒப்பித்ததைப்பாரும்

௰௬. எள்இடவும்உடம் இல்லாமல்மண்டிய
இத்தனைசேனையும் கைத்தனுவொன்றாலே
வள்ளல்இராமன்மு கூர்த்தத்திற்கொன்றுயிர்
வாங்கினதைப்பாரும் பூமிபாரம் நீங்கினதைப்பாரும்

## ஸ்ரீராமரை மாலியவான் கொண்டாடல்.

சந்தவிருத்தம்.

நீதன்கைவீசுசர மாரிபடவேபடை
பாடுண்டுபோனதை விபீஷணனுடேவிழி
நோக்கண்டெலோர்களும் இராகவனைமேவினர்அதன்மேலே
ஓதுமபிராணியுடன் ஓடியதசானன்
மூதண்டகோடிஉள தேவர்கள்புகிரிட
ஊர்எங்கும்வேணகளியாடல் விளையாட்ல்கள்செய்கிறபோதே
கோதண்டவாளியினில் மூலபலசேனையை
நாசஞ்செய்தான்எனவே ஓடிவருதூதர்கள்
கூறும்சொலால்இதென மானிடவனால்அவர்படுவாரோ
ஏதென்றுராவணன் விசாரமிடமாலிய



வான்வந்துகாதுகளி லேசுநில்சுநில்என
ராமன்பிரதாபசெய ராமன்இசைஆனதுபுகழ்வானே.

௭௪-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராமனுக்குநிகர்அஞ்சுராவணா பூமியில்வேறுண்டோ.

அநுபல்லவி.

மாமூலபலம்எல்லாம் ஒருத்தன்கொன்றதெந்த
வகைஎன்றுதூதரைப் பகையாதெழுந்தமுந்த
ஆமவன்கோதண்டம் வளைத்தானேபடைசிந்த
அரைஅம்புகால்அம்பு தெறித்தானேஏதோஅந்த—ராமனுக்

சரணங்கள்.

௧. பின்னும்சொல்லுகிறேன் அவனுக்குனதுசண்டை
பிள்ளைவிளையாட்டல்லோ அத்தாட்சி
மன்னும்மரமும்புல்லும் கல்லும்ஒருசரத்தால்
மண்ணோடேமண்ஆமே கண்காட்சி
சின்னமனிதன்என்றும் ஒருத்தன்என்றும்எண்ணாதே
தேவர்க்கும்தேவன்அவ னேசூட்சி
உன்னைக்கட்டினவாலி தன்னைக்கொன்றானேஇது
உன்அண்டையில்இருக்க இன்னம்என்னடாசாட்சி—ராமனுக்

௨. திண்டும்மிண்டும்செல்லாதே தர்மம்சேரும்இடத்தில்
செயமும்சேரும்அட நின்மூட
சண்டைஉன்னால்ஆகாது செத்தவர்க்கெல்லாம்நில
தர்ப்பணம்செய்அட குடிகேட
பெண்டுகளேஅல்லாமல் லங்கையைவிட்டுனக்குப்
பின்படைவருவதுண் டோகூட
அண்டர்நாயகனை ஒருத்தன்ஒருத்தன்என்றாய்
அண்டம்அழிக்கும்தேவர் ரண்டுபேர்உண்டோடா—ராமனுக்

௩. வீரவேல்விட்டேன்என்றும் லட்சுமணன்பட்டான்என்றும்
வீம்புவார்த்தைகள்இங்கே தந்தாயே
மாருதிமருந்தாலே அவன்எழுந்தானேஇந்த
மதிமோசத்தால்அல்லவோ வெந்தாயே
காரியம்தெரிந்தவிபீ ஷணன்சொல்லும்கும்ப
கர்னன்சொல்லும்கேட்க நொந்தாயே
வீரியத்தால்அய்யோ காடுவாவாஎன்ன
வீடுபோபோஎன்ன விணைகொண்டுவந்தாயே—ராமனுக்

## மூலபலப்படுகளத்தை ராவணன் கண்டது.

விருத்தம்.

வல்லாலண்மைபேசியரா வணன்முன்இந்த
வகைவகையா மாலியவான்சொல்லிச்சொல்லிப்
பொல்லாதபுண்ணிலே கோலிட்டால்போல்
புடைபுடைத்தான் மூலபலம்மடிந்தஆறும்
சொல்லாதே தூதர்சொன்ன சொல்லும்உன்தன்
சொல்லும்கிலவரமோஎன் றரக்கன்பொங்கி
எல்லாம்பார்ப்போம்எனக்கோ புரத்தின்மேலே
ஏறினன்படுகளம்கண் டாறினனே.

௭௫-தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கண்டானேராவணன்மென்மேலே - மூலபலப்படு
களத்தைஇருபது கண்களாலே

அநுபல்லவி.

மீண்டாம்தூதர்சொல் இன்று-பொய்யோபொய்யோ என்று
மெத்தவிசாரப்பட்டக்கணமேசென்று-உத்தக்கோபுரஉச்சியிலேநின்று
கண்டானே.

சரணங்கள்.

௧. போனமுகந்தோறும்மலைமலையாப்பிணம் குவிய-இதுவேநல்ல
தானம்ஆம்என்று மேகங்கள்வந்துகவிய-ராகவன்விட்ட
மானக்கணைகள்பட்ட பானத்தளவும்முட்ட
வானத்திலும்அட்ட கோணத்திலும்எட்ட
சோனைப்பெரியமலை தான்ஒத்தெழுந்தகொலை
ஆனைப்பிணங்களையும் சோனைப்பிணங்களையும்-கண்டா

௨. சிலமுனிவர்கள் கண்டேட்டனேநடுநடுங்க-சிறியஅல
காலம்ஆம்எனும் கண்களைநாய்நரிபிடுங்க-வீரகோதண்டம்
காலமாரிமழை போலேகணைசொரிய
நாலுதிசையும்வளைந் தோலமிடும்பெரிய
மூலபலப்படையைக் கோலிவேர்அரிய
மூலைக்குமூலைஅலங் கோலம்ஆய்த்தெரிய-கண்டா

௩. பெருகவேகளம்எங்கெங்கும் கவந்தங்கள்ஆட-கட்டுவன்போல
அருகிலேநின்று பேய்கள்தாளங்கள்போட-ராமன்பிடித்த
ஒருசிலைஅதனாலே வரவரஒருகாலே
பெரியதிணைஅதுபட்ட நிருதர்முடிகள்கெட



ஒருபெருமலைமேலே வரும்அருவியைப்போலே
குருதிநீர்துள்ளத்துள்ளக் குருவிகள்கொள்ளக்கொள்ள-கண்டா

௪. மங்கைமீர்அந்த வானரப்பூச்சிகளைப்புடைத்து-நிமிஷத்திலே
உங்கள்முன்வருவேன்என்றுகண்களைத்துடைத்து-துடுக்காவந்த
தங்கள்கணவன்கிடை அங்கெதிர்கண்டுகிடைக்
கண்களில்நீர்பெருகி அங்கம்எல்லாம்உருகிப்
பெண்கள்திரண்டுமொய்த்துச் செங்கைதலையில்வைத்து
எங்கும்பதறிவிழ எங்கும்கதறிஅழ-கண்டா

௫. பெரியவில்லுடன் அறுபட்டகைகளும்விரலும்-கண்டுகண்கள்நீர்
சொரியஅரக்கியர்அடித்துக்கொண்டழும்கூக்குரலும் - கண்டம்கண்
ஒருவன்குடல்சரிய ஒருவன்உடல்எரிய[டம்ஆய்
ஒருவன்தலைமடிய ஒருவன்கிலைஒடிய
ஒருவன்தொடைபறிய ஒருவன்குடைமுறிய
ஒருவனைஉயிர்வதை ஒருகணைசெய்தநை-கண்டா

## இராவணன் தேர் ஏறுதல்.

விருத்தம்.

மூலபலப்படுகளம்இவ்வாறுகண்டான்
முடிபுனைகோபுரம்இறங்கிக்கோவில்சேர்ந்தான்
காலம்எனும்முக்கோடிவயதும்ஈசன்
கைவரமும்தொலைக்கராவணன்முன்னாளில்
மால்எனும்ராகவன்கொடுத்தவரத்தினாலே
மதியும்அதுவிதியும்அதுஎனலால்துவார
பாலன்எனமுன்போல்வைகுந்தவாசல்ப்
படிகொள்வான்தேர்ஏறத்துடிகொள்வானே.

௭௬-தரு-கலியாணிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தேர்மேல்கொண்டானே-இராவணன்-போர்மேல்கொண்டானே.

அநுபல்லவி.

பார்மேலும்திசை மேலும்மலைமேலும்
பாயும்திரைகடல் மேலும்முட்டிய
ஆயிரம்புர விகளும்கட்டிய— தேர்

சரணங்கள்.

க. இனத்தோடேவரச்சொல்லி உறுக்கினன்-தம்பி
இருந்தோரில்நாறுவெள்ளம் பொறுக்கினன்-சங்கம்
தொனித்துக்கைபொடுகையை முறுக்கினன்-மேலே
தூணியும்கவசமும் இறுக்கினன்
கனத்தபூமியும் மலையும்வெடித்திட
முனைந்தபேரிகை குமுறிஇடித்திட
சினத்தினல்முக வேர்வைபொடித்திட
தனக்கும்சிதைக்கும் இடக்கண்துடித்திட—தேர்

உ. பத்துமுடியும்தரித் தோங்கினன்-திசை
பத்தும்வெட்டியவாளைத் தாங்கினன்-கோ
பத்தால்அரமனையை நீங்கினன்-ஒரு
பத்துவில்லையும்கையில் வாங்கினன்
செத்தபேர்களை எண்ணிமனம்நொந்து
சத்தமேகங்கள் போலேநால்ஐந்து
கைத்தலத்திலும் வாரிக்கொடைதந்து
சுற்றிஅர்ச்சனை செய்துவலம்வந்து—தேர்

ந. இருபதுகையும்வளை யாட்டினன்-காதில்
இருபதுகுழைகளும் பூட்டினன்-தும்பை
இருபதுதோளிலும் சூட்டினன்-கண்கள்
இருபதும்நெருப்புப்போல்க் காட்டினன்
வருபெண்சானகி பதறுகிறதொன்று
ஒருமண்டோதரி கதறுகிறதொன்று
விருதெல்லார்களும் பார்க்கவேஇன்று
இருவகையில்ஒன் றுக்குவேன்என்று—தேர்

## இராவணன் அவசகுனங்கள் காணுதல்.

சந்தவிருத்தம்.

கதிர்விடுகுண்டலம் மணிமகுடம்பல கடகம்அதங்கிருதம் மென் போர்வை, கவசம்நெடுஞ்சரம் அரைவடம்அந்தைகள் கலகலெனும்ப ணியின்கோவை, இதுமுதல்கொண்டொரு பதுகையில்வெஞ்சிலை ஒரு பதுசெங்கையிலும்பாணம், எரிவிழுசிந்திய கருமலைஒன்றென எவரும் நடுங்கநெடுந்தேர்மேல், மதிகதிர்சிந்திட உடுகிளைசிந்திட மலைகள்அதிர்ந் திடமண்பூமி, மறுகிடஎண்டிசை முறுகிதியங்கிட பனிதன்எனும்சொ ல்இடும்பாலே, அதிரணமண்டலம் அதிரரதம்தனை அதிரவிடென்ற



இலங்கேசன், அருகினில்எங்கணும் இருபதுகண்களில் அவசகுனம் பலகண்டானே.

௭௪-தரு-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

இப்படியாஅவசகுனம் கண்டானே-கண்டராவணன்
இடும்பாலேஎண்ணும்மல்ச்சென்றானே

அநுபல்லவி.

சேகரம்பண்ணி
கைப்படைஆனதைச் கொடுத்திடஎண்ணி
காகுத்தன்சரத்துக்குக் ராமன்மேலே
அப்படிவந்தானே
அறிந்திருந்தும்புத்தி கெட்டவன்போலே—இப்ப

சரணங்கள்.

வாங்கிடக்கால்பதறவும்
க. ஆனைகளும்குதிரைகளும்பின்னுக்கு அங்கேரத்தத்தூளிசிதறவும்
அறுந்தகொடிமேல்பருந்துவிழவும் பானைபோல்வருண்டுதறவும்
சேனைகாவலர்வாய்எலாம்வெறும் சூரியனைப்பார்த்தோர்கதறவும்
சேரநாய்களும்பேய்களும்அழச்
இப்படியா

இடப்புறக்கண்கள்துடிக்கவும்
உ. தோள்வளைசரியமாலைகள்கரிய ஆகாவாய்ச்சொல்படிக்கவும்
தோகைமார்அழக்காகம்மேல்விழ தூளிஆனதுபிடிக்கவும்
வாளின்வாய்முனைமடங்கவும்கருந் வல்விடிஇடிக்கவும்
வாளின்மேல்க்கருமேகம்இல்லாமல் [கொள்ளிகள்வெடிக்கவும்
இப்படியா

விருதுசேதனம்அழியவும்
ந. முறைமுறையாத்தேரிலேகட்டும் சருகுபோலேகிழியவும்
முரசமும்பேரியுமடமானமும் வறவறென்றுபோய்க்கழியவும்
மறவர்கள்பூசும்சந்தனம் பெண்ஆனையிலேமதம்வழியவும்
மணமலரிகள்ஆனவைபொழியவும்
இப்படியா.

## ஸ்ரீராமர் தேர் ஏறுதல்.

சந்தவிருத்தம்.

ஆசைகள்அதிரஇவரவசகுனம்இராவணன்எதிர்படதேர்விடலால், ஆண்மைகள்பெருகியதீமறுபடிஅனுமான்மிசைவருதல்ஒழுமுனே மாசறுசதுமுகன்நேசமொடுதவியவாசவன்விடுகிறதேர்இதன்மேல் மாருதிபுசம்எனஏறினனவருமாதலிஉரைசெயஆதரவாய்

எசறுமுதுமறைஏறிடவிதிகிலேஏறிடமுனிவர்கள்தேவர்கள்ஈ
டேறிடமகம்நிறைவேறிடஅவர்அவர்ஏறியபதவியில்ஏறிடவே
வீசியமழைபொழிகார்முகில்ஒளிவிடுமேருஎன்மலைமிசைஏறுதல்போல்
வீரன்இரவிகுலதீரன்அதுலரகுவீரன்இரதமிசைஏறினனே.

எஅ-தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தேர்ஏறினனே-ராமச்சந்திரன்-தேர்ஏறினனே.

அநுபல்லவி.

பார்மேலேவைப்பது நேர்அல்லஅரவிந்த
பாதம்வைப்பாய்என்று மாதலிகொடுவந்த— தேர்

சரணங்கள்.

க. சோதிமதிநுதலில் திருநாமம்அணிந்திட்டு
துலங்கும்அம்புறுத்தூணி வலப்புறத்தினில்இட்டு
காதல்செய்யுந்தும்பை மாலைதோள்மேல்விட்டு
கச்சைக்கட்டியமார்பில் வச்சிரக்கவசம்தொட்டு
குரோதம்செய்யும்இள நகைவிடுத்துக்கொண்டு
பாதம்தன்னில்மிதி யடிதொடுத்துக்கொண்டு
கோதண்டம்ஒருகை யினில்எடுத்துக்கொண்டு
தாய்தந்தமரவுரி யினைஉடுத்திக்கொண்டு— தேர்

உ. ஆரவாரம்செய்யும் வீரவெண்டையம்சாத்தி
அங்கைத்தலத்துக்கு முன்கைக்கட்டியும்ஏற்றி
தாரணிஉள்ளோரும் வானவரும்போற்றி
தான்சொல்லவேலட்சுமி காந்தன்என்றேதோற்றி
வீரபட்டம்வி சாலம்உள்ளநெற்றி
நேரில்இட்டதி காரம்உள்ளகத்தி
ஓர்வலப்புற மீதினிலேசுற்றி
ஆகும்ஒப்பிடோ ணுதஒருவெற்றி—தேர்

௩. தேவர்மடந்தையர் சோபனங்கள்பாட
சிதைமனதினில் நினைந்ததுகைகூட
தூவும்மலர்க்கை முனிவர்கள்கூத்தாட
சூரியன்தேர்ஓட்ட லங்கைமேல்க்கண்போட
யர்வரும்கண் கண்டுதேறவும்
பாவிகள்சந் தங்கள்மாறவும்
தேவருக்கா நந்தம்ஊறவும்
ராவணன்வை குந்தம்ஏறவும்— தேர்



## மகோதரன்வதை.

விருத்தம்.

திருத்தேர்ஏறிராகவனும்சென்றான்போர்க்குமகோதரனும்
தரிக்காதெழுந்துராவணன்பால் சார்ந்துபோர்க்குவிடைகொடேன்னா
செருத்தான்செய்துலட்சுமணனை செயித்துவாவென்றனுப்பவந்து
கருத்தாவாளராகவனை கடிந்தான்அவனால்மடிந்தானே.

எகூ-தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மடிந்தானேமகோதரன்-ராமன்கைஅம்பால்-படிந்தானேமண்மேல்

அநுபல்லவி.

கடிந்துராவணனால்லட்சு மணன்மீதில்விடப்பட்டு
கடுகிஓடி-அவன் மீதில்ப்போரினைவிட்டு
தொடர்ந்துராமன்மீத னேகசரங்கள்தொட்டு
சூதும்வாதும்சாமி தொடும்கணையால்க்கெட்டு—மடிந்

சரணங்கள்.

க. அனுகூலசத்துராதி ஆகியிருந்துரா
வணன்குடி யினைக்கெடுத்து-தன்னுடைய
அகத்தில்எண்ணம்எல்லாம் முடித்திலங்கையின்மேலே
ஆசையி னையும்விடுத்து-இணைஇல்லாரா
மனுக்குரதம்அனுப்பும் தேவர்களையும்மக
வானையும் கடுகடுத்து-லட்சுமணனை
மடித்துவருவேன்என்று வீரம்பேசிக்கையில்
வலியத னுவைஎடுத்து-அதிககடுஞ்
சினத்தினோடுபெருந் தேரைஓட்டிக்கொண்டு
சேனைகளைஎல்லாம்தன் பின்னேகூட்டிக்கொண்டு
கனத்தவில்லைவளைத்து நாணைப்பூட்டிக்கொண்டு
கணைகள்எய்துராமன் கையில்மாட்டிக்கொண்டு—மடிந்

உ. போர்க்களத்தினில்வந்து அட்டகாசம்செய்து
புவிஎங்கும்கிடுகி டென்னலட்சுமணன்மீதில்ப்
போகவிட்டிடும்தேரை மறித்துராமன்மீதில்ப்
போகட்டும்விடுவி டென்ன-சாரதிஇந்தப்
பார்க்குள்ராமனைவெல்லக் கூடாதென்றுசொல்ல
பற்களைநெடநெ டென்ன-வேகடித்து
பார்அடாஉன்னைவிழுங்குவேன்எனச்சாரதி
யுடம்புநடுநடுங்கி டென்ன-நடுகடுங்கி
கார்க்கடல்வண்ணனைரா மன்மீதில்த்தேர்விட

கலங்காமலேமகோ தரன்கின்றுபோரிட
ஆர்க்கும்சேனைராமன் அம்பினல்ப்போர்கெட
அகய்ஆகஅவன்மார்பில் ஓர்அம்பின்கூர்பட—மடிந்

௧. மாலியவான்சொல்லால் சீதையைவிடவேசம்
பகித்தராவணனை அன்று-தடுக்கப்பெரு
வயிற்றைச்சாய்த்துக்கொண்டு குடுகுடென்றேறுடி
வஞ்சனைஎண்ணி நின்று-அதிகபல
சாலியானராவணனைரு வுலகமும்
செளரியத் துடனேவென்று-இன்றுமனம்
தளர்ந்திந்தச்சனிதை விடல்ஆமோபோபோஉன்
தனக்கிது சரியோஎன்று-சொல்லியேகொல்லும்
காலனைப்போல்அவன் பாலிலேயிருந்து
கழுவாக்கரைத்துநாளும் கலகம்செய்துதிரிந்து
சிலராமன்கணைக்குத் தன்சேனையைவிருந்து
செய்வித்தோர்கணையால்த்தன் பெருவயிறுஞ்சரிந்து—மடிந்

கடைசிநாளில் ராமராவணயுத்தம்.

விருத்தம்.

இடுதிடெனஒடிப்போர ராஜுஞ்சென்ற
சேனைகளும்சாமிகையில் மடிந்தபின்பு
முடுகிஇருவரும்தேரில் ஏறிக்கொண்டு
மூதண்டகோடிகளும் நடுங்கவிட்டே
கயிலைமலையொடுமலை எதிர்த்தாற்போல
கடலினொடுகடலெதிர்த்தாற் போலவில்க்கொண்
டுமிராகவனும் இராவணனும் அங்கே
அடுத்திட்டார்சண்டைசெய்யத்தொடுத்திட்டாரே.

அம்-கரு-தோடிராகம்- அடதாளசாப்பு.

பல்லவி.

ராகவனுக்கும்ராவணனுக்கும்-நடக்குதேசண்டைதொடர்ந்ததே

அநுபல்லவி.

மேகத்தைப்போலவே அம்பன்கணைகள்சாட
மேலத்தைதக்காறுமல் வெம்பன்கணைகள்மூட
வாங்காத்ததேர்மேலே இருவருமகிழ்ந்தாரே
வானமும்பூமியும் ஒன்றாகமதித்தாரே



வானரவெள்ளம்-கடல்ப்போலே களத்தைப்போய்-வளைக்கவும்
எனர்விடும்கைச்-சரத்தாலே நெளிந்துப்போய்-இளைக்கவும்
வாரிவிடும்கல்ப-பெருக்காலே அரக்கர்க்காலி-தாளவும்
வீரர்விடும்கைத்-தடிக்குச்சூழ் குரக்குச்சேனை-விள்ளவும்
வடவையொடுபொரு வடவைவளைநிலை
மலையின்னொடுபொரு மலைபடெனஅலை
கடலின்னொடுபொரு கடலதெனவிரி
ககனமொடுபொரு ககனமெனஅரி—ராகவ

சரணங்கள்.

௧. அரக்கன்ராவணன் சிலசிலகணைஎய்தான்
அதைக்கண்டேராமன் தவிடுபொடிகள்செய்தான்
அரக்கன்நூறுநூறு யிரம்அம்புதூற்றினன்
அதைக்கண்டேராமன் நொடிஒன்றில்மாற்றினன்
அரக்கன்ஆயிரம் ஆயிரம்ஆயுதம்தொட்டான்
அதைக்கண்டேராமன் தூளிகள்தூளிகள்இட்டான்
அரக்கன்தேரைஆ காசத்திற்போக்கினன்
அதுக்கும்சாமிதேர் மேலாகநோக்கினன்
ஆதிசேடனுஞ்சே-ஷனும்பட்சி சனும்பொற்று-ணிடத்தேகன
காசுரனும்சிங்கமும்தப்பா தடுத்துப்போர்-தொடுத்தாலென
ஆனதுரங்கம்-திருப்பிச்சொல் பிடித்துத்தேர்-விடுத்தேவரும்
மாதலிசங்கம்-தொனிக்கச்சே பயப்பட்டார்-முடித்தேவரும
அக்கணம்-இருதேரும் தடம்த்தும்-நிலம்சுக்கும்
திக்குத்-திசைகளும்போய் இடம்சுற்றும்-வலம்சுற்றும்
அப்புறம்-மலைதாவும் அலைதாவுமகடல்தாவும்
இப்புறம்-செவிதாவும் புவிதாவும்வெளிதாவும்
அன்றுமுனிவர்ப யக்குமடைகட
என்றுபதறிக டுங்கிவிடவிட
அண்டமுகடுபி ளந்துநிலைகெட
மண்டலமும்திசை விலைகெட்டுநிலைகெட
அதிரமலைகளும் அதிரங்கைகளும்
அதிரவெகுதிசை அதிரமழைஇடி
அதிரஉததிகள் அதிரமகதிர்
அதிரபுவினம் அதிரஇப்படி—ராகவ

௨. வடதிசைமுதல் நாலுதிசையும்போவார்
கடலிலும்போவார் கடல்அப்புறமும்போவார்
பூவாதுவேகமோ வாயுவேகமோவன்ன
கனகலோகமோ மேல்கமோஎன்ன

வருவர்ஓடுவர் கூடுவர்இருதேரும்
பொருவர்சேருவர் நேருவர்இதைஅரும்
வசனமாகஉரை யார்சொல்வார்ஒருக்காலே
குசவன்ஆனவன் விடுதிரிகியைப்போலே
மாரிவழங்கும்-பிரசண்டக்கொண் டலைப்போல-இடித்தார்பல
தீவும்விசும்பும்-குலுங்கச்செஞ் சரக்காடா-முடித்தார்செல
மாதலிஅங்கம்-தொளைத்துப்பாய் பாரிக்குக்கோல்-விடுத்தான்ஒரு
சாமிநெடுந்தேர்-மறைத்தங்கே துசத்தைக்கீழ்-படுத்தானவன்
வளையராகவன்தேரை நிருதன்மூடலாலே
இளையவன்முதல்ஆனோர் களையானார்அதன்மேலே
மணவாளராகவன் பனிபோலஒறுத்தானே
கணைஎல்லாம்அறுத்தவன் கொடியையும்அறுத்தானே
மால்ஒத்தவன்படை மாரிபெய்திட
சூலப்படைகொடு சுவாமிகொய்திட
வன்னிவாளியை அவன்விடுத்திட
அன்னதேகொடு சாமிதடுத்திட
மாமயன்படை அரக்கன்தொடுக்கவும்
சாமிகந்தரு வாஸ்திரம்எடுக்கவும்
மாகலோகமும் புவியும்பொடிப்பொடி
ஆகவேகள மீதில்அடிக்கடி—ராகவ

௩. சாமிமேல்ஒரு தெண்டவன்விடுத்திட
சாமிஓர்அம்பு கொண்டதைத்தடுத்திட
சாமிமேல்அவன் மாயாஸ்திரம்போட
சாமிதான்ஞானாஸ் திரம்தொடுத்ததைச்சாட
சாமிமேல்சூலம் அவன்விடச்சினம்கொண்டு
சாமிஉங்காரம் செய்ததுவிழக்கண்டு
சாமிமூவரும் இவன்என்னும்விவகாரம்
தம்பிசொன்னதை நினைந்தெண்ணஅந்நேரம்
நாகருடன்செஞ்-சரத்தை கைபிடித்துச்-சாமிதொட்டேஅவன்
நாகம்என்னும்-செஞ்சரத்தை கொத்தவிட்டுத்-தூளிஇட்டான்ஒரு
சாமிதிரும்பத்-தொடுத்துப்பொற் பிறைக்கொக்கும்-சரத்தால்வரு
ராவணன்நெஞ்சைதொளைத்தொற்றைச் சிரத்தைத்துண்டம்இட் [டான்பின்
தறிபடுசிரகரம் அவனுக்குமுளைத்திட
சரிசரிஅரியவே வரவரக்கிளைத்திட
தறிபடுகையால்மா தலிமார்பைக்கலக்கினான்
அவன்விடுதோமரத் தையும்அய்யன்விலக்கினான்



தயித்தியன்சரீ ரம்நிறைந்திட
மயிர்க்கோர்அம்பது ஆய்மறைந்திட
சலித்தவன்சளை ஆய்விழுந்திட
உணர்ச்சிகொண்டட னேஎழுந்திட
சரமும்விடுவிடு படையும்பொடிபட
சகலரதகச தளமும்அடிபட
இருவர்மனதிலும் வளர்முதுபகை
எமனும்உடல்விட விடைஎஇவ்வகை—ராகவ

௪. எடுத்துராவணன் வளைத்தகைச்சிலைதன்னை
ஓடித்தும்காணியை அறுத்தும்இப்படிபின்னை
இடக்கையோடவன் வலக்கையும்விழஎன்று
துடித்துராகவன் முடுக்கினான்கணைஒன்று
இழுத்துத்தேர்வரு பரியும்பாகனும்சாக
அழுத்தத்தூணியும் குடையும்படையும்போக
எதிர்த்தராவணன் ஒருபதுமுடிமேலே
பதைத்துமாமலை யினில்விழும்இடிபோலே
ராமன்விடும்-செஞ்சரத்தில்கொத் துடைப்பத்துப்-பனங்காய்என
நாய்நரிமண்டிக்-கடிக்கக்கொக் கரித்துச்சுற்றிலும்-போய்விழ
ராகவன்இப்படி-தொடுத்துக்கத் தரிக்சக்கத்-தரிக்கத்தலை
ராவணனுக்கு-சரிக்கட்டிச் சரிக்கட்டிக்-கிளைத்துக்கொள
இப்புறம்ராமன்அரக்கன் மாளும்வகைஎன்ன
அப்புறம்விபீஷணன்உ பாயமுறைபண்ண
லட்சுமிசிதையும்காவல் கொண்டசிறைதீர
தட்சிணசூரியன்தேரும் லங்கைவழிசேர
இணக்கிடும்கர தண்டமனுபதி
வணக்கிடும்கோ தண்டநடுவதில்
இட்டுகைப்பிரம் மாஸ்திரம்தனை
விட்டிடத்தனி ராட்சதன்புனை
ரத்தினமணிமரு மந்தின்இடையிட்டு
வைத்தஅமுர்தக டத்தில்அடிபட்டு
மத்தன்விடுகிற சித்திரரதமவிட்டும்
பத்துமணிமுடி தத்திவிழும்மட்டும்—ராகவ

## ஸ்ரீராமபாணத்தால் இராவணன் இறந்தது.

சந்தவிருத்தம்.

தூவிமுடிக்கயி லாசம்எடுத்திரு நாலுமதக்கரி யைச்சாடி
சூரியனைத்திசை பற்றவிடுத்தொரு சூறையடித்தமு டுக்காலே
பூவுலகத்தவர் கீழுலகத்தவர் மேலுலகத்தவர் தப்பாதே
பூசைசெலுத்திட ஆண்மைசெலுத்துபு யாசலமிக்கத சக்கிரிவன்

ஆவல்மிகுத்தொரு சீதைபொருட்டினில் வீரமும்வெற்றியு முக்கோடி
ஆயிசும்பட்டிடொ ஞாத அரக்கரும் அடலும்ஒக்கவி டுத்தேபின்
யாவரும்இக்கதை ஆரமுதொப்பன வேதினம்உத்தமர் கற்றோத
ராமசரத்தினில் மாமலைஒத்தஇ ராவணன்இப்படி பட்டானே.

## அண்ணன் இறந்ததற்காக விபீஷணர் புலம்பல்.

விருத்தம்.

நிருதன்இவ்வாறழிந்தபின்பு சரீதேரில்
நின்றிறந்தஇவன்முதுகில் வடுவேதென்றான்
வரும்முதன்னாள் அநுமான் கைக்குத்தால்வந்த
வடுஎனவிடணன்சொல்ல மகிழ்ந்தான்இப்பால்
அருளும்அய்யன்ஏவலினுல் இவனும்போனன்
அண்ணாஅண்ணாஎன்றே அண்ணன்மேலே
ஒருமலைமேல்ஒருமலைபோல் விழுந்தேகண்ணீர்
ஒழுகின்றான்பழமைசொல்லி அழுகின்றானே.

௰௪-நிபதை-ஆகிரிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க. உண்டால்க்கொல்லும்விஷம் உலகத்தில்எங்கெங்கும்
உண்டே அண்ணாவே-சீதைஎன்று
கண்டால்க்கொல்லும்விஷம் உன்னிடத்திலேமாத்திரம்
கண்டேன் அண்ணாவே
உ. இந்தஅபிப்பிராயத்தைப் பிரம்மாவுடன்சொல்ல
இறந்தாயோ அண்ணாவே-சீதைமேலே
பந்தித்தஆசையும் உயிரோடேகொண்டு
பறந்தாயோ அண்ணாவே
௩. உள்ளதோசீதையைத் திருடுவதென்றஎன்னை
ஓட்டினாய் அண்ணாவே-உலகிலே
கள்ளனுக்குக்கூஎன் றவன்மேல்ப்பகைபோலக்
காட்டினாய் அண்ணாவே
௪. அடிநாளைச்சாபத்திடு சீதைஆய்வந்ததென்றேன்
அலைந்தாயே அண்ணாவே-உடம்பெங்கும்
சுடுகிறசெந்தணலை மடியினிலேகட்டித்
தொலைந்தாயே அண்ணாவே
௫. இனியாதேசீதையை குலையும்வாழ்வென்றஎன்சொல்
நினைந்ததோ அண்ணாவே-ராமனை



மனிதன்மனிதன்என்று வாயும்துடுக்கும் எங்கே
மறைந்ததோ அண்ணாவே
௬. வள்ளல்கும்பகர்ணனும் மாலியவான்சொல்லியும்
மருண்டாயே அண்ணாவே-அடங்காமல்
துள்ளிவிளையாடுபோதி சுமக்கும்என்றல்ப்போல்ப்பட்டுச்
சுருண்டாயே அண்ணாவே
எ. சுற்றமும்சேனையும்உன் பத்துமுடியும்முதல்கான்
சேர்ந்தாயே அண்ணாவே-எல்லாரும்
செத்தபிறகாகிலும் ராமனேதெய்வம்என்று
தேர்ந்தாயே அண்ணாவே
அ. பரந்தகயிலாசமும் உன்னுடைத்தோளுக்குப்
பற்றுமோ அண்ணாவே-தோள்மேலே
சுரந்துகுரங்குக்கூட்டம் இப்போதணிஅணியாத்
தொத்துமோ அண்ணாவே
௯. விரிந்ததேவர்க்கெல்லாம் கடைக்கண்கொடாமல்வெடு
வெடுத்தாயே அண்ணாவே-களத்திலே
பருந்தும்கழுகும்கொத்த முழுமுழுக்கண்கொடுத்துப்
படுத்தாயே அண்ணாவே
௰. பூமலர்அம்புகளைக் காமன்கைஎய்தெய்து
பொழிந்ததே அண்ணாவே-இப்போதிந்த
ராமன்எய்தபிறகு காமன்எய்கிறதெல்லாம்
இழிந்ததே அண்ணாவே
௰க. சிறுமதிகொண்டல்லவோ மறுபெண்கள்மேல்ஆசை
திரண்டாயே அண்ணாவே-அவரவர்
பொறுமைஇடித்தல்லவோ மண்என்கிறபெண்மேலே
புரண்டாயே அண்ணாவே
௰உ. பிரமாதிதேவர்கள் தந்தவரங்கள்எங்கே
பிரிந்ததோ அண்ணாவே-இன்றைக்கெம
தருமராஜனுக்கும் உன்னைத்தின்றுதொந்தி
சரிந்ததோ அண்ணாவே

## மண்டோதரி புலம்பல்.

விருத்தம்

நாடிவிபீஷணன்இவ்வாறழுதபோது
நல்லசாம்புவன்தேற்றத்தெளிந்தான்இப்பால்
பாடல்செய்யும்மடமாதர் அரக்கமாதர்
பாதாளமாதர்முதல்ப்பலரும்சேர்ந்து

கூட்டமண்டோதரிஅங்கேகொள்கொம்பில்லாக்
கொடிபோலராவணன்பேர்உடல்மேல்வீழ்ந்து
தேடரியதுணைஇழந்தகிளிபோல்வாயைத்
திறக்கின்றாள் அழுதழுதுபறக்கின்றாளே.

ஹி-திபதை-காம்போதிராகம்- ஆதிதாளம்.

கண்ணிகள்

க. என்னசெய்வேன்என்னசெய்வேன்மைந்நாகமலைபோல்உன்னை
இங்கேகண்டுநொந்தேன்நொந்தேன் லங்கைமன்னவா-அய்யோ
உன்உயிரைக்கொன்றநமன் என்உயிரும்கைக்கொள்ளானோ
ஓடிஇதோவந்தேன்வந்தேன் லங்கைமன்னவா

உ. கண்ஆனபேர்களெல்லாம் புண்ணாக்கிவிட்டனன்என்னும்
கரும்பையும்வேம்பாக்கிவிட்டாய் லங்கைமன்னவா-அய்யோ
பெண்ஆனசீதைபிறக்க லங்கைஅழிந்துபோம்என்ற
பேச்சையேமெய் ஆக்கிவிட்டாய் லங்கைமன்னவா

௩. தினம்இந்தலோகத்திலேநீ தேவராலும்சாகாயென்று
சிந்தைமகிழ்ச்சிஆனேனே லங்கைமன்னவா-அய்யோ
வினைபோல்இந்தநாளில் ஒரு மனிதனாலேசாவாய்என்ற
விதிஅறியாமல்ப்போனேனே லங்கைமன்னவா

௪. சீதைஆசையைவெளியில் ஓதாமல் அடக்கிக்கொண்டு
செருக்களத்தில்த் தூங்கிறாயோ லங்கைமன்னவா-அய்யோ
ஏதையாசொற்கலோகத்து மாதருக்குள் உனக்கேற்க
எந்தப்பெண்ணைக்காண்கிறாயோ லங்கைமன்னவா

௫. எட்டானைக்கொம்பும்பிடுங்க ஒட்டாமல்க்கெட்டியாக்கட்டி
இருக்கிறமணிமார்பாச்சே லங்கைமன்னவா-அய்யோ
சட்டம்ஆகராமன் அம்பு பட்டாடைமேல்ஊசிபோலத்
தட்டாமல்உருவிப்போச்சே லங்கைமன்னவா

௬. ஊரிலேசீதைமேல்வைத்த ஆசைஇந்தமட்டுமெங்கே
ஒளித்திருந்துவாதிச்சதோ லங்கைமன்னவா-ரகு
வீரன்பாணம்உன்உடம்பை எலிவெட்டிசோதிக்கிறாற்ப்போல்
வெட்டிஇன்றுசோதிச்சதோ லங்கைமன்னவா

௭. அனர்த்தமாவினையும்அய்யோ நினைக்காதேசீதையையென்றேன்
அன்றுகேளாமல்வைதாயே லங்கைமன்னவா-நான்
உனக்குமுந்திக்கொள்ளாதமுன் எனக்குநீமுந்திக்கொண்டாயே
ஓரவஞ்சகம்செய்தாயே லங்கைமன்னவா



௮ தங்கைசூர்ப்பநகையென்கன் நங்கையைஎடுக்கச்சொல்லி
நமன்போல்வந்தாளின்றே லங்கைமன்னவா - அய்யோ
என்கழுத்தம்பாவிஅவள் தன்கழுத்தைப்போலேஆக்க
என்னையேஉன்னைக்கொன்றாளே லங்கைமன்னவா

௯. அந்தம்ஆம்சீதையைஆரும் வந்தனைசெய்யும்தெய்வத்தை
ஆரோபோலஆசைப்பட்டாயே லங்கைமன்னவா - அய்யோ
இந்தமரத்தைவெட்டினால் இந்தஇடத்தில்சாயும்என்
றெண்ணாமலபுத்திகெட்டாயே லங்கைமன்னவா

௰ வேதன்முதலோர்வரப்பிரசாதத்தால்மூவுலகுக்கும்
வேந்தன்என்வாழ்க்கிட்டாயே லங்கைமன்னவா - அய்யோ
சீதைஆம்புரைமோர்விட்டு வாழ்வாம்பாற்கடல்கெடுத்து
தெருவிலேஎன்னைவிட்டாயே லங்கைமன்னவா

---

சீதாதேவிக்கு அனுமார் ஜெயசேதிகூறல்.

விருத்தம்,

ஆனவண்டோதரிஇவ்வா றழுதுசோர்ந்தாள்
அரக்கனுக்குக்கடன்விபீஷணனும்செய்தான
வானரவேந்தனும்தம்பிதானும்செம்பொன்
மௌலிவைத்துஇலங்கைஅபிஷேகம்கொண்டான்
மானவனும்மாருதியை அழைத்தான்போய்
வாடியதோர்பயிர்க்குமழை பொழிந்தாற்போலச்
சானகிதன்காதில்இராவணன்போய்வீழ்ந்த
தனம்செல்வான்மகிழ்ந்துசோபனம்சொல்வானே.

அக-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சோபனம்சொல்லவந்தேன்-உன்தன்-தொண்டன்அனுமந்தன்

அநுபல்லவி.

சோபனம்சானகித்தாயே முந்தமுந்த
சுவாமிராமகாரியமேசெயம் அந்த—சோபனம்

சரணங்கள்.

க. ராமசாமிவிடுமொருகணைபட்டு-ராவணன்உயிர் விட்டு-ஒரு
மாமலைபோலத்தரைமேல்வீழ்ந்தானே-வைகுந்தம்சேர்ந்தானே இங்
சோபனம் [த

உ. தேவர்முனிவர்சிறைநீக்கி முன்போலே-செழிப்பாய்உடன்றுலே-வொ
ல்லாப், பாவிஅரக்கன்பயங்கரம்விண்டாரே-மதிசெளகொண்டாரே-
சோபனம் [இந்த

௩. இக்கேளுன்யோ இரம்தந்தானே-இருமென்றுசொன்னேனே - இப்போ, தங்கேளுந்தருளஎம்மானே-அனுக்கிரகமசெய்தானே- இந்த சோபனம்.

௪. சந்திரன் இந்திரன்தேவர்களுக்கும்ஸ்காயனம்-சகலர்க்கும்சோபனம் அம்மா-இந்த, அரக்கியரைகளைகொல்லவேணும்-எனக்கிதுசோபனம்கா [ணும்-இந்த சோபனம்,

———

## சீதாதேவி அனுமாரை உபசரித்தல்.

விருத்தம்.

கண்மலர்க்கராமதூதுவன் இதுசோபனம்சொல்லக்காதில்க்கொண்டாள், நினம்மலர்க்கசாமிதிரு வடிமலரைத்திசைநோக்கித் தெண்டனிட்டாள், தனம்மலர்ந்தாள் அகமலர்ந்தாள் முகமலர்ந்தாள் என் அன்னை சனகிறன்றனள், மனமலர்ந்த குறைஎல்லாம் மாற்றினள் அனுமானை வாழ்த்தினளே.

அஉ-தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எந்நாளும்வாழி நீதானே-என்தெய்வம்
உன்னைப்போலஉண்டோ அனுமானே

அநுபல்லவி.

தென் இலங்கைஅரக்கன் தன்னைப்பட்சிததாயோ
பின்னைமங்களம்சொல்லி என்னைரட்சித்தாயே—எந்நாளும்

சரணங்கள்,

௧. இருக்கும்சிறைமீட்டேயென்என்ற பாக்கியம்-என்முன்
உரைத்தபடிசெய்தாயேஎன் பாக்கிம்-அப்பாஉன்
கருத்திலநீபிடித்ததே வைராக்கியம்-உனக்குப்
பெருத்தமுஉலகும்கொடுத்தென்ன சிலாக்கியம்
சிரதினுலவணக்கம் செய்வதேயோக்கியம்—எந்நாளும்

௨. மனத்தினில அடக்காவி சாரம்-நீங்கி
எனக்கிறநீதந்த சரீரம்-ஐய்யா
இனிசொல்லதென்னஉப சாரம்-அங்கே
தனித்தசாமிக்கும்செய் தாயேஉதாரம்
உனக்குநான்என்னசெய் வேன்உபகாரம்—எந்நாளும்



௩. இதம்ஆம்என்சொல்லுன்றுந்த டமே.-கோபம்
இல் அரக்கியர்மேலை டமே.-இனம்
உதவிசெய்யும்செய்கைவி டமே-சாக்சன்
எதுவும்தந்தேன்நீ இனியபமடமே
முதலவர்மூவருக்கும் முதுகுகொடமே—எந்நாளும்

———

## சீதாதேவி அக்கினியில்குளித்து எழுந்தது.

விருத்தம்

செவிக்கேகதமம்சொல் அனுமானைத்தேவி இவ்வாழிகள்சொன்னள்-பிரவிபீஷணனும்சென்றான் திருச்சேவைகருச்சமயமடைமுனே, புவிக்கோர்தாயேவருகஎன்றான் பூவையழும்கோலமகொண்டாள்- பூவாமனமேல்செஞ்சறையன்புனைதாள் அம்மையணிந்தினமுள், தவத்தோர்க்கருளும்சீராமன்தன திருவிப்புவேறாசு - சாமிஅடியேன்செய்தபிழைசகிப்பாய்என்றுள் தலைமேலக்கை, குவித்தாள்மூக்கால்வலம்வந்தாள்கொழுத்தன்வளர்த்தசெழுந்தணலில- குதித்தாள்அப்போதெழுந்தமலுக் கொழுந்தாய்சீதைஎழுந்தாளே.

அ௩-தரு-பிலஹரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

எழுந்தாளேபூங்கோதை-எழுந்தாளேசீதை

அநுபல்லவி,

கொழுந்துபோலஒளிஓங்கி - குளித்தசெந்தணல்நீங்கி—எழுந்

சரணங்கள்.

௧. புரந்தரன்இந்திராணி பூமேலஆரணிவாணி
பூதேசன்சர்வாணி
அருந்தவன் உடன்கூட அருந்ததியும்கொண்டாட
அமரர்சோபனம்பாட பூமலர்போட—எழுந்

௨. திருமேனி தன்னில்வன்ன செழுமஞ்சள்ஒளியின்னே
திசைஎங்கும்மாசவனென்னே
கருமம்புசழ்ந்த உள்ள தழைக்கும்எழுவாதுவெல்ல
சகலசேனையும்மெள்ள கயல்தன்னை—எழுந்

௩. மைரடி கசங்காமல் மணிக்கூறைமசங்காமல்
மாலைவண்டசங்காமல்
கலவைசாம் வாங்காமல் கனிவாய்நகைநீங்காமல்
கண்டோர்கள்ஏங்காமல் கூந்தல்நீங்காமல்—எழுந்

௪. குங்குமம் புலராமல் குழல்மேல்மைமலராமல்
கூந்தல்பூவுலராமல்
அங்கேராமன் முன்னாலே அக்கினிதேவன்கைமேலே
அலர்ந்ததாமரைப்போலே மின்னலைப்போலே—எழு

## அக்கினிபகவான் முறையிடல்.

விருத்தம்.

எழுந்தசோதிசீதைதன்னை ஏந்திய அக்கினிதேவன்
செழுந்துழாய்மாலைராமன் திருமுன்னே வைத்துவீழ்ந்தான்
அழுங்கினேன்சாமிஇந்தப் பூவைகற்பென்னும்தீயால
அழுங்கினேன் எனத்தன்வாய்மேல் அறைமிட்டான்முறையிட்டானே

அசு-தரு-பியாகடைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னபிழைகள்செய்தேன்சாமி-நான் அக்கினிதேவன்
என்னபிழைகள்செய்தேன் சாமி

அநுபல்லவி.

பொன்னிச்சீதைதன்னை என்னில் இடுவித்தாயே
மின்னியதாக்கினியாலே என்னைச்சுடுவித்தாயே—என்

சரணங்கள்.

௧. ஏழுகருமேகாதுளையும் சுடுவதெனதுசென்மம்
எனையும்சுட்டதிந்த அன்னைபத்தினிதன்மம
சீதைத்திருமேனிஅல் லாலஉண்டோஒருகன்மம்
மெய்யிலாயவிளக்கும்என்மேல செய்யலஆமோவன்மம்—எ

௨. நாலும்மதக்குரோரும்பதக்கென் றெண்ணப்போமே
எந்தப்பெண்கள்தாமோ
கோலம்செய்யலஆமோ
அங்கம் இப்படிவேமோ—என்

௩. நீதிஅநுமான்சொன்ன சேதிக்கும்உண்டோலோபம்
உனக்கிதில்என்னலாபம்
சீதைகருணைபிரதாபம்
தென்மேல்என்னகோபம்—என்



## ஸ்ரீராமர் சீதாதேவியை அங்கீகரித்தல்.

கலித்துறை.

மாட்டசிஇவ்வாறுசொல்அக்கினிதேவனைவள்ளலகண்டான்
சாட்சிஎல்லாருக்கும்நீயேசனகிக்குமசத்தியஞ்சொன்னாய்
மீட்சிசெய்வாய்என்றுவிட்டான அப்போதுமிதிலைவல்லி
காட்சிசெய்ராகவன்முன்னேஇருந்துகளித்தனளே,

## பிரம்மதேவர் ஸ்ரீராமரைத் தோத்திரம்செய்தல்:

விருத்தம்,

அனம்மேல்இவ்வாறெழுந்தானை அருளாலநோக்கிராகவனும்
கனம்சேர்தென்முன்சனகிகுணம்கண்டுதுதிகான்பிரமாவும்
நினைந்தான்சாமிநின்மகிமைநீயேஅறிவாய்சீதையின்மேல
நினைந்தான்வடதென்றவன்பெருமை தெரிப்பான் புகழ்ந்துவிரிப்பானே,

௰௫-இமைதை-பூபாளராகம்-அடதாளசாப்பு,

கண்ணிகள்,

௧, பரராமராவி குலராமபுச சலராமா
பலராமகோ
சராமாமன்று காராமசெளந் பிரகாமா-ராமராமா
தராமாஆ

௨, பள்ளமானைஇதற்குள்ளேபுகுந்தெவர்க்கும் என்கோவே
மாமுதமதருவாய்
கள்ளனும்ஆய்வினை விளக்கும்பிடிக்குருப்பன் கர்த்தாவே-ராமராமா
கபட்டை ஆர் அறிவார்என்

௩, மூக்காடிட்டபிள்ளை முன்பின்றபிள்ளை அல்லால் அறியாதே
முதலக்குட்டினைபிள்ளையை
இக்காரியம்போல ஒன்றைஒன்றெதிர்காட்டி செப்போதே-ராமராமா
இடைநின்றஉனக்காசை

௪, நீதியாகவன்றுமேருக்குள்ஒருவனை பூண்டாயே
நீக்கிபுருஷம்வித்தை
ஆதிமூலமென்ற காதத்திலப்பதம்வைக்க தாண்டாயே-ராமராமா
ஆனைக்குமுன்னேவக்

௫, கயிற்றைப்பாம்பென்றெண்ணிக் கலங்கும்வண்ணம்ஒரு வகைபோலே
கருக்கல்உண்டாகிய
மயக்கத்திலேகாங்கள் மாங்கும்வண்ணம்இந்த நெடுமாலே-ராமராமா
மயக்கம்காட்டல்ஆமோ

௬, ஞானம்தண்ணீர் அனல் வளிவெளிஇவற்றைந்தா
காலுமூன்றிரண்டொன்றும் அதிகாரா
கோலம்மானிடம்காட்டி ஆளுக்குள்ளே ஆளாய்
குறைகுறைக்கிறதென்ன சுகுவீரா - ராமராமா

௭, மாயைதனைப்படைப்பாய் மாயையும்துடைப்பாய்உன்
வல்லமைஅறியாதவ லோபூமி
மாயைக்குள்இரும்பாயும் மாய்க்கம்காட்டிஞாலஉன்
மகிமையைஅறிவதெப் படிசாமி-ராமராமா

௮, நீயும்சீதையும்பெற்ற தாயும்தந்தையுமன்றோ
இனைக்கிரேனும்காணச நாகலம்
தாய்இவள்மகிமையைப் புவிக்குக்காட்டவேண்டிச்
சாமிநீசெய்தாயோ இக்கோலம் - ராமராமா

௯, கலிவினுலேஎந்தஉயிருமுயிருக்குள்ள
கருத்தும்நீதெரிவாயே வெரியோனே
சனகிகருத்துமாத்திரம் தெரியாதபோல்இந்திர
சாலம்செய்யல்ஆமோ நீதானே- ராமராமா

௰, அக்கினியையும்சுடும்அக்கினிசீதைஎன்
றக்கினிஅறிந்ததே இவள்சாட்சி
இக்கோலமாராவணன் தீண்டாமல்கிலதோடே
எடுத்தானேஇதைவிட என்சாட்சி - ராமராமா

௰௧, நீயையுமபினமுசொன்ன வாயையுமவடலைச்செந்
நீயையுமகடுமிவள் பிறதாகம்
வாய்புளித்ததோமாங் காய்புளித்ததோஎன்று
மனத்திலெண்ணினும் வெகுமாமை- ராமராமா

௰௨, என்னுக்குள்எண்ணெய்போல் இருக்கிறசீதை
இடத்தில்இருக்கலேயோ பார்த்தாவே
உள்ளக்கருத்தைவள்ளல அறியுமென்றவார்த்தை
உனை அல்லவோ சொல்லாய் கர்த்தாவே-ராமராமா

௰௩, எதிர் அரக்கரைக்கொன்றாய் மதியில்எங்களைவைத்தாய்
இந்தத்தயவுனக்கேன் கேபோச்சோ
மிதிலைவலிமையைஇங்கே சோதித்தாய்எங்களை
விருந்திட்டுப்பகைகாணோ மனதாச்சோ-ராமராமா

௰௪, இழுக்காகியபொன்னைப் புடத்தில்வைத்தெடுப்பார்கள்
இவளுக்குஎதோசொல்லாய் விதியோசம்
அழுக்கில்லாததங்கத்தைப் புடத்தில்வைத்தெடுத்தாயே
ஐயாஉனக்குமஉண்டோ மதிமோசம்-ராமராமா



## மக்களையும் மருமகளையும் சக்கிரவர்த்தி புகழ்தல்.

விருத்தம்,

ஆரதபிரமன்இவ்வா றுரைக்கத்தேவர்
அறும்தியாலதசரதன்தேர் விலமேல்கொண்டான்
காராரும்குழலசீதைக் குவசரித்தான்
கற்பகமேவாழ்கென்றுஞ் இளையோன்தன்னைச்
சோராமல்அண்ணன்தாசப் புண்ணும்இந்திரன்
தோள்புண்ணும்துடைத்தனையே என்றுகண்டு
மாராபிராமனைத்தன மார்பில்கட்டி
மகிழுவான் அவன்குணத்தைப் புகழுவானே,

அடு-ரூ-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அப்பனேஇன்றுன்னைக்கண்டேன் ஆனந்தம்கொண்டேன்

அநுபல்லவி.

வையம்தசரதன் நானென்னை மறந்திக்கவிட்ட பின்னை
வானவருக்கும் அந்த நான்முகனுக்குமெட்டா
மாயவன்உலகத்திலேஇரா நென்னைவைத்த—அய்யனே

சரணங்கள்.

௧. மல்லிகைப்பூமிதித்தாலும் வருந்தும்உன்தன்தாளிலே
வனத்தில்உள்ளகலுமுள்ளும் பொறுத்ததோஇச்சாளிலே
எல்லாருக்காணக்கைகேசி சண்டாளிஎன்தோளிலே
இருந்துசெவியைக்கடித்தால்போல்உனைப்பிரித்தாளே ஒருகோளி
சொல்லும்தரித்திரனுக்குத் திரவியம்கண்டெடுத்தாளப்போல் [லே
சென்மக்குருடனுக்குத்தெய்வம்கண்கொடுத்தாலப் போல—அய்ய

௨. லங்கேசிசெல்வமுக்காயம் கொஞ்சத்திலேமாறுமோ
* கட்டிக்கொண்டாயினதலாலப் பின்னையும்ஒன்றாலஆறுமோ
அய்யாவுன்றாந்தம்போல அமுதாருமகனைவஉறுமோ
ஆர்முகமும்உன்முகம்போல் ஆறுமோமனம்தேறுமோ
கையும்மெய்யுமஎன்தன் கண்கள்தெரிசித்தது
கண்கள்படைத்தபலன் இன்றல்லோலபித்தது—அய்ய
வேனுமோஉற்றாரிமைக்கு

௩. மாதவையுமகட்டிக்கொள்ள அப்பாஉன்தன் அருமைக்கு
யாருள்ளோர்உனக்கொப்பானோரன் சீகேதாசீதைபெருமைக்கு
அருவம்ஆம்அருக்கதிகூட சொல்லேன்உனதன்ஒருமைக்கு
சோதிக்கவேணுமோஎன்

---

* இதை இட்டுத்துப் பாடுகையில உன்னை என்று முதலிலே கூட்டிக்கொள்க.

திருக்கண்டவனுக்குத் தேவாதிதேவர்க்கும் — நீக்குண்டோமென்மேலே சிறந்தேனேஉன்னாலே—அ

# அனுமார் வசந்தனைக் கொண்டுவருதல்.

விருத்தம்.

முடிபுனையும்தசரதன் உரைஇக்கிழ முழுதம்மொழிந்துடனே
முதலவர்வரமதனில் அனைவர்களும்பழ மறையிலெழுந்தபினே
இடர்பெருகும்பா தன் அருளும்படி வடதிசைபுஷ்பகம்மேல்
சகுலதியும்சனெ தியும்ஒருதம்பியும் எவரும்நிறைந்திடும்முன்
மடியும்வசந்தனை ஒருமிபிறைம்கொடு வருகெனஎம்பெருமான்
வளைநிருபமதனை முடிமிசைகொண்டொரு மறவியின்மண்டலமும்
அதிகளிறிந்திரன் உறைதரும்மண்டலம் அயன்உறைமண்டலமும்
அதிர்அதிரும்படி விசைஅனுமந்தன் அவ் வளவிலகிளம்பினனே,

அசு-திரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்,

பல்லவி,

தாவி அனுமந்தன் — பாய்ந்தானே-வசந்தனைராம
சாமிமுன்கொண்டோடி — வாய்ந்தானே

அநுபல்லவி,

காவல்வசந்தனை முன்னோலை காட்டென்று செங்கைஓலை
காருந்தனஎழுந்திட — எமபுரதிசைகண்டு
வேகத்துடனே அரை — கொடியினிலவிசைகொண்டு—தாவி

சரணங்கள்,

௧. துருவினமலோகத்தை — வாட்டி-வசந்தன்இல்லாமல்
சொல்லிஅதிகின் துபா — ராட்டி-ஈதிலவிழுந்த
நரகவாசவா அப்பால — ஓட்டி-காட்டாளென்று
நமனைவாளெச்சருக்கி — மாட்டி-எங்கெங்கும்தேடி
கருடவேகமொடு — கந்தர்வலோகமும்
இருவண்ணும்கிமிட்டாமுன் — இந்திரலோகமும்—தாவி

௨. ஐந்தருநீழலெங்கும் — தேடி-மயங்குவந்த
அந்தத்தேவரோடுவா — பாடி-சொர்க்கலோகத்தில்
சந்தேகம்உண்டென்றதை — காடி-அந்தலோகத்தில
சற்றுகோத்திலேவோய்க் — கூடி-அதற்கப்புறம்
மந்துபோலஎழும்பிப் — பனைத்தலால்நெருக்கி
அந்தக்ஷணமே — இந்திரனையும்சுருக்கி—தாவி

௩. கனலையாபிர்மலோகம் — நோக்கி-வசந்தனை இங்கே
காட்டென்றுபிர்மாவுடன் — காக்கி-இந்திரனைமறே



உடலையும்வாலில்கட்டித் — தூக்கி-சாசசென்ன
அந்தஉலகைவிட்டுப் — போக்கி-மிகவும்நல்ல
தவமிகுத்தபெருஞ் — சத்தியமுனிவர்விட்டும்
விலாமூர்த்திதரும் — விஷ்ணுபதவிமட்டும்—தாவி

# ஸ்ரீராமர் சீதைக்கு லங்கையில் பலர்ப்பட்ட இடங்களைக்காட்டல்.

விருத்தம்,

ஓகையுடன் அனுமன் இந்த வாறுவசந்தனைத்தந்தான்உடனேகொண்டார், ஆசமிதமிகக்களித்தார் வானரர்கள்மானிடர்கள் ஆனார்இப்பால, வாகைபெறுதம்பியுந்தானும் படையும்புஷ்பகமேல் மகிழ்ந்தராமன், தீங்கைகளும்சீதையுடன் செல்லுவான்இவைஇவைகள் சொல்லுவானே,

௪௬-நிபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்,

௧. கன்னிகையே அந்த சனகன்வேள்வியில்வந்த கற்புள்ள — மடமானே
உன்னிமித்தத்தில்இந்த தென்னிலங்கைபோனதை உற்றுப்பார் — நீதானே

௨. வடிகணைஒன்றாலேகான் ராவணன்உயிர்கொண்ட வடக்குவாசலைப் — பாராய்
கெடிபெறும்நீலன்அந்த பிரகஸ்தன்உயிர்பறித்த கிழக்குவாசலைப் — பாராய்

௩. தீரன்அங்கதன்அந்த வச்சிரதந்தனைக்கொன்ற தெற்குவாசலைப் — பாராய்
வீரன்உன்மைத்துனன் இந்திரசித்தனைக்கொன்ற மேற்குவாசலைப் — பாராய்

௪. உறுதிசொல்கும்பகர்ணன் அதிகாயன்முதல்ஆனோர் உருண்டகளத்தைப் — பாராய்
பிறகுமூலபலங்கள் காள்மாடுதலைமாடாய் பிரண்டகளத்தைப் — பாராய்

௫. அடுபோரில்வலிமைக்காத்த அனுமான்அகம்பனைஅன் றடுகளத்தைப் — பாராய்
படுபாவிதூம்மகோ தாள்என்தன்கையிலப்பட்ட படுகளத்தைப் — பாராய்

௬. வடிவானமாண்டம் கொட்டித்தட்டிச்செய்யும்குச வனுக்குப்பலகாள் — வேலை

நடிகாரனுக்கோ சுஷணம்போல் அரக்கர்என்றால்
சமைத்ததைப்பார்கண் ணே
௭. இந்திரசந்திரசூரியர் எட்டிப்பார்க்கக்கூடாத
ஏழுமதில்கள் பாராய்
ஆர்ந்தமாம்பாதாள லோகத்தின்கீழும்போம்
அரசுகள் இவை பாராய்
௮. சுக்கிரீவன்தக்கினின்று ராவணன்மேல்பாய்ந்த
சுவேலமலையைப் பாராய்
இக்கடல்சேனைபட்ட ரத்தக்கடலைக்கொண்ட
இத்தக்கடலைப்பாராய் பாராய்

## ஸ்ரீராமர் சீதைக்குச் சேதுவைக்காட்டி அதின் மகிமைகூறல்.

விருத்தம்,

நிறமென்கூந்தல்சானகியே பின்னே அநுமான்கண்டுவந்த
பிரகிருதிகள் ஒருநாளறல் பெருகச்செயும்பேர் அணைபாராய்
உறதிஆசு இதனபகிமை உரைக்கமுடியாதானாலும்
சிறிதும்மொழிவேன் எனராமன் செலவானை எடுத்துச்சொல்வானே

அ-எ-தரு-மோகனராகம்-அடதாளசாப்பு,

பல்லவி.

இந்தச்சேதுவைக்கண்டால்போமே-சனகன்பெண்ணே-இகபரசித்தி [ஆமே

அநுபல்லவி,

சந்ததமும்மனதினில்பிரியாதே-சகலபத்தினிகளும் தொழுவரும்மாதே
இந்த

சரணங்கள்.

௧. தந்தைதாயுடனே குருதெய்வந்தனையும்-சதிகீளன்று
தஞ்சம் அடைந்தவரைக் கெஞ்ச அடிக்கும்சற்பனையும்-அருகினே
அந்தணைப்பசுவை மைந்தனைகொலலும்வேதனையும-பஞ்சகாலத்
தில், அன்னம்இட்டவரைக்கன்னமிட்டிடும்வஞ்சனையும-பயபடாமல்
கீந்தைஆனகள்ளைக் குடிப்பதும்-பக
மங்கைஉரைஞ்சுகலலை இடிப்பதும்-கடுச்
சந்திரிருட்சங்களை ஒடிப்பதும்-பிறர்
சொந்தப்பெண்களைக்கையைக் பிடிப்பதும்
கொந்தபேர்பொருளைக் கொண்டதோஷமும்
கோண்புகளைவில்ல விண்டதோஷமும்
லந்தபேர்பசிக்க உண்டதோஷமும்
படிரூபவபெண்களைக் கண்டதோஷமும்—இந்த



௨. கேடுசெய்பவ ரோடுறவாயவிலையும்வயிற்றினிலப்ப
ரைன்றிட வழக்கோரம் சொல்லியகெடுதலையும்-பாதிசாமத்தில்
வீடுகளிலமறைத் தேடிநெருப்பிடும்புலையும்-கண்ணிகள்குத்தி
விலக்கும்பறவைகளும் கலங்கிடவேசெய்யுங்கொலையும் ஆணும்பெண
கூடுமகூட்டுறவைப் பிரிப்பதும்-வழி [ணும்
பாடுதப்பிடக்கக் குழிப்பதும்-கடுக்
காடுகளிலேவெட்டிப் பறிப்பதும்-விளை
பாடும்பிள்ளைக்கழுத்தை முறிப்பதும்
காடிக்கெடுப்பவரைத் தடிக்கும்பாவமும்
காண் இழந்தவென்னுடன் படிக்கும்பாவமும்
கோடைக்குளத்தைத்துறந்து விடுக்கும்பாவமும்
கோள்ச்சொல்லிக்குடிகளைக் கெடுக்கும்பாவமும்—இந்த
௩. மாலைஇட்டவளைஇகழ்ந்துசொல்லும் பாதகமும்-வேறொருவனை
மருவிஅதனில்வந்தகருவை அழிக்கும்பாதகமும் - பசுவும்கன்றும்
மேலஇருப்பவரைக்கலக்கும்மித்திர பேதகமும் - மாதவிடாய்
பூத்தமங்கையரைச் சேர்ந்தவினைத்துரோகமும்-குருவேளென்று
மேலவர்களைஅலைக் கழிப்பதும்-வழிச்
சாலைசத்திரங்களை அழிப்பதும்-செய்யும்
காலசெபதபத்தை ஒழிப்பதும்-இடும்
பாலைவிசரைப் பழிப்பதும்
ஏதும்இரைச்சிகளைத் தின்றதோஷமும்
இநட்டினில்இடம்இல்லை என்றதோஷமும்
ஆலயங்களிலப்புனர் நின்றதோஷமும்
ஆற்றில்அம்மணத்துடன் சென்றதோஷமும் —இந்த

## ஸ்ரீராமர்சீதைக்குவந்தவழி அடையாளங்கூறல்.

விருத்தம்,

திருவணைப்பலசேனதென்று நிலைநிறுஸ்பருக்கராமன்
கருப்பமர்க்குழலிஆன சானகிவதனமநோக்கிப்
பொருமதில அயோத்திவிட்டுப் புறப்பட்டகாள்முன்தொட்டு
வருபவழி அடையாளங்கள் வகுத்திட்டான்தொகுத்திட்டானே.

அ-அ-தரு-ஆநந்தபைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சனகன்மாதே-பாராய்-சனகன்மாதே

அநுபல்லவி.

கிளிவினுடன்மனம்-மகிழப்பாராய்பெண்ணே—சனகன்

சரணங்கள்,

௧. இலங்கைநகர்மேலேமுன்னாள் எழுந்தனுமன்பாயவே
இடமதனுமயேந்திரமிது தானே
தலம்புகழுவேளன்னை வருணன் அடைக்கலமென்று
சரண்புகுந்ததானமிது தானே-பெண்ணே—சனக

௨. மதிகதிர்உள்ளளவும்மோம் பொதியமலைஇதுதிவ்விய
மகத்துவம்உள்ள அகஸ்தியமுனி தானம்
கெதியில்எதிரோடின்ற மலைஇதுசுக்கிரீவன்வாழ்
கிஷ்கிந்தை அவனுக்கா தினம்-பெண்ணே—சனக

௩. சந்திரனைநட்சத்திரம்போல் உன்தனைஇணங்கவே
சகிசெனங்கள்ஆகலுக சாலே
இந்தமலையின்றும்வா னரமாதர்உருமாறி
இதோவருகிறார்பார்கண் ணாலே-பெண்ணே—சனக

௪. கிளைக்கும்என் அம்பினாலே ஏழுமரங்களும்வீழ்ந்து
கிடக்கிறதைப்பார்நமக்கு நேராய்
விளைக்கும்மழைகாலத்தில தம்பியுடன்நான்இருந்த
மாலியவந்தமலைஇதனைப் பாராய்-பெண்ணே—சனக

௫. துதிசெய்சநுனவணிகளைச் சுக்கிரீவன்காட்டநான்
துயருற்றமதங்க அடி வாரம்
அதிசயமத்தியா-என்னையும்உன்னையும்காத்த
அனுமன்கண்டதிவிடமம்மை ஓரம்-பெண்ணே—சனக

௬. தபவாகமனம்தேற்றிய பசிஆற்றிஎனைப்போற்றிச்
சபரிமுத்திபெற்றஇந்தச் சாலை
உயிர்போலும்உனைத்தேடி வாடிமவழிமேல்க்கவந்தன்
உயிர்கொண்டமூலைஇந்த மூலை-பெண்ணே—சனக

௭. எதிர்தரும்ராவணன்கையில்பழமைபாராட்டிஉன்னால்
இறந்ததந்தைக்கிக்கேசமஸ் காரம்
சதிர்செய்முன்றவருநூம் ராமஇருக்கதம்பிசெய்த
சாலைஇதுபஞ்சவடி தீரம்-பெண்ணே-சனக

௮. இவிடம்மாரீசன்பட்டதிவிடம்சூர்ப்பநகிகெட்ட
திவிடம்கரதூஷணர்வீ காரம்
இவிடம்கோதாவிரி அன்னை இவ்விடம்தம்பிகண்டதென்னை
இவிடம்உன்னைராவணன்செய் யோசம்- பெண்ணே—சனக



௯. கனித்துநீபுலம்புமாள் உனமீயித்தமஉயிர்விடும்
சடாயுவனமிது அவன்என் சாமி
அமித்தியம்இல்லா அகஸ்தியமுனிஎனக்குப்படைகொடுத்தஇடம்
அதிவைபோசதல்லேபுண்ணிய காமி-பெண்ணே—சனக

௰. இதுசுதிக்ஷ்ணமுனிவனம் இதுதண்டகாரணியம்
இதுவேமுனிவர்கட்குமி வாசம்
இதுசரபங்கமுனி தேவியுடன்முத்திபெற்ற
இடம்இது அதிசயி காசம்-பெண்ணே—சனக

௰௧. இங்கேவிராதனைக்கொல்லத் தேவன்ஆகினனைப்போற்றி
எதிரான் அல்லவோவானின மீதே
தங்கம்பனிஉனக்கனு ஆயைதானை அத்திரி
தபவோடசரித்தஸ்தலம் ஈதேபெண்ணே—சனக

௰௨. கன்றுபிரிந்தமகப்போல் கன்பிரியப்பரதனைக்கு
கண்டமலைஇதுசித்திர கூடம்
அன்றினையவசெந்ன்ன ஏறிவந்தமுனைஇறங்
கடையாளம்பார்குகன்இலாலச்செய் ஓடம்-பெண்ணே—சனக

௰௩. சர்வமுவருநூம் கமைமலரும்வழிநோக்கி
இருக்கும்பரத்துவனுச்சிரம காவி
கார்ஏறுகுகன்காக்கும் கங்கைஇதுகமைமுங்காள்
கரைஏற்றிவிட்டதிந்தத் தோணி-பெண்ணே—சனக

௰௪. சீலம்உள்ளதந்தையர்க்கு என்றும்நீரும்நான்இறைத்த
தீர்த்தம்இதுகங்கைநதி நேத்தி
மூலமுதல்ப்பொருள்இருக்கும் ஆலிலையைப்போலஇதோ
முன்காணுமகரமது யோத்தி-பெண்ணே—சனக

—oooooooooo—

ஸ்ரீராமர்வரஇல்லையென்றுபரதர்புலம்பல்,

விருத்தம்.

உரத்தாலேஇந்தவிதமஉரைத்தராமன்
உடன்வருமசேனையுமதாறுமாரத்துவாசன்
வரச்சாலையினில்புகுந்தான் அயோத்திதன்னில்
மாருதியை அனுப்ப அவன்வருமபோநிங்கே
தரத்தாலேஎனக்குரைத்தநாள் ஆச்சையோ
சாமிவருவானோவாரானோஇன்னம
வரக்காணேனென்என் ஆவிவைக்கேனென்று
வாடிவாள்பரதன்கொக்குநேடுவானே.

௭௭-நியதை-பூபாளராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. பதினாலுவருஷம்போய்ப் பரதாகான் அருமேறேன்
பாரடாளன்றுபடித்தப் பூமி
பதினாலுவருஷத்துக் குள்ளேவருவது
பதினாலும்போயோஎன் சாமி-ராமராமா

௨. உன்பட்டனாரமவாக் கொண்டோரண்டோஎன்தன்
ஊழ்வினைப்பயன் இது தானோ
மண்டெயிலேஎழுதியபிரால்மறைத்துவைத்த
மலாயன்கபடறி வேனோ-ராமராமா

௩. முக்கியமாதுகையே எல்லாத்தெய்வமுமென்று
முன்னாளிலக்கட்டளை இட் டாயே
தெற்குத்திசையேஎலலாத் திசையும்ஆர்என்றென்னைத்
திசைமயாத்துத்திசைக்கவிட் டாயே-ராமராமா

௪. வருவானென்சாமிஎன்னைப்பிரியாதேனென்றுநெஞ்சை
மடக்கமடக்கமடங் காதே
இருபாதமன்றுசொல்லும் கனாகண்டால்அலரமல
என்கண்ணீர்வெள்ளமடங் காதே-ராமராமா

௫. உருசிறுதாய்மார்க்கும் ஊர்க்குமெனக்குமசொன்ன
ஒருவினைக்காலனைகண் மீதே
வருமவிதிஇவத்தென்றுல பதிமவிதிவிடவேனும்
மாட்டோமென்றும விடாதே-ராமராமா

௬. அண்ணன்ஆம்என்சொலலை சத்துருக்கனுமகேளாமல்
அரசாளமனமகிழ் ந்தேனே
அண்ணன் அழைத்துப்போனலட்சுமணனைபோல்என்னையும்
அழைத்துப்போகடன்கி ருனே-ராமராமா

௭. பூமிநெருப்பிலவிழும விழவேண்டாம்என்றொரு
புத்திமதிசொலலநில் லாயோ
சாமிபின்போன்நெஞ்சே வருவாரோ
சற்றேநீவந்துசொல லாயோ-ராமராமா

௮. பொடித்தவனம்தனிலே எனருடன்சண்டையோ
புரோகிதரேசொல்லிரா ரோ
கடிப்பைபிள்ப்போனதும்அடிப்படாமல்த்திருமபும்
காமகன்வாரத்தை ஏதோ-ராமராமா



௯. பருவங்கள்பதினாலும் தவம்செய்தென்னகண்டேன்
படைத்தேனேஇந்தஅப வாதம்
பெருமான்சென்றவழியில் புல்லாய்முளைத்தாலும்
பெறலாமெனுண்டவன் பாதம்-ராமராமா

௰. அரசனையும்காணேன் அரசுக்கரசாகின்ற
அண்ணனையும்காணேன் நானெம் மாத்திரம்
பாதம்என்றயேனைப் பதமென்றுசொல்லலாம்.
பாவிநான்அதற்கலலோ பாத்திரம்-ராமராமா

## சத்துருக்கர் அரசாட்சிக்கு உடன்படாமை.

விருத்தம்.

பரதனிக்கவிதம்புலம்பிச் சாமிதெரிசனம்காணாப் பாவியேனே, சாதம்இனித்தியம்பாய்வேன் உலகாள்வாய் சத்துருக்கா தம்பிஎன்று ன், விரவியகாதினிலதுபோய் நெருப்பாகச்சுட அவனும் விழ்ந்துசோ ர்ந்தான், காகம்அன்றோஉனக்குப்பின் நிலம்என்றான் எனக்கென்னக லையன்றானே.

௭௮-தரு-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

இதற்கோநான்ஆளானேன்-இதற்கோஅண்ணாவே

அநுபல்லவி.

சதிக்குள்சத்துருக்கனை வாஎன்றழைத்திட்டாயே
சாமிபாதனென்னைக் கைகழுவிவிட்டாயே—இதற்

சரணங்கள்,

௧. பூமிஆளச்சொல்லி என்னைத்தானே-விட்டுப்
போனால்என்ஆருமோ சோமானே
ராமன்முகம்உன் முகமும்கண்டுகானே
கண்டாட்டிலவட்டின குட்டிபோலஆனேனே—இதற்

௨. ஒருவன்கானகத்தில ஏகவும்-அவன்
உடன்ஒருதம்பிதுணை போகவும்
ஒருதம்பிஆனநீ நெருப்பிலேமூழ்கவும்
ஒருதம்பிஎன்உயிர் வல்லுயிர்ஆகவும்—இதற்

௩. எனக்குமாத்திரம்உடல் கெட்டியோ-உன்பின்
இருந்தலகாளவிட்டால் கஷ்டியோ
உனக்குப்பின்வாராமல் எனக்கொருவெட்டியோ
உன்உயிரிலும்என்தன் உயிர்கரும்பட்டியோ—இதற்

## அக்கினியில் விழுந்த பரதனைக் கௌசலை அம்மன் தடுத்துக் கூறுதல்.

விருத்தம்,

வாடி இவ்வாறழுத தம்பிக் கிரங்கான் நான்போய்
மாள்வேன் எனில் இவன் புவியை ஆள்வன் என்று
கூடிய மந்திரிமாரும் ஊர் உள்ளாரும்
குலைந்தலைப்ப பரதன் தீ வளர்க்கச் சொன்னான்
நாடியதோர் கௌசலையும் கேட்டு வந்தாள்
கண்மகனே மகனே என் செய்வேன் என்றே
ஓடி அவன் கையிணையைப் பிடித்தாள் புத்தி
உரைக்கின்றாள் மகன் மனதைக் கரைக்கின்றாளே.

௯௰-தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்,

பல்லவி,

என்னை நினைந்தாய் மாதா-என்னை நினைந்தாயே |

அநுபல்லவி

அன்னை எனும் கௌசலையை-அகல விட்டிடுநீயே—என்

சரணங்கள்,

௧, முன்மகன் ஆகிய ராமன் முகம் பாராக்கவலை எல்லாம்
உன் முகத்தைக் கண்டு நீங்கி உளம் குளிர்ந்தேன் மகனே
நின் முகமும் காட்டாமல் நெருப்பின் முகம் நீ பார்த்தால்
என் முகத்தைப் பார்க்கும் முகம் எந்த முகம் மகனே—என்

௨, எத்தனை ராமரும் உனக் கிணை ஆவரோ நீ போனால்
செத்துலகம் போம் என அ சீவனும் போம் மகனே
பெற்ற மனம் பித்தென்னும் பிள்ளை மனம் கல் என்றும்
சுற்றிலும் சொல்கிறபடி துணிந்தாயோ ராமகனே—என்

௩, இதம் கொண்ட ராமன் வர விதோ அதோ வென்றிருக்க நீ
மதம் கொண்டால் போல் உயிரை மாய்க்கல் ஆமோ மகனே
சுதந்தர மாதவம் செய்தும் சுகம் தக்கினதும் அல்ல
விரதம் தக்கினதும் அல்ல வேண்டாம் அடா மகனே—என்

## பரதர் கௌசலை அம்மனோடு முறையிட்டு இரங்கல்.

கொச்சகம்,

மன்னி இது தாய் சொல்லப் பரதன் சரோம் ஆண்டும் அண்ணன்
சொன்னபடி காத்திருக்கும் சுபயி தெரிசனம் சுதனை



பின்னை எனக்கார் இருந்தென் ஆர் போய் என் நெருக்கீயின்
என் உயிரை விடுவேன் என்றழுவான் சொல்லி மொழிவானே.

௯௧-தரு-சௌக்தவிராகம் திரிபுடைதாளம்,

பல்லவி.

இனி நான் இருக்கல் ஆமோ தாயே

அநுபல்லவி.

அநியாயத்தில் அய்யனுக் காராமல் போமே—இனி

சரணங்கள்,

௧. மறுவில்லா வரம் கொண்டேன் நானே-அண்ணனை
வழி பார்த்துப் போகச் செய்தன் விழியும் பூத்தேனே
சிறுபிள்ளைப் பருவம் கான் தானே-இதிலே
சிறகு பறி கொடுத்த பறவை ஆய்ப் போனேனே—இனி

௨. வருத்தம் அறியான் சாமி கொஞ்சம்-அறிந்தால்
வாராமல் இருப்பானோ எனக்குண் போதஞ்சம்
நெருக்கு கேதவலைப்பிர பஞ்சம்-என்னை
நெருப்பிலே போட்டாலும் வேமோ என் நெஞ்சம்—இனி

௩. அரசனுக்கு தவாமல் கெடுத்தேன்-அண்ணன்
அருமந்த முடிக்கும் சான் சடைமுடி கொடுத்தேன்
தருமத்துரையைக் காட்டில் விடுத்தேன்-பாதன்
சாபித்துரோகி என்றே எங்கும் பேர் எடுத்தேன்—இனி

௪. அய்யர் ஆண்ணை சொல்லலே காமல்-சேட்க
அளிக்கத் தக்கவன் இரு வுளத்துக்கு ஆகாமல்
செய்தேன் வெகுகுற்றம் போ காமல்-பல
நீட்டுக்கு முழுக்கொன்று நெருப்பில் மூழ்காமல்—இனி

## ஸ்ரீராமர் வரவை அனுமார் பரதருக்குக் கூறல்.

விருத்தம்.

நந்தாய் கௌசலை வந்தாளொடு பரதன் பாடுகள் இலைமுன் கூவி
சொந்தார் அனலை வலம் சூழ் பொழுது சூழ்ந்தாய் குழியில் அமிழ்ந்தாதே
அந்தோ பொறு பொறு பைந்த பொறு பொறு அன் பால் உனது முகம் தே
ந்தா ராகு பதி வந்தான் என அனுமன் தான் இங்கணைந்தானே, [பு-

௧௨-தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு,

பல்லவி,

வந்தான்வந்தான்பரதா-ரகுராமன்-வந்தான்வந்தான்பரதா

அநுபல்லவி,

வந்தான்வந்தான்மோதிரம் தந்தான்தந்தான்கைமேல
இந்தாஇந்தாநதியினில் முந்தாதேமுந்தாதே—வந்

சரணங்கள்.

௧. நாயகன்சொல்மறந்தாய் அண்ணனென்று பேயனைப்போல்மறந்தாய்
தாயனையும்துறந்தாய்பழிபோட நீஇதற்கோபிறந்தாய்
சேயின்முகம்பார்க்கும் தாயின்முகம்போல
சாயும்பூவுக்குச் சாயும்நிழல்போல
தீயும்பயிருக்குப் பெய்யும்மழைபோல
மாயன்கஜேந்திரனுக் காய்வந்ததுபோல—வந்

௨. பொருக்காதபுத்திதந்தாய்ஆலைவாயில்கரும்புபோல்மெத்தநைந்தா
ய், துரும்புபோல்வற்றுகொந்தாய்வீழ்வேனென்றுபெருந்தீயைச்சுற்றி
அரும்பதினால்ஆண்டும் ஆச்சென்றதினாலே [வந்தாய்
வருந்தும்தம்பிமடி வானென்றெரிகாலே
பரிக்கிதோசித்திர கூடத்துக்கிப்பாலே
பிரிந்தகன்றைத்தேடித் திரும்பும்பசுவைப்போலே—வந்

௩. தீமைவினைகள் மண்டி-இராவணைப் பாமரன்ஆவிஉண்டு
சேமலஞ்சேனை கொண்டு-பரத்துவாச மாமுனிபூசைகண்டு
சாமிரகுகுல சோமன்இதோவந்தான்
பூமகள்சனகி வாமன்இதோவந்தான்
ஓம்மென்னும்ஆயிர நாமன்இதோவந்தான்
நீமறவாது ராமன்இதோவந்தான்—வந்

---

## பரதர் அனுமாருக்கு சங்கிரகராமாயணம் கூறல்.

சந்தவிருத்தம்,

இந்தவாறனுமந்தன்ஓதி இதெம்கைமோதிரம்ஈய்ந்திடவே
சந்தமாமுடிகொண்டதோர்பரதன்கனாவளர்ந்தனன்
உன்தனோடுபிரிந்துராமன்ஒழிந்ததும்பின்நடந்ததும்
வந்தவாறும்அறிந்திடென்றுருமாதிறன்இவைகூறினான்,

௧௩-தரு-கலியாணிராகம்-அடதாளசாப்பு,

பல்லவி,

பரதமகாராசனேகேளாய்-ராமன்சேதி-பரதமகாராசனேகேளாய்



அநுபல்லவி.

இராமலாலியசித்திர கூடத்திலேமுன்னே
திருவடிகள்நீகொண்டு போகியஅதின்பின்னே
இருபதிதண்டகவ னத்தில்அடிநீட்டினன்
ராட்சதவிராதனை உபேசைஅபறமாட்டினன்—பரத.

சரணங்கள்.

௧. அந்தமுனிவர்க்கபயம் ஈய்ந்தான்-பிறகு
அகஸ்தியமுனிஆசிரம் சேர்ந்தான்-அவன்
தந்தபடைமுழுவதும் கொண்டான்-வந்து
சனகியொடுபஞ்சவடி கண்டான்
வந்தசூர்ப்பநகையவள் வாதாடும்காளிலே
வள்ளல்இளையவன்அங்கை மீதாடும்வாளிலே
கத்தமூலையும்செவியும் நாசியும்அறுக்கிறான்
கரதூஷணரையும்அவ ளாலேகொறுக்கிறான்—பரத

௨. பின்னுகமாயைமார விடவே-அதின்
பிறகுகனைஒன்றில்அற படவே-ஒரு
சன்னுசிராவணன் அடுத்தான்-சீதை
தன்னைநிலமங்கையோ டெடுத்தான்
அங்கிலேயிலேவருச டாயுவைவருத்தினன்
அம்மனைஅசோகவன காவலில்இருத்தினன்
கன்னிகைதனைச்சாமி தேடிமனதேங்கினன்
கழுகராசனைக்கண்டு கவந்தன உயிர்வாங்கினன்—பரத

௩. சவரிசொல்லியவழி நடந்தான்-என்
தனைஅடிமைகொளவே தொடர்ந்தான்-பின்;
கவுனமரங்கள்துணி செய்தான்-அந்த
காலனவாலியையும்விழ எய்தனன்
அவனியைச்சுக்கிரீவ னுக்குதவிமீளவும்
அடியேன்அறிந்தம்மை நிலைகண்டுமீளவும்
தவம்உளவிபீஷணர்க் கபயம்கொடுத்தனன்
சாமிதிருவணைஒன்று கடலமேல்எடுத்தனன்—பரத

௪. பண்டைலங்கையின்மதில் பிடித்தான்-எழு
பதுவெள்ளமும்கொண் டடித்தான்-வெரு
கண்டகஅரக்கரை மடித்தான்-மயிர்க்
களையெடுத்ததுபோல் எடுத்தான்
அண்டர்பணிதம்பியும்கெ டுங்கணைகள்தாக்கினன்
அதிகாயனையும்இந்த சித்தையும்மண்ஆக்கினன்

கொண்டல்மணிவண்ணனும் — சிலகணைதொடுக்கின்றான்
கும்பகர்ணனையுமா — வணையும் ஒடுக்கினான்—மாத

௩. மதிநுதல்சீதைதனை — உற்றான்-அங்கே
வந்ததசரதன்வரம் — பெற்றான்-தனது
மதியில்வரவேண்டும் — மதித்தான்-புஷ்ப
மகமிதில்சேவடி — பதித்தான
எதிர்மடும்காடும்கா — டும்கண்டுகொண்டினான்
இமையவர்புரந்தரா — திகள்புகழவேண்டினான்
அதிமுனிபாரத்துவாசன — ஆசிரமமமேவினான்
அதற்குமுன்உனைக்காண — அடியேனைஏவினான்—மாத

## ஸ்ரீராமர் அநுமாரை உடனுண்ண வேண்டுதல்.

விருத்தம்,

சீதையுடன் அநுமன் இதுசொன்னான் இந்த
விசேஷம்வந்துசாமிஉனக்கருள்வானென்றான்
மோதரவப்பாரத்துவாசன்மடத்திற்பூர்வ
யோசனவேளையில்போய்ராகவனைக்கண்டான்
பாதமலர்வணங்கினான்பரதன்தன்னைப்
பார்த்ததும்கார்த்ததும்சொன்னான் அப்போதையன்
காதலனே அநுமானேநீயேஎன்தன்
கண்ணென்றான்என்னுடன்வாஉண்ணென்றானே.

௩௫-தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

வாவா அநுமானே-என்னுடன் உண்ண-வாவா சீமானே

அநுபல்லவி,

சேவைம்இல்லாமல் — பரதனையும்தேற
தேற்றிஎனக்குவந்து — சொன்னஉன்இளைப்பாற—வாவா

சரணங்கள்,

௧. அங்கேபிரம்மாஸ்திரத்தால் விழுந்ததம்பிபிழைக்க
அமுர்தமருந்துதேடிக் — கொடுத்தாயே
இங்கேஅக்கினியில் விழுந்ததம்பிபிழைக்க
என்வரத்தைச்சொல்லித்தாங்கி — எடுத்தாயே
சங்கடவேதனைகள் வந்தேதுவந்தாலும்
தலையிட்டுக்கொண்டுதீர்க்கத் — தொடுத்தாயே



ஓங்கும்இருப்புக்கோட்டையும்கல்க்கதவுமே
மோலஎங்களைக்காக்க — வாலாயம் அடுத்தாயே—வாவா

௨. மூட்டியதுநீபோய் அரக்கரைக்கொன்றரத்தம்
போச்சிலேயோஇன்னமலவ — சையில்சாம்
வாட்டம்இல்லாமல்சீதை தனையும்தந்தாய்நல்ல
வாழ்வுமதந்தாய்எனக் — குபகாரம்
கூட்டத்திலென்ன படையிலும்ஒருத்தன்
கொடையிலும்ஒருத்தனஉன் — னதேவீரம்
தாஷ்டிகத்தம்பிமார்க்கும் தாய்மார்க்குமெனைப்பெற்றோர்
தனக்கும்உனக்குமகான் — சொல்வதேன்உபசாரம்—வாவா

௩. சுக்கிரீவனுக்கும்வி பீஷணனுக்கும்தங்கள்
துரைத்தனமேலாசை — எந்தாயே
எக்காலமும்உன்தன் ஆசைஎன்காரியத்தில்
எங்கெங்கும்போய்ச்சுற்றி — கொந்தாயே
விக்கிரமம்நீசெய்து வருகையாலேநாங்கள்
விருந்துமிருந்துண்ணத் — தந்தாயே
சர்க்கரைப்பந்தலிலே தேன்மாரிபொழிந்தாற்போல
சந்தோஷவார்த்தைகொண்டு சமையத்திலவந்தாயே—வாவா

## ஸ்ரீராமர் பரத்துவாசர்செய்த விருந்துண்டல்.

விருத்தம்,

சுந்தரன்ஆம்ராமச்சந்திரன் இந்தவிதம்உபசாரம்சொல்லச்சொல்ல
வந்தஅநுமான்ஒடுங்கிவணங்கினான்எல்லாரும்மகிழ்ந்தேஉண்ணப்
பந்தியிருந்தார்அநுமான்பரதனையேஅடிக்கடிக்குப்படித்துப்பேச
அந்தஉரைசெவிக்கமுதாவிருந்தமுதுதிருந்தினான்அருந்தினானே,

௩௬-தரு-தோடிராகம்-ஆதிதாளம்,

பல்லவி,

உண்டானேராமன் பாத்துவாசன்செய்தவிருந்
துண்டேஆனந்தம் கொண்டானே.

அநுபல்லவி,

வண்டார்குழல்சீ — தையும்இளங்கோனும்
வானரேசனும்வி — பீஷணவீரனும்
கொண்டனேஅருந்த — கண்டுமனந்திருந்த
அண்டமெல்லாம்இருந்த — பண்டியிலேபொருந்த—உண்

சரணங்கள்.

௪. ஓங்கியபொன்னுலக தந்தியிலப்பெண்கள்
  ஓடிக்கொண்டுவந்து வழங்கவும்
